வெளியீடு: 08-4-2008 Issued: 08-4-08

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
1282
27-08-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஜனவரி 28, 2008—தொகுதி 39—எண் 2**

**Monday, the 28th January, 2008 Volume 39 No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

**28–1–2008**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 567-568 |
| **2. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 568-598 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 598-599 |
| (ஆ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. திருமாவளவன் மாநாடு ஒன்றில் உரையாற்றியுள்ளது | 599-601 |
| திரு. சி. ஞானசேகரன் | 599-600 |
| *மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 600-601 |
| **4. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுதல் | 601-614 |
| திரு. டி. ஜெயக்குமார் | 601-603 |
| திரு. சி. ஞானசேகரன் | 604 |
| திரு. ஜி.கே. மணி | 605-606 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 606-607 |
| *திரு. தி. இராமசாமி | 607-608 |
| *திரு. சி. கோவிந்தசாமி | 608 |
| திரு. கு. செல்வம் | 608-609 |
| *மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 609-614 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 614 |
| (ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு | 615 |
| **6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 615-703 |
| திரு. துரை சந்திரசேகரன் | 615-622 |
| *திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி | 622-624, 629-631, 632-636 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 635-636, 638-644, 646,648 |
| திரு. மா. ராஜசேகரன் | 648-658 |
| திரு. தி. வேல்முருகன் | 658-671 |
| *திரு. கே. மகேந்திரன் | 671-677 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 684-691 |
| திரு. க. சுந்தர் | 691-695 |
| திருமதி செல்வி ராமஜெயம் | 695-698, 700-702 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 703-704 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, தை 14

## 2008 ஜனவரி 28, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் அமைச்சரும், சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினருமான திரு. யா.சை.மு. யூசுப் அவர்கள் 25-1-2008 அன்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் 26-1-2008 அன்றும் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. த. பொன்முடி அவர்கள் 27-1-2008 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. யூசுப் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 3-8-1983 முதல் 31-10-1986 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, 9-9-1983 முதல் 15-11-1984 வரையிலும், 14-2-1985 முதல் 21-10-1986 வரையிலும் தமிழக அமைச்சராகவும் செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2008 ஜனவரி 28

திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் முந்தைய தென்னாற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 1967 முதல் 1971 வரை, 1977 முதல் 1980 வரை மற்றும் 1989 முதல் 1991 வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. த. பொன்முடி அவர்கள், முந்தைய வடாற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகத் திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### ஒகேனக்கல் மின் திட்டம்

***1681—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் மின் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

228095
சென்னை-600 008



2008 ஜனவரி 28]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மைய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய நீர் மின் குழுமம், காவிரி புனல் மின் திட்டத்தின் பகுதி-I-ன்கீழ் ஒகேனக்கல்லில், புனல் மின் திட்டம் அமைக்க உத்தேசித்துள்ளது. காவிரி புனல் மின் திட்டம் பகுதி-I, கீழ்க்கண்ட புனல் மின் திட்டங்களை உள்ளடக்கியது:

(i) சிவசமுத்திரம் புனல் மின் திட்டம் (270 மெகா வாட்) – கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தது.

(ii) ஒகேனக்கல் புனல் மின் திட்டம் (120 மெகா வாட்) – தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்தது.

மேற்கண்ட காவிரி புனல் மின் திட்டம் பகுதி-I புனல் மின் திட்டங்களின் வரைவு ஒப்பந்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

முற்பகல் 9–35

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959, 1960 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட திட்டம் ஒகேனக்கல் புனல் மின் திட்டம். ஆனால், இவ்வளவு ஆண்டுக்காலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் உள்ளதனுடைய காரணம் என்ன? தற்போது தமிழகத்திலே மின் தட்டுப்பாடு அதிகரித்துள்ள சூழ்நிலையில், அதைப் போக்குவதற்கு இதுபோன்ற புனல் மின் திட்டங்கள் கொண்டுவந்தால் உபரியாக மின்சாரம் தமிழகத்திலே கிடைக்கும். கடந்த காலங்களில் இருந்த சூழ்நிலைகளெல்லாம் மாறி தற்போது புதிய மின் திட்டங்கள் கொண்டுவருகின்ற சூழ்நிலையில், ஒகேனக்கல் மின் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல

[2008 ஜனவரி 28

இந்தத் திட்டம் 1959-1960-லே தொடங்கப்படவில்லை. முதன்முதலாக 1965 ஆம் ஆண்டிலேதான் இந்தத் திட்டமே தீட்டப்பட்டது. அதற்குப் பிறகு 1998 ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வற்புறுத்தலுக்கேற்ப மைய அரசினுடைய எரிசக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி கர்நாடக மாநிலத்திலுள்ள சிவசமுத்திரத்திற்கும், தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் அணைக்கும் இடைப்பட்டுள்ள பகுதியில் உள்ள காவிரி ஆற்றில் புனல் மின் நிலையம் உருவாக்குவதற்கான காவிரி நீர் மின் திட்டம் இந்திய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய நீர் மின் திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதிகாரிகள் மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள், காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டதற்குப் பிறகு இதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பிறகு இங்கு மின் அமைச்சராக இருந்த நானும், கர்நாடக மின் துறை அமைச்சரும் கலந்துபேசி ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தலாம் என்று மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் தலைமையில் முதல் ' கட்டப் பேச்சுவார்த்தை நடத்தினோம். அப்போது அவர்கள், அவர்களுடைய மாநிலத்திலே சிவசமுத்திரத்திலே உருவாக்கக்கூடிய 270 மெகா வாட்டும், ஓகேனக்கல் புனல் மின் திட்டத்திலே உருவாக்கக்கூடிய 120 மெகா வாட்டும், ஆக 390 மெகா வாட் மின்சாரமும் அவர்களுக்கே வேண்டுமென்று கேட்டார்கள். அது நியாயம் இல்லை, பாதி பாதியாக எடுத்துக்கொள்ளலாம் என்று தமிழக அரசின் சார்பிலே கருத்துச் சொன்னோம். இதுகுறித்து இன்னும் ஒரு இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. அடுத்த கூட்டம் நடைபெறும்போது இதுகுறித்து மத்திய அரசாங்கம் ஒரு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓகேனக்கல் நீர் மின் திட்டம், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே சொல்லப்பட்டு, இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலே முயற்சி எடுக்கப்பட்டு, இதுவரையிலே நிலுவையிலே இருக்கிற மிகப் பெரிய திட்டம். கடந்த காலத்திலே நாங்கள்கூட மூன்று ஆட்சிகள் மாறிமாறி வருகின்றபோதெல்லாம் இதை சட்டமன்றத்திலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மின் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிற



2008 ஜனவரி 28]

இந்த வேளையில், பல்வேறு முயற்சிகளை எடுத்து, மின் உற்பத்திக்கான திட்டங்களைத் தீட்டுகின்ற இந்த நேரத்தில், ஓகேனக்கல் நீர் மின் திட்டத்தை முயற்சி எடுத்து கொண்டுவருவது சாத்தியமாக இருக்கும். இங்கே அன்று மின் துறை அமைச்சராக இருந்த நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லிவிட்டு, முன்னாள் நடுவணரசின் எரிசக்தித் துறை அமைச்சர்களாக இருந்த மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம், அடுத்து திரு. பி.எம். சையீது அவர்கள், அதற்கு அடுத்து வந்த மாண்புமிகு சுசில்குமார் ஷிண்டே அவர்களிடத்தில் எல்லாம் நாங்கள் தொடர்புகொண்டு நடுவணரசை வலியுறுத்தினோம். கர்நாடக முதலமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களிடத்திலேகூட நாங்கள் தொடர்புகொண்டு பேசினோம் நேரடியாகச் சென்று. அப்போது நடுவணரசின் அமைச்சர்களாக இருந்தவர்கள், கர்நாடக முதலமைச்சராக இருந்தவர்கள், தமிழ்நாடு அரசை முயற்சி எடுக்கச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். கர்நாடகத்தில் அவர்கள் மின்சாரம் அதிகமாகக் கேட்டது உண்மை. மாண்புமிகு நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அதிகளவு தங்களுக்கு வேண்டுமென்று கேட்டார்கள். நடுவணரசு அமைச்சர் அவர்கள், நடுவணரசு தொகுப்பிற்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு கொடுத்துவிட்டு, இரண்டு மாநிலங்களும், தமிழக அரசும், கர்நாடக அரசும் சரி பாதி பகிர்ந்துகொள்வது பொருத்தமாக இருக்கும் என்ற ஒரு நல்ல யோசனையைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அந்த அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நடுவணரசு நமக்கு நெருக்கமாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், முயற்சி எடுத்தால் இது கட்டாயம் சாத்தியமாகும். இதனால் வேலைவாய்ப்பு பெருகும், மின் உற்பத்தி பெருகும்.

முற்பகல் 9-40

சிவசமுத்திரத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். சிவசமுத்திரத்திலே அந்தத் திட்டம், அடுத்து ஒரு திட்டம் என 3 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. சிவசமுத்திரத்தை மட்டும் அவர்கள் எடுத்துக் கொண்டால் நமக்கு வாய்ப்பே இல்லாமல் அவர்கள் மட்டுமே முழுவதுமாக எடுத்துக்கொள்வதாகச் சொல்வார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டு தமிழக அரசு விரைவான

[2008 ஜனவரி 28

நடவடிக்கை எடுத்து, ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நடப்பாண்டிலே கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற திட்டங்களிலேயே நீர் மின் திட்டம்தான் மலிவாக மின்சாரம் கிடைக்கக்கூடிய திட்டம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அந்தத் திட்டத்திலே சிவசமுத்திரம் திட்டத்தை மட்டும் அவர்கள் குறிப்பிடவில்லை.

காவிரி நீர்ப் பிரச்சினையிலே மொத்தம் 1,150 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்கு சிவசமுத்திரம் புனல் மின் திட்டத்திலே 270 மெகா வாட், மேகதாது புனல் மின் திட்டத்திலே 400 மெகா வாட், தமிழ்நாட்டிலே ராசிமணல் புனல் மின் திட்டத்திலே 360 மெகா வாட், ஒகேனக்கல்லிலே 120 மெகா வாட், ஆக இங்கே 1,150 மெகா வாட் மின்சாரம் கிடைக்குமானால் இரண்டு மாநிலங்களுக்கும் இன்றுள்ள சூழ்நிலையிலே போதுமான அளவுக்கு மின் திட்டத்திலே மின்சாரம் கிடைக்கும். ஆனால், அதிகமாக பற்றாக்குறை இருக்கக்கூடிய கர்நாடக மாநிலத்திலேயே அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களிடத்திலே 2, 3 முறை நானே பேசினேன். அவர்களும் மத்திய அமைச்சரிடத்திலே பேசினார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் காவிரி நீர்ப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்தால்தான் இதுகுறித்துப் பேசலாம் என்று சொல்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய செலவை நம்முடைய அரசாங்கமோ அல்லது கர்நாடக அரசாங்கமோ செய்யப் போவதில்லை. National Hydro Power Corporation-தான் செய்யப் போகிறது. அதிலே தமிழ்நாடும் குறுக்கிட முடியாது, கர்நாடகாவும் குறுக்கிட முடியாது. அவர்கள் சொல்வதெல்லாம் இந்தத் திட்டங்களை நாங்களே அமல்படுத்துகிறோம், அவற்றிற்கான செலவு முழுவதையும் மத்திய அரசாங்கமே செய்யும். எவ்வளவு சதவிகிதம் தமிழ்நாட்டுக்கு மின்சாரம் கொடுப்பது, எவ்வளவு சதவிகிதம் கர்நாடக மாநிலத்திற்கு மின்சாரம் கொடுப்பது என்பதை மட்டும் முடிவு செய்யலாம் என்று இதுவரையிலே உட்கார்ந்து 3, 4 முறை அரசு அதிகாரிகள் மட்டத்திலே பேசியும், அமைச்சர்கள் மட்டத்திலே பேசியும் முடிவு எட்டப்படவில்லை. அடுத்த மாதம் இரண்டு மாநிலங்களினுடைய அமைச்சர்களும் பேசுவதற்கு மத்திய அமைச்சர் ஏற்பாடு செய்திருக்கிறார். மறுபடியும் பேசிப் பார்க்கிறோம்.



2008 ஜனவரி 28]

சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் இரண்டு மாநிலங்களுக்கும் இதனாலே நன்மை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளை எல்லாம் தேசியமயமாக்கினால்தான் நதிநீர்ப் பிரச்சினை தீரும் என்ற நிலையில் தமிழக அரசின் சார்பாக ஆளுநர் உரையில் தமிழ்நாட்டிலாவது அதை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விட்டிருக்கிற இந்த நேரத்திலே, இப்படிப்பட்ட மின் திட்டங்களை உருவாக்குவதற்கு இரு மாநிலங்களிடையே பிரச்சினை இருக்கிற காரணத்தினால் மின் உற்பத்தி செய்வதற்காவது குறைந்தபட்சம் உடனடியாக மத்திய அரசை வலியுறுத்தி இரு மாநிலப் பிரச்சினை இல்லாமல் எந்தெந்த மாநிலத்தில் நதிகள் ஓடுகின்றனவோ அந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் அந்த மாநிலத்திற்கு மட்டும் உரியது என்ற நிலையை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் இதுவரையிலே சொல்லிக் கொண்டிருந்தேன். நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய இரண்டு மின் திட்டங்களில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை நாம் பயன்படுத்திக்கொள்வோம். அவர்கள் மாநிலத்திலே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளட்டும் என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டது. ஆனால், எதற்கும் அவர்கள் நம்மோடு ஒத்துவரவில்லை. எல்லா மின்சாரமும் முதலிலே அவர்களுக்கே வேண்டும் என்று கேட்டார்கள். பிறகு இரு மாநிலத்திற்கும் 50, 50 சதவிகிதம் என்ற அளவுக்காவது கொடுக்க முடியுமா என்று கேட்டோம். அதற்கும் அவர்கள் மறுக்கிறார்கள். மொத்தத்திலே காவிரி நீர்ப் பகுதிகளிலே உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் முழுவதுமே கர்நாடக மாநிலத்திற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் எந்த முடிவும் எடுக்காமல் இருக்கிற காரணத்தினால் இப்போதுவரையிலே இந்தப்

பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அடுத்த மாதம் நடக்கின்ற கூட்டத்திலே ஏதாவது ஒரு முடிவு எடுக்கப்படும் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மின்சாரத் தட்டுப்பாடு தமிழகம் முழுவதும் பரவலாக இருந்து வருகின்ற ஒரு சூழ்நிலையில் மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகளுடைய கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் எந்த அளவிலே இருக்கிறது? அதுகுறித்து அரசு ஏதாவது புதிய திட்டம் வைத்திருக்கிறதா? அதன்மூலம் மின்சாரம் தயாரிக்கிற சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக் கழிவுகளிலிருந்து கிடைக்கக்கூடிய குப்பைகளைக் கொண்டு மின்சாரத்தைத் தயாரிக்கலாம் என்ற ஒரு திட்டம் முதன்முதலில் சென்னையிலே தீட்டப்பட்டது. ஆனால், அதற்குத் தேவையான குப்பைகள், அவற்றைக் கொண்டுசெல்லக்கூடிய லாரிகள், அவற்றைக் கொண்டுபோய்க் கொட்டுகின்ற இடம் இவற்றையெல்லாம் பரிசீலிக்கின்ற நேரத்தில், சென்னையிலேயே அந்தத் திட்டத்தைச் சரியாக அமல்படுத்த முடியவில்லை. அப்படியே அமல்படுத்தினாலும் 15 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களிலேயே 15 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கும் என்ற ஒரு சூழ்நிலையில், மற்ற மாநகராட்சிகளில் இதுபற்றியோ, அவர்களது தேவை பற்றியோ அரசுக்குக் கடிதம் வரவில்லை. வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குக்கிராமத்தில் தொடங்கி மாநகராட்சிவரை ஒரு நாளைக்கு 3 மணி நேரம், 2 மணி நேரம் மின் தடை ஏற்படுகிறது. இந்த மின் பற்றாக்குறையைப் போக்குகின்ற வகையில் தனியார்களுக்கு மின் உற்பத்தித் திட்டம் தொடங்குவதற்கு அனுமதி அளிப்பதற்குப் பதிலாக நம்முடைய தமிழக அரசு கடந்த 15 ஆண்டு காலமாக





தூத்துக்குடியில் 1,000, 1,000 மெகா வாட் என்று இரண்டாக, ஒன்று ஒரே இடத்தில் 1,000 மெகா வாட் மின் உற்பத்தி, மற்றொன்று 500, 500 ஆக இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை, அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். நான் கேட்டுவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் தயாராக இருக்கிறார் என்பதல்ல. இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. அதை நான் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்?

**திரு. தி. வேல்முருகன்:** அந்த இரண்டு திட்டங்களையும் தொடங்குவதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அந்த 2,000 மெகா வாட் மின் உற்பத்தி எப்போது தொடங்கும்? தொடங்கி சீரான மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) இதை ஒரு பழக்கமாக வைத்துக்கொள்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்டு, அதை நான் அனுமதித்தால் நாளைக்கு அதேமாதிரி மற்றவர்களும் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## கட்டட வசதி

***5083—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, காளப்பட்டி பேரூராட்சி, வீரியம்பாளையத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 28

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, காளப்பட்டி பேரூராட்சி, வீரியம்பாளையத்தில் நியாயவிலைக் கடை 797 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக காளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணியினை சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதியளித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வீரியம்பாளையம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் சங்கத்திடம் இல்லை. எனவே, இதற்கான இடத்தைத் தேர்வு செய்து அளிக்குமாறு உள்ளாட்சி அமைப்பிடம் கேட்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடை கட்டுவதற்கான இடம் உள்ளாட்சி அமைப்பினால் ஒதுக்கப்படும்பட்சத்தில் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் தொகுதி, காளப்பட்டி பேரூராட்சி, வீரியம்பாளையத்தில் பல வருடங்களாக வாடகைக் கட்டடத்தில் நியாயவிலைக் கடை இயங்கி வருகிறது. அதற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா? வரும் எனில் எப்போது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மூலக் கேள்வியே அதுதான். கட்டித் தாப்படும் என்றுதான் சொல்கின்றேன். எப்படி? நிலம் கொடுத்தால் கட்டித் தாப்படும். நிலம் இல்லாத சங்கத்திற்கு எப்படிக் கட்டடம் கட்ட முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.



2008 ஜனவரி 28]

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்தில் நிலம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கட்டலாம் என்று சொல்கிறார்கள். நாங்களே பணம் கொடுத்துக் கட்டுவதாக இருந்தால் அரசாங்கத்தை நாங்கள் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே, அரசாங்கம் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிதம்பரம் தொகுதி உட்பட தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல இடங்களில் நியாயவிலைக் கடைகள், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அனைத்து வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற நியாயவிலைக் கடைகளுக்கு அரசு சார்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அதற்கு சாத்தியக்கூறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## ஆய்வு மாளிகை

***18783—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதியிலுள்ள அரசினர் இல்லத்தைக் கூடுதல் வசதிகளுடன் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2008 ஜனவரி 28

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூரில் கூடுதல் அறைகளுடன்கூடிய ஆய்வு மாளிகை கட்டுவதற்கான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதி நிலைமைக்கேற்ப செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் அந்த ஆய்வு மாளிகை கட்டப்பட்டது. போதுமான வசதிகள் இல்லாத ஒரு சூழலில் 4 அறைகள் மட்டுமே கொண்ட ஒரு ஆய்வு மாளிகையாக அன்றைக்கு அது கட்டப்பட்டது. அது கடுமையாக பழுதடைந்து இருக்கிற நிலையில் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்கே வருகின்றபோதுகூட அங்கே தங்குவதற்கு ஏற்றதாக அது இல்லை. ஆகவே, இன்றைய தேவையை கவனத்தில்கொண்டு இந்த ஆண்டே அதைக் கட்டித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் 4 அறைகள் இருக்கின்றன. சமையற்கூடம் இருக்கிறது. உணவுக் கூடம் இருக்கிறது. வரவேற்பு அறை இருக்கிறது. இதற்கு மேலே என்ன வசதி வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. சில ரிப்பேர்கள் நடக்க வேண்டுமென்கிறார்; அதை வேண்டுமானால் அரசு செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். சமையற்கூடம் இருக்கிறது. சமையலுக்கு ஆள் இல்லை. ஆய்வு மாளிகை இருக்கிறது. அதற்கான watchmanகூட அங்கே கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக்



2008 ஜனவரி 28]

கொஞ்சம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அங்கேயிருக்கிற கழிவறைகள்கூட முறையாகப் பயன்படுத்துவதற்குரிய வகையில் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. சமீபகாலத்தில் நீங்கள் அங்கெல்லாம் வந்து தங்கவில்லை. ஆகவே, அதனுடைய மோசமான நிலைமை தெரியவில்லையென்று கருதுகிறேன். தயவுசெய்து அதைத் தட்டிக் கழிக்காமல் நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் நகரம் ஏற்கெனவே, நகராட்சியாக இருந்து மாநகராட்சியாக மாறுகிற இந்தச் சூழலில்கூட, ஏற்கெனவே இருந்த நகராட்சியினுடைய ஒரு பயணியர் விடுதியும் இப்போது இயங்குவது இல்லை. அதுவும் வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் வேறு எந்தவொரு பயணியர் விடுதியோ, ஆய்வு மாளிகையோ இல்லாத காரணத்தினால் அதற்கு ஒரு முன்னுரிமை ஏற்றதாக இல்லாத காரணத்தினால் அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து இந்த ஆண்டு அதைத் தாங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு மாளிகை கட்ட வேண்டுமென்பதற்காகவே, இருக்கிற ஆய்வு மாளிகையை இவ்வளவு damage பண்ணக்கூடாது. நாங்கள் போய்த் தங்கியிருக்கிறோம். இப்போது சமீபத்திலே மாநகராட்சியாக்கும்போதுகூட நான் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். ஆகையால், நாங்கள் போனால் அங்கேதான் தங்குகிறோம். ஒருக்கால் அவருடைய status-க்கு அது சரியாகத் தெரியவில்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. நான் ஒத்துக்கொள்கிறேன். சில ரிப்பேர்கள் செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள்; செய்கிறேன் என்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் தொகுதியில் உள்ள அரசினர் இல்லத்தைக் கூடுதல் வசதியுடன் விரிவுபடுத்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் அந்த ஆய்வு மாளிகையில் மேலும் பல அறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டுவதற்கான ஆய்வு அரசின் பரிசிலனையில் இருக்கிறது. அது இந்த ஆண்டு நிதி நிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் இருக்கக்கூடிய அரசு பயணியர் விடுதி போதிய வசதிகள் இல்லாமல் இருக்கிறது. குமரி மாவட்டத்தின் தலைநகரம் நாகர்கோவில். கேரளாவில் இருந்துகூட அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் வந்தால் அங்கே தங்கக்கூடிய நிலை இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இருந்து அமைச்சர் பெருமக்கள் வந்தால்கூட ஒரு நாளைக்கு 2 அமைச்சர்கள் வந்துவிட்டால் தங்குவதற்கு அங்கே வாய்ப்பில்லை. நாகர்கோவிலில் நல்ல இட வசதி இருக்கிறது. எனவே, தயவுசெய்து நாகர்கோவிலில் புதியதாக நம்முடைய பொதுப் பணித் துறை சார்பில் ஒரு பயணியர் விடுதி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் 2 அறைகளைக் கொண்ட ஒரு ஆய்வு மாளிகைதான் இருக்கிறது. அதிகம் பேர் போனால் தங்குவதற்கு வசதிகள் இல்லைதான். எனவே, அதை அரசு கவனத்தில்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில் நீதிமன்றம், கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சிறைச்சாலை என அனைத்து வசதிகள் இருந்தும் ஆய்வு இல்லம் இல்லாமல் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு



2008 ஜனவரி 28]

அமைச்சர் அவர்கள் அரசினர் இல்லத்தை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## மருத்துவ வசதி

***29600—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனையில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு மீண்டும் மருத்துவ வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை (நிலை) எண் 143, போக்குவரத்து (சி1) துறை, நாள் 9-6-2004-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் சிகிச்சைக்கான செலவுத் தொகையை மருத்துவமனைக்கு அவர்களே செலுத்திவிட்டு, பிறகு அவர்கள் பணிபுரியும் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து அத்தொகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் (Reimbursement) நடைமுறையில் உள்ளது. இதன்படி, அரசு மருத்துவமனையில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பெருந்துறை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவமனையில் பணியாளர்கள் மட்டுமின்றி அவரது குடும்பத்தினரும் உள் நோயாளியாகவும்/வெளி நோயாளியாகவும் சிகிச்சை பெற்று அதற்குரிய செலவுத்

[2008 ஜனவரி 28

தொகையினை அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் (உணவுச் செலவு நீங்கலாக) ஏற்று செலுத்தி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன நல்ல அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெருந்துறை அரசுப் போக்குவரத்துக் கழக மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்னும் பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டும். அங்கே நோயாளிகளுக்கு உணவு வழங்குவதிலேகூட சில கட்டுப்பாடுகளை எல்லாம் வைத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு உணவு வழங்குவதிலே சில கட்டுப்பாடுகளை எல்லாம் விதித்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. எனவே, பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேலும் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் அமைச்சரிடத்திலே உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறையில் நம்முடைய போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தினமும் 1,500–க்கு மேற்பட்ட வெளி நோயாளிகள் வந்து பயன்பெற்று வருகிறார்கள். போக்குவரத்துக் கழகத்திலிருந்து அதற்குத் தரப்பட்ட பணம், F.D.–ல் போடப்பட்டிருக்கிற அந்தப் பணத்திலிருந்து வருகின்ற வட்டிக்கு கணக்குப் பார்த்தால் தினமும் நாளொன்றுக்கு 1,20,000 ரூபாய் நட்டத்திலே அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் மேற்கொண்டு அதை விரிவுபடுத்துவதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டு, தினந்தோறும் 1,500–க்கு மேற்பட்ட புற நோயாளிகள் வருகிற காரணத்தால் அதற்குரிய செலவுத் தொகையினை ஓரளவாவது உங்களுடைய இலாகாவிலிருந்து எங்களுக்குத் தரவேண்டும் என்று சம்பந்தப்பட்ட மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் கேட்டு, இரண்டு அரசுச் செயலாளர்களும் பேசி அதற்கு இறுதி முடிவு வரவிருக்கிறது. அப்படி வருகின்றபோது, நட்டம் இல்லாமல் இயங்குகின்றபோது, மேலும் அதை



2008 ஜனவரி 28]

விரிவுபடுத்துவதற்குரிய ஏற்பாடு செய்யப்படும். இந்த ஆண்டு முதற்கொண்டு அங்கு Nursing Course–க்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, கூடுதலாக விரிவுபடுத்தப்படும். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

### கிளைச் சிறைச்சாலை

***33139—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி கிளைச் சிறைச்சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தரங்கம்பாடி கிளைச் சிறையினைச் செப்பனிட நடப்பு நிதியாண்டு கட்டடப் பராமரிப்பு நிதியிலிருந்து தரங்கம்பாடி கிளைச் சிறைக்கு பண்டக அறை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவை கட்டுவதற்கு ரூ.4.75 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்குள்ள சமையலறை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறைச்சாலை ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. அது மீண்டும் 1989-ல் திறக்கப்பட்டு 14 கைதிகள் மட்டுமே அடைப்பதற்கான வசதி இருக்கிறது. அன்று பொறையார் காவல் நிலைய கைதிகள் மட்டுமே அதில் அடைக்கப்பட்டார்கள். இப்போது செம்பனார்கோயில்,

[2008 ஜனவரி 28

பெரம்பூர் அதைப்போல, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு வழக்குகள், ஆக 50-லிருந்து 60 கைதிகள் அங்கே அடைக்கப்படுகிறார்கள். அதுவும் பழைய பழுதடைந்த ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, அதைக் கான்கிரீட் கட்டடமாக மாற்றித்தர வேண்டும்.

முற்பகல் 10–00

அதைப்போல, அங்கே கழிப்பிட வசதி இல்லை. குடிநீர் வசதி செய்து கொடுப்பதாக, நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அதற்கு நன்றி. அந்தக் கைதிகளைப் பார்ப்பதற்கு வருகின்ற அவர்களுடைய உறவினர்கள் தங்குவதற்கு அறை கிடையாது. மேலும், அங்கே 12 காவலர்கள் மட்டுமே உள்ளனர். இன்றைய சூழ்நிலையில் இந்தக் காவலர்கள் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டியிருக்கிறது. ஆகவே, புழல் சிறையை நவீன வசதிகளுடன் கட்டி கைதிகளைக் காத்துவரும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு, இந்தக் கிளைச் சிறைச்சாலையையும் நவீன வசதிகளுடன் கட்டிக்கொடுக்க முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல தரங்கம்பாடி கிளைச் சிறையிலே 12 அடைப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, தற்காலிகமாக விசாரணைக் கைதிகள்தான் அங்கே சிறையிலே அடைக்கப்பட்டு வருகிறார்கள். அந்த விசாரணைக் கைதிகள் இருக்கும் காலம் ஒரு மாத காலத்திற்குமேல் ஆகின்றபோது, உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அதிகமான எண்ணிக்கை வருகின்றபோது மத்திய சிறைக்கு மாற்றப்படுகின்றார்கள். அருகிலே இருக்கின்ற திருச்சி மத்திய சிறைக்கு மாற்றப்படலாம். எந்த மத்திய சிறை அருகிலே இருக்கின்றதோ அந்த மத்திய சிறைக்கு மாற்றப்படுவது வழக்கமாக இருந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக, கான்கிரீட் கட்டடமாக மாற்ற வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கின்ற 100 கிளைச் சிறைச்சாலைகளிலே, ஆண்கள் கிளைச் சிறைச்சாலைகளிலே, 30 கிளைச் சிறைச்சாலைகளை கான்கிரீட் கட்டடமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையிலே வேலை பார்க்கும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், காவல் துறையிலே உள்ள இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் சம்பளம் 500 ரூபாய் வரை வித்தியாசமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். சிறைத் துறைக் காவலர்களுக்கும், காவல் துறைத் காவலர்களுக்கும் இப்படி அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. எனவே, இரண்டு துறைகளிலும் சமமாக ஊதியம் வழங்க நமது அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலேதான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறைத் துறை நிர்வாகத்திற்கும், காவல் துறை நிர்வாகத்திற்கும் இருந்த சில வேறுபாடுகளை நீக்கினார்கள். 100 ரூபாயாக இருந்த அவர்களுக்கான படியை 150 ரூபாயாக உயர்த்தினார்கள். அதேபோல, இந்த இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் சலவைப் படி 30 ரூபாயாக இருந்ததை 100 ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். ஆக, சிறைக் காவலர்களுக்கும் காவல் துறைக் காவலர்களுக்கும் இருந்த அனைத்து வேறுபாடுகளையும் கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே தலைவர் கலைஞர் அவர்கள் களைந்தார்கள். அவர்களுக்கு இரவிலே கொடுக்கின்ற உணவுப் படியிலேயிருந்து, நகரத்திலே கொடுக்கின்ற உணவுப் படியிலேயிருந்து மாற்றம் செய்து அனைத்தும் உத்தரவிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு ஒரேயொரு குறை மட்டும் உள்ளது. அவர்களுடைய ஒரேயொரு கோரிக்கை மட்டும் நிலுவையிலே உள்ளது. அவர்கள், காவல் துறையின் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், சிறைத் துறையின் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்திலே வேறுபாடு இருப்பதைக் களைய கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். வருகின்ற காலத்திலே மாண்புமிகு முதல்வரோடு கலந்து, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

## குடமுழுக்கு

***31466—திரு. கு. பிச்சாண்டி :**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் அருள்மிகு ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் பத்து வகையான திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.22.27 இலட்சம் மதிப்பீட்டில் அந்தப் பணிகளெல்லாம் முடிக்கப்பட்டு, கடந்த 21-1-2008 அன்று சிறப்பான முறையில் குடமுழுக்கும் நடைபெற்றுள்ளது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதியிலே திப்பு சுல்தான் காலத்திலே கட்டப்பட்ட மிகப் பழமைவாய்ந்த நரசிம்மசுவாமி கோயிலுக்கு கடந்த காலத்திலே தேருக்காக 5 இலட்சம் ரூபாய் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டு அந்த நிதி தேர் செய்வதற்குப் போதாது என்பதால் அது நிலுவையில் உள்ளது. தலைவர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கி அந்தத் தேரைப் புதுப்பித்து குடமுழுக்குப் பணியைச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 900 திருத்தேர்கள் இருக்கின்றன. அவற்றில் அனைத்துத் தேர்களும் ஓடுகின்ற நிலையில் இருக்க வேண்டும், ஓடாத தேர்களே தமிழகத்தில் இருக்கக்கூடாது என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைக்கிணங்க, அப்படி பழுதடைந்திருக்கக்கூடிய திருத்தேர்கள் எல்லாம் இப்போது பட்டியலிடப்பட்டு ரூபாய் பத்து கோடி வைப்பு நிதியில் வைத்து அதிலிருந்து வரக்கூடிய அந்த வருவாயை வைத்து இப்போது பணிகள் நடைபெறுகின்றன. உறுப்பினர் அவர்கள் முறையாக அதைத் தெரிவித்தால் தேவையான உதவிகளைச் செய்வதற்கு துறை தயாராக இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், குடவாசலில் அமைந்துள்ள குடவாயில் அருள்மிகு கோணேஸ்வரசுவாமி கோயில், சோழன் கோச்செங்கணனால் கட்டப்பட்ட 70 மாடக்கோயில்களில் ஒன்று. சென்ற ஆண்டு அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் இதுபற்றிக் கேள்வி எழுப்பியபோது, அப்போது அறிவித்திருந்த கோயில்களில் இரண்டு கோயில்கள் ஏற்கெனவே குடமுழுக்கு நிறைவு பெற்று இருக்கின்ற காரணத்தினால், அதனுடைய நிதி இந்தக் கோயிலுக்கு Fund diversion செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்தார்கள். அது எந்த அளவில் இருக்கிறது? குடமுழுக்கு செய்ய இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படுமா? குடமுழுக்குப் பணி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தேருக்குச் சொன்ன பதிலைப் போலவே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய திருக்கோயில்களில்

[2008 ஜனவரி 28

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடைபெறவேண்டும் என்பது ஆகம விதி. ஆகவே, அந்த விதிகள் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அந்த அறிவுரையின்படி, கழக அரசு பொறுப்பேற்று கடந்த 13-08-2006 முதல் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை 1,762 திருக்கோயில்களுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டு இருக்கின்றது. ஆகவே, இவ்வளவு கோயில்களுக்கு குடமுழுக்கு செய்து திருப்பணிகள் நடைபெறுகின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தன்னுடைய கோரிக்கையை முறையாக எடுத்துச்சொன்னால் அதைப் பற்றியும் பரிசீலிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் நிறைய கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு நிறைய நிலங்களும் இருக்கின்றன. அந்த நிலங்களை பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிலர் குத்தகை எடுத்து வைத்திருக்கிறார்கள். குத்தகை எடுத்து வைத்தவர்கள் அங்கே இருக்கின்ற அந்தக் கோயிலுக்கு உரிய அந்தத் தொகையைச் செலுத்தாமல் இருக்கிறார்கள். அதுபோல் கோயிலுக்குச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தாமல் இருக்கின்றவர்களிடமிருந்து அந்த நிலங்களை எடுத்து மறுபடியும் கோயிலுக்கு வருமானம் செலுத்தக்கூடியவர்களிடத்திலே ஒப்படைக்கக்கூடிய எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அப்படி இருந்தால், கோயில்களை நிர்வகிக்கக்கூடிய அந்தத் தொகை அரசாங்கத்திற்கு பாரமாக இல்லாமல், வருகின்ற வருவாயிலேயே அந்தக் கோயில்களை நிர்வகிக்க முடியும். இதனை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருக்கோயில்களுக்குச் சொந்தமாகத் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களும், மனைகள், கட்டடங்களும் இருக்கின்றன. அவற்றில் இருக்கக்கூடியவர்கள் முறையான குத்தகைத் தொகையையும்,



2008 ஜனவரி 28]

வாடகைத் தொகையையும் செலுத்தாத காரணத்தால் அப்படிச் செலுத்தாதவர்கள்மீது, அவற்றைச் செலுத்துவதற்கான உரிய வழக்குகளை துறையின் சார்பிலே நீதிமன்றங்களில் தொடுத்து இருக்கிறோம். அவற்றை விரைந்து செயல்படுத்துவதற்கு முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, அப்படி இந்த 1½ ஆண்டு காலத்தில் நிலுவையில் இருந்த பல்வேறு வழக்குகள் இப்போது விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வகையிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் கருத்துகளை விரைந்து பரிசீலிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வி.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட ஜம்பை கிராமத்திலே ஜம்புலிங்கேஸ்வரர் ஆலயம் மிகப் பழமைவாய்ந்த ஆலயம், மிகப் பெரிய ஆலயம். அதேபோன்று திருவரங்கம். ஒரு பழமொழி சொல்வார்கள், 'ஆதி திருவரங்கம் அநாதி ஸ்ரீரங்கம்' என்று. அதாவது திருப்பதிக்கு ஒப்பிடக்கூடிய அளவிலே அந்தத் திருக்கோயில் அமைந்திருக்கிறது. அந்த ஜம்புலிங்கேஸ்வரர் ஆலயம் மிகப் பெரிய ஆலயம். அந்த ஆலயத்தைச் சரி செய்து உடனடியாக குடமுழுக்கு செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்தத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுத்து, 12-வது நிதி ஆணையத்தின் மூலமாக, 48 திருக்கோயில்கள் ஏறத்தாழ 50 ஆண்டுகள், 100 ஆண்டு காலம் என்று திருப்பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து, குடமுழுக்கு நடைபெறாமல் இருந்தன. அவ்வாறு 48 திருக்கோயில்களைத் தேர்வு செய்து, 987 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அவற்றிலே இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதையும் தாண்டி பாடல் பெற்ற திருத்தலங்கள் என்ற வகையிலே 30 திருக்கோயில்களைத் தேர்வு செய்து, ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[2008 ஜனவரி 28

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தத் திருக்கோயிலும் பழமைவாய்ந்த, தொன்மை வாய்ந்த திருக்கோயிலாக இருந்தால், அவர் உரிய முறையில் விண்ணப்பித்தால், பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களுக்கு இருக்கின்ற நிலங்களைத் திரும்ப எடுப்பதற்கு வழக்குகளை விரைவுபடுத்தினாலும்கூட, அந்த நிலங்களை எடுக்க முடியாத சூழ்நிலை நிலவி வருகிற நேரத்தில், அதற்காக ஒரு தனி நீதிமன்றத்தை உருவாக்கி, விரைந்து அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி குட்முழுக்கு சம்பந்தப்பட்டது.

வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

**சாயப் பயிற்சி மையம்**

***33040—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி ஊராட்சியில் நவீன தொழில்நுட்பத்துடன் துணிநூல் சாயப் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி ஊராட்சியில் தனியே தொழில் நுட்பத்துடன் துணிநூல் சாயப் பயிற்சி மையம் துவக்குகிற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மட்டும் சுமார் ரூ. 300 கோடிக்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை வார்ப்பு நூலுக்கு சாயம் ஏற்றி, auto loom-ல் துணிகளாகத் தயார் செய்யப்பட்டு, பின்னர் தையல் இயந்திரங்கள்மூலம் ஆடைகளாகத் தைத்து, அனைத்தும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் கிராமப்புறத்தில் படித்த, படிக்காத ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. இதிலே warping, sizing செய்பவர்கள், தறி ஓட்டுபவர்கள், தையலர்கள், cutting masters, துணி தைப்பவர்கள் எனப் பல பணியாளர்கள் உள்ளனர். இவர்களால் உற்பத்தி செய்யப்படும் துணிகள் அமெரிக்கா, லண்டன், ஐரோப்பா, ஜப்பான், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குச் செல்கையில் சில நேரங்களில் நமது தமிழ்நாட்டுத் துணிகளிலுள்ள சாயங்களினால் தோல் நோய் ஏற்படுவதாக, அங்கு பாதிப்பு இருக்கிறது. அதனால் தமிழகத்தில் அந்தத் தொழில் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, unskilled labour என்று சொல்லக்கூடிய அந்தத் தொழிலாளர்களை skilled தொழிலாளர்களாக்க, அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு, எனது ஓமலூர் தொகுதியிலே, வெள்ளக்கல்பட்டி ஊராட்சியிலே, நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய துணிநூல் சாயப் பயிற்சி மையத்தை அரசு அமைக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அதன் காரணமாகத்தான், துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது சாயம் தோய்த்தல் என்கிற ஒரு தனிப்பட்ட செயலுக்கு மட்டும் அல்லாமல், நெசவு செய்தல், வடிவமைப்பு, பதனிடுதல் போன்ற துணிநூலுக்குச் சம்பந்தப்பட்ட அனைத்து நிலைகளுக்கும் உரிய பயிற்சி, நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, இன்று ஈரோட்டை ஒரு மத்தியப் பகுதியாகக் கொண்டு, அங்கு ஒரு பயிற்சி மையம் துவங்கப்படுகிற நிலை இந்த அரசின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கு செயல்படுகிற நிலை பற்றாக்குறையாக

இருந்தால், சேலம் பகுதியிலும் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** அப்படித் துவங்கும்போது, அது ஓமலூர் தொகுதியிலே இந்தப் பகுதியிலே, அதாவது வெள்ளக்கல்பட்டி ஊராட்சியிலே தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் எந்தப் பகுதியில் தொடங்கினால், நெசவாளர்களுக்கு சௌகரியமாக இருக்குமோ, அந்தப் பகுதியில் அது தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூரைப் பொறுத்தவரை, ஆண்டொன்றிற்கு சுமார் 3,000 கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறிகள்மூலம், விசைத்தறிகள்மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி நகரம் என்று பெயர் பெற்ற கரூர் மாநகரிலே இதுவரை அரசின் சார்பிலே சாயப் பயிற்சி மையம் என்பது அமைக்கப்படவில்லை. பல்வேறு இளைஞர்கள் தனியார் சாயப் பயிற்சி மையத்திற்குச் சென்று பயிற்சி பெறுவதற்குள் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் என்று பல ஆண்டுகள் கடந்து விடுகின்றன. எனவே, இளைஞர்களுக்காக அரசின் சார்பிலே சாயப் பயிற்சி மையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு உரிய பயிற்சி தேவை என்பதை இந்த அரசு கருத்தில் கொண்ட காரணத்தினால்தான் ஈரோடு பகுதியிலே அத்தொழில் அதிகமாக இருக்கிற காரணத்தால் முதலிலே அங்கே துவங்கப்படுகிற நிலை உள்ளது. கரூர் என்பதும் தனிக் கவனம்





எடுக்கப்பட வேண்டிய பகுதி. சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, தேவை இருப்பின் கண்டிப்பாக அடுத்த கட்டத்திலே இது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## அங்கன்வாடிக் கட்டடம்

***5438—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வகுரணி ஊராட்சி, சந்தைப்பட்டிக்கு அங்கன்வாடிக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, வகுரணி ஊராட்சி, சந்தைப்பட்டி குழந்தைகள் மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட சிறுசேமிப்பு ஊக்க நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து புதிய மையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உசிலம்பட்டி தொகுதியில் வகுரணி ஊராட்சி, சந்தைப்பட்டிக்கு அங்கன்வாடிக் கட்டடம் அமைத்துத் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; அது ஏற்புடையது. இருந்தாலும் அந்தத் தொகுதியில் 70 சதவிகிதத்திற்கும்மேல் அங்கன்வாடிகளுக்குக் கட்டடங்கள் இல்லாமல் குழந்தைகள் சிரமப்படுகிறார்கள். மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் கட்டட வசதி இல்லாமல் தெரு ஓரங்களிலும், மரத்தடிகளிலும் அந்தப் பள்ளிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. இந்த நிலைமை ஒட்டுமொத்தமாக எல்லாத் தொகுதிகளிலும் இருக்கின்ற காரணத்தால், ஒட்டுமொத்தமாக

ஏதாவது சிறப்புத் திட்டத்தின்கீழ் அங்கன்வாடிக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 50,433 குழந்தைகள் மையங்கள் உள்ளன. இவற்றில் 82 சதவிகிதம் வாடகை இல்லாத சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 20 சதவிகிதம்தான் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, நமது முதல்வர் அவர்கள் அண்மையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தின்போது நிச்சயமாகக் குழந்தைகள் மையங்களை மேம்படுத்தப் புதிய கட்டடங்கள் கட்ட வருகின்ற நிதி ஆண்டில் சிறப்பு நிதி ஒதுக்கப்படும் என்ற உறுதியை அளித்தார்கள் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியிலே இருக்கிற அந்த சந்தைப்பட்டி கிராமத்திற்கு சிறுசேமிப்பு நிதியின் மூலமாகக் கட்டடம் கட்டித் தருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த ஆண்டு நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவிப்பதோடு, இப்பொழுது ஒட்டுமொத்தமாக ஒரு சிறப்புத் திட்டம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள், அந்தத் திட்டத்திலே ஒவ்வொரு தொகுதிக்கும் எத்தனைக் கட்டடங்கள் கட்டித் தருவார்கள் என்பதையும் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியில், முக்கியமாக உசிலம்பட்டியில், 76 குழந்தைகள் மையங்கள் உள்ளன. அவற்றில் 58, வாடகை இல்லாத சொந்தக் கட்டடங்களில் சிறப்பாக இயங்கி வருகின்றன என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



மேலும், அவர் அதுகுறித்துப் பல விவரங்களைக் கேட்டுள்ளார். நிச்சயமாக வருகின்ற பட்ஜெட்டின்போது அதுபற்றி இன்னும் விரிவாக விளக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 26 ஆண்டு காலமாக குழந்தைகள் நலப் பணியாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள். மற்ற அரசு ஊழியர்களுக்கு அளிப்பதுபோல இவர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதில்லை. இவர்களுக்கும் அரசு ஓய்வூதியம் வழங்கவேண்டும். மேலும், பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு கோடை விடுமுறை விடுவதுபோல, இவர்களுக்குக் கோடை விடுமுறை அளிப்பதில்லை. கோடைக் காலத்தில் குழந்தைகளும் வருவதில்லை. அதனால் இவர்களுக்கும் கோடை விடுமுறை அளிக்கவும், ஓய்வூதியம் அளிக்கவும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதனைத் தனிக் கேள்வியாகக் கேட்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

### கால்நடை மருத்துவக் கிளை நிலையம்

***28983—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, அரையப்பட்டியில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 28

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஒன்றியம், அரையப்பட்டி கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரத்திற்கும்மேல் இருப்பதால் வரும் நிதி ஆண்டில் அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யும்.

(முற்பகல் 10–20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்டது அரையப்பட்டி கிராமம். அதைச் சுற்றி 15, 20 குக்கிராமங்கள் இருக்கின்றன. 15,000 கால்நடைகள் அங்கே இருக்கின்றன. ஆகவே அந்தக் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனை தொடங்க வேண்டுமென்று மக்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதற்கான இடமும் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அமைச்சர் சொன்ன அடிப்படையில், வருகின்ற நிதியாண்டே அதை அமைத்துத் தருவதற்கு உறுதியளிப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறியபடி வருகின்ற நிதியாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***19459—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 28]

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி சட்டமன்றத் தொகுதியில், கொண்டல் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதிக்குட்பட்ட கொண்டல் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அதிலே 1,161 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். கிட்டத்தட்ட 5 ஏக்கர் நிலமும் உள்ளது. சீர்காழி பகுதி உள்ள நாகை மாவட்டம் முழுவதுமாக விவசாய மாவட்டம். வேறு எந்தத் தொழிலும் கிடையாது. அந்தப் பள்ளி வளாகத்திலே 5 ஏக்கர் நிலமும் இருக்கிற காரணத்தினாலே, வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, எதிர்காலத்திலே ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் கல்வி பயில்கிற வகையிலே, புதிய தொழிற்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்தால் வருங்காலத்திலே வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம் என்ற நோக்கத்தில், அரசு மீண்டும் பரிசீலனை செய்து ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையத்தை உருவாக்கித்தர ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி நிலையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் மொத்தம் 664 தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 59–ம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள்

[2008 ஜனவரி 28

605-ம் செயல்பட்டு வருகின்றன. அதில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இரண்டும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் பதின்மூன்றும், சீர்காழி தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இட ஒதுக்கீடு விதிகளின்படி 18 சதவிகிதம் ஆதி திராவிட இனத்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள மொத்த இடங்களில் 50 சதவிகித மாணவர்கள் இட ஒதுக்கீடு விதிகளின்படி தேர்வு செய்யப்படுகின்றனர். ஆகவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஒர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஏற்கெனவே இந்த அவையில். . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** முதலில் நான் பேசி விடுகிறேன். *(குறுக்கீடு)* நான் பேசி விடுகிறேன்.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். *(குறுக்கீடு)* திரு. ஞானசேகரன், நீங்கள் 'நான் பேசுகிறேன்' என்று சொன்னீர்கள் இல்லையா? அவர் பேசுகிறாரா, நீங்கள் பேசுகிறீர்களா? *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசுகிறீர்களா? *(குறுக்கீடு)* திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 56-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். ஆகவே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். *(குறுக்கீடு)*

### (ஆ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. திருமாவளவன் மாநாடு ஒன்றில் உரையாற்றியுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் பொது விவாதத்தில் கலந்துகொள்கிறபோது நான் இந்த அவையில் விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டம் குறித்துப் பேசுகிறபோது 'அந்த விடுதலைப் புலிகளுக்கு சில கட்சிகள், சில அமைப்புகள் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து, அவர்கள் கருத்துரிமை மாநாடு, வாழ்வுரிமை மாநாடு நடத்துகிறார்கள்; அவர்களைத் தடை செய்ய வேண்டும்' என்று இந்த அவையிலே ஒரு கோரிக்கை வைத்தேன்.

*முற்பகல் 10-25*

கடந்த 25 ஆம் தேதி அமைந்தகரையில் இருக்கக்கூடிய புல்லா அவென்யூவில் நடைபெற்ற ஒரு கருத்துரிமை மாநாட்டில் உரையாற்றுகிறபோது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் திரு. திருமாவளவன் அவர்கள், "சட்டமன்றத்திலேயே, தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்று கூச்சல் போடுகிறார்கள், நாங்கள் புலிகளுக்குத் தெரிவிப்பது தார்மீக

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஜனவரி 28

ஆதரவுதான். அவர்கள் கூறும் காரணம் இராஜிவ் காந்தி கொலை. அது முடிந்து 17 வருடங்கள் ஆகின்றன. அதற்குப் பிறகு இளங்கோவன் பல்லே தேய்க்காமல், சாப்பிடாமல் இருக்கிறாரா? கிருஷ்ணசாமி, ஞானசேகரன் சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறார்களா? நம் ஊர் அம்மா அந்தத் துக்கத்தில் உணவு அருந்தாமல் இளைத்து ஒல்லிக்குச்சியாகிவிட்டாரா?" என்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்த issue-வை இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. ஞானசேகரன், நீங்கள் இந்த issue-வை இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதைப் பரிசீலனை பண்ணித்தான் எடுக்க முடியும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இலங்கைக் கடற்படை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் ஒன்று சொல்கிறேன். எல்லோருமே கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதைப் பரிசீலனை பண்ணிவிட்டு நான் எடுப்பேன். (குறுக்கீடுகள்) No. இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள் என்கிறேன். இதோ இருக்கிறது. (குறுக்கீடுகள்) No, no. (குறுக்கீடுகள்) அதெப்படி எடுக்க முடியும்? இதோ பாருங்கள். (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள். இப்போது நேரம் 10-26. நீங்கள் 10-25-க்குக் கொடுத்துவிட்டு எடுங்கள் என்று சொன்னால் நான் என்ன பண்ணமுடியும்? (குறுக்கீடுகள்) நான் எடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. சொல்கிறேன், கேளுங்கள். எடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. பரிசீலனையில் இருக்கிறது. இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். படித்துப் பார்த்து என்ன இருக்கிறதென்று தெரிந்துகொண்டு எடுக்கலாமா, வேண்டாமா என்று முடிவெடுக்க வேண்டியது நான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டுதான், காலங்கடந்து கொடுத்திருந்தாலும்கூட, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார். தயவுசெய்து, நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு (குறுக்கீடு) மறுக்கவில்லை, உங்களுடைய வேண்டுகோளை பேரவைத் தலைவர் மறுக்கவில்லை. நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார். எனவே நீங்கள் சொல்கிற கருத்து குறித்து (குறுக்கீடு)



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன் கேளுங்கள், திரு. ஞானசேகரன். அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நீங்கள் சொல்கிற கருத்து குறித்து அறிக்கைபெற்றுத்தான் அவையிலே கருத்துச் சொல்ல முடியும். எனவே ஒரு நாள் அவகாசம் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள் அல்லவா? உட்காருங்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பாக, இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்துவது குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோர் அ.இ.அ.தி.மு.க. சார்பாகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், திரு. நா. இராமகிருஷ்ணன் ம.தி.மு.க. சார்பாகவும், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. கு. செல்வம், திரு. து. ரவிக்குமார் ஆகியோரும் கொடுத்திருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக இதை மட்டும் இன்றையதினம் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'படகோட்டி' என்கின்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு பாடலைப் பாடும்போது "ஒரு நாள் போவார், ஒரு நாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்" என்[illegible] அடிப்படையில் பாடுவார். மீனவர்களுடைய வாழ்க்கை மிகவும் அபாயகரமான ஒரு சூழ்நிலையில் இருக்கின்ற நிலையை, புரட்சித்

228095
சென்னை-600 008

[திரு. டி. ஜெயக்குமார்] [2008 ஜனவரி 28

தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த 'படகோட்டி' திரைப்படத்திலே தத்ரூபமாகக் காட்டினார்கள். மீனவர்களுடைய வாழ்க்கை என்று சொல்லும்போது, தினந்தினம் செத்துப் பிழைக்கின்ற ஒரு நிலையாக இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 21 ஆம் தேதியன்று இரவு இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 599 விசைப் படகுகளிலே மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மறு நாள் 22 ஆம் தேதியன்று கரை திரும்பியிருக்க வேண்டும். 22 ஆம் தேதியன்று 596 படகுகள் கரை திரும்பி, 3 படகுகள் கரை திரும்பாமல் 12 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டு, இலங்கைச் சிறையிலே தற்பொழுது மிகவும் துன்பமான ஒரு சூழ்நிலையிலே இருக்கின்ற ஒரு நிலைமை. நம்முடைய இராமேஸ்வரம் மீனவர்களும், தமிழக மீனவர்களும், தமிழ்நாட்டு மக்களும், மீனவர்கள் அங்கே வாடிக்கொண்டிருக்கின்ற நிலையை எண்ணி, மிகவும் கொதிப்படைந்திருக்கின்ற ஒரு நிலையில், நம்முடைய இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 22 ஆம் தேதியிலிருந்து தொடர்ச்சியாக 1,500 படகுகளையும் கடலுக்கு எடுத்துச் செல்லாமல், மீன் பிடிக்கச் செல்லாமல் அவர்கள் வேலைநிறுத்தம் செய்து, அதனால் 15 ஆயிரம் மீனவர்கள் அந்தப் பகுதியிலே இப்பொழுது பட்டினியால் வாடுகின்ற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, இந்த நிலைமை வருங்காலத்தில் ஏற்படாதவாறு ஒரு முழுமையான அளவிற்கு முற்றுப்புள்ளியை வைக்க வேண்டுமென்று சொன்னால், கச்சத் தீவினை மீட்கவேண்டும்.

முற்பகல் 10-30

நம்முடைய தமிழ் நிலத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற அந்தக் கச்சத் தீவு, 1974 ஆம் ஆண்டு, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது . அன்றைக்கு இலங்கைப் பிரதமராக பண்டார நாயகே அவர்கள் இருந்த காலத்திலே தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது. எனவே, அந்தக் கச்சத் தீவை மீட்டு, நம்முடைய தமிழ் நிலத்தினுடைய ஒரு பகுதியாகச் சேர்க்க வேண்டுமென்ற ஒரேயொரு கண்ணோட்டத்துடன்தான், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவு தமிழ் நிலத்தினுடைய ஒரு பகுதி; அதைத் தமிழ்நாட்டோடு சேர்க்கவேண்டுமென்று சொல்லி, சுதந்திர தினத்திலே கொடியேற்றி அறைகூவல் விடுத்ததோடு மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே ஒரு தனித் தீர்மானத்தை இயற்றி,



2008 ஜனவரி 28] [திரு. டி. ஜெயக்குமார்]

மத்திய அரசாங்கத்திற்குச் சட்டமன்றத்தின் மூலமாக அனுப்பி வைத்தார்கள். இப்போது மத்திய அரசாங்கம் உங்களுடைய அரசாங்கமாக இருக்கின்றது. எனவே, இந்தப் பிரச்சினைகள் வருங்காலத்திலே தொடராமல் இருக்கவேண்டுமென்று சொன்னால், தமிழ் நிலத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கின்ற நம்முடைய கச்சத் தீவை மீட்டு, உங்களால் இழக்கப்பட்ட அந்தக் கச்சத் தீவை மீட்டு, மீண்டும் சேர்ப்பதுதான் ஒரு சிறந்த தீர்வாக இருக்கமுடியும்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், I.B.L. என்று சொல்லக்கூடிய International Boundary Line, ஒரு imaginary line. நிலத்திலே boundary-ஐ பல்வேறு வகைகளிலே நாம் அளக்கமுடியும். ஆனால், கடலிலே எந்தவிதமான ஒரு boundary-ஐயும் அளக்கமாட்டார்கள். ஆனால், இப்போது கச்சத் தீவிற்கும், நெடுந் தீவிற்கும் இடையே கண்ணிவெடிகளைப் போட்டு, இப்பொழுது மீனவர்களுக்கு ஒரு பெரும் அபாயத்தை ஏற்படுத்தியதோடு, மீனவர்களுக்கு மட்டுமல்லாமல்—பொதுவாகவே, கடலிலே water current எப்படியிருக்கும் என்று சொன்னால், கீழே ஒரு வெள்ளோட்டம், மேலே ஒரு வெள்ளோட்டம் இருக்கும். எனவே, இப்படி கீழே ஒரு வெள்ளோட்டம், மேலே ஒரு வெள்ளோட்டம் என்று வருகிறபோது, நிச்சயமாக இந்தக் கண்ணிவெடிகள் தமிழ்நாட்டிற்கும் மற்ற நிலப் பகுதிகளுக்கெல்லாம் போகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை இருக்கும். எனவே, இது அரசு கவனத்தில் கொள்ளவேண்டிய மிகப் பெரிய விஷயமாக இருப்பதால், இதிலே தீவிரக் கவனம் செலுத்தி, நிரந்தரத் தீர்வு காணவேண்டும். கச்சத் தீவைத் தாரைவார்த்துக் கொடுக்கும்போதுகூட ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதாவது, நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்கள் அந்தக் கச்சத் தீவிலே தங்கி, தங்களுடைய வலைகளைக் காயவைத்துக் கொள்ளலாம்; தங்கிக் கொள்ளலாம் என்கின்ற அந்த ஒப்பந்தம்கூட மீறப்பட்டு, இப்பொழுது தமிழக மீனவர்கள் ஒரு கொடுமையான நிலைக்கு இலங்கை கடற்படையினரால், தீவிரவாதிகளால் துன்புறுத்தப்படுகின்ற நிலைக்கு முழுமையான அளவிலே முற்றுப்புள்ளி வைத்து, நம்முடைய இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்ல; Palk Bay மீனவர்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

[2008 ஜனவரி 28

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த subject-ஐத்தான் பேசவேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதையொட்டித்தான் பேசுகிறேன்; வேறு எதுவுமில்லை. அதைப்பற்றி நாளைக்குப் பேசுகிறேன். இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிப்பதற்காகச் சென்ற 13 மீனவர்கள் ஏற்கெனவே இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். 21 ஆம் தேதியிலிருந்து இராமேஸ்வரத்தில் இருக்கக்கூடிய அத்துணை மீனவர்களும் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, சிறைப் பிடிக்கப்பட்டிருக்கிற 13 மீனவர்களையும் அரசு உடனடியாக மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்கிற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அதேபோல, மீன் பிடிக்கச் செல்கிறபோது தங்களுக்குப் பாதுகாப்பே இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். கச்சத் தீவுப் பகுதியிலே, இலங்கையினுடைய அந்த border-லே அவர்கள் இப்பொழுதெல்லாம், கண்ணிவெடிகளை வைத்து, border–ஐத் தாண்டினால் உடனே வெடித்து, ஆட்களையே கொன்றுவிடக்கூடிய அளவிற்கு சக்திவாய்ந்த சில குண்டுகளை அவர்கள் அந்த எல்லையிலே பதித்து வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் இப்பொழுது செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழலில் மீனவர்களுக்குப் பாதுகாப்பே இல்லாமல், அவர்களுடைய வாழ்வாதாரம் இப்பொழுது முழுமையாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்கிற நிலையை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–35*

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிறைபிடிக்கப்பட்ட இந்த மீனவர்களை மீட்பதற்காக இதுவரை என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்? மத்திய அரசோடு தமிழக அரசு ஏற்கெனவே கடிதம் மூலமாகவோ நேரடியாகவோ தொடர்பு கொண்டிருக்கிறதா, அந்த மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறதா என்பதையும் கேட்க விரும்புகிறேன். அதேபோல போராட்டத்தில் இப்பொழுது ஈடுபட்டுக்கொண்டிருக்கிற அத்துணை மீனவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்கிற உறுதியைத் தந்து மத்திய அரசோடு பேசி, அதேபோல் இலங்கை அரசோடு மத்திய அரசும் பேசி அவர்கள் தங்களுடைய மீன்பிடித் தொழிலை எந்தவிதமான தடையுமின்றி தொடர்ந்து செய்வதற்கான ஒரு வழிமுறையை இந்த அரசு காணுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அத்துமீறி இந்திய கடல் எல்லைக்குள் வருவதும், அதேநேரத்தில் எல்லை தெரியாமல் திசை மாறிப்போகிற நேரத்தில் தமிழக மீனவர்களைக் கடத்திச் செல்வதும் தொடர் நடவடிக்கையாக, வாடிக்கையாக இருந்துவருகிறது. அதைப்போலத்தான், சமீபத்திலே 13 மீனவர்களைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். கடத்திச் சென்ற மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்ற நிலை கேள்விக்குறியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்து, கடலோர மாவட்டங்களில்—இராமேஸ்வரம் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களில் இருக்கிற—மீனவர்கள் எல்லாம்கூடச் சேர்ந்து அவர்களுக்கு ஆதரவாக, வரக்கூடிய 1 ஆம் தேதி மிகப் பெரிய வேலைநிறுத்தப் போராட்டத்திலே ஈடுபடப்போவதாக அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக நாட்டினுடைய மிகப் பெரிய தொழிலாக இருக்கிற மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கிற அந்த மீனவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக இருந்துகொண்டிருக்கிறது.

எல்லையிலே இப்படி வெடிகுண்டை வைத்துத் தகர்ப்பது மட்டுமல்ல, சிக்கினால் மீனவர்களைத் துப்பாக்கியால் சுடுவது, மீன்களையும், அதைப்போல வலைகளையும் கடத்திச் செல்வது, பிடித்துச் செல்வது அல்லது வலைகளை அறுத்து சேதப்படுத்துவது என்ற செயலிலே இலங்கை கடற்படையினர் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது இன்று நேற்றல்ல, தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. இதற்கு ஒரு தீர்வு ஏற்படவேண்டும் என்று கடந்த கால ஆட்சியிலேகூட நாங்கள் வற்புறுத்தினோம். அப்போது அ.தி.மு.க. ஆட்சியிலே, சிவப்பு விளக்கு மிதவை அமைக்கப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அப்படி இந்திய–இலங்கை கடல் எல்லையை வரையறுப்பதற்கு கடந்த ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட அந்த சிவப்பு விளக்கு மிதவை அமைக்கப்படுமா அல்லது மாற்று நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறோம். இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டும்.

கடந்த காலத்தில் நம்முடைய மீனவர்கள் அங்கே சென்று ஆலயங்களிலே வழிபடுவது, திருவிழாக்களை நடத்துவது நம்முடைய உரிமையாக இருந்து வந்திருக்கிறது. அது தற்போது பறிபோய்விட்டது. ஆகவே, ஒட்டுமொத்த நிரந்தரத் தீர்வு என்று சொன்னால், நம்முடைய தமிழர்கள், இழந்த பகுதிகளிலே ஆலயங்களில் வழிபடுவதற்கும், மீன் வலைகளை உலர்த்துவதற்கும், அவர்கள் தங்கி ஓய்வெடுப்பதற்கும் நம்முடைய இழந்த உரிமையை மீட்டெடுப்பதற்குமான முயற்சியிலே அரசு ஈடுபடுவதற்கு கச்சத் தீவை மீட்பதுதான் நிரந்தரத் தீர்வு. ஆகவே, கச்சத் தீவை நாம் மீட்டெடுப்பதற்கு, நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு நடுவண் அரசினிடத்திலே தமிழக அரசு வற்புறுத்துமா, இந்த உரிமையைப் பெறுவதற்கு முயற்சிக்குமா என்ற கேள்வியை வைத்து, இந்த நிலை தொடராமல் நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு நம்முடைய அரசு வழிவகுக்குமா, என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பெருங்கடலில் இலங்கைக் கடற்படை கண்ணிவெடி வைத்ததன்மூலமாக இன்றைக்குத் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாமல் தவிக்கின்றார்கள். இந்தச் செயலானது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை வேரறுக்கவும், அவர்கள் தொடர்ந்து மீன் பிடிக்கச் செல்லாமல் இருப்பதற்காகவும், மரண பீதியை ஏற்படுத்துவதற்காகவும், அதுமட்டுமல்லாமல் இலங்கையிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற தமிழர்கள் தாயகம் நோக்கித் திரும்பி வருகின்ற வேளையில் ஜலசமாதி செய்வதற்கும் இந்தத் திட்டம் என்று கருதுகின்றேன். நெடுந் தீவில், கச்சத் தீவில் மீன் வளம் அதிகமாக இருக்கின்றது. கச்சத் தீவைத் தாரைவார்த்தபொழுதே மீன் பிடிக்கின்ற உரிமை நமக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றைக்கு அந்த உரிமை மீறப்பட்டிருக்கின்றது. 'அந்தத் தீவில் வலை காயப்போடுகின்ற அந்த உரிமைகூட மறுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10–40)

பரந்து விரிந்து அகன்று இருக்கின்ற கடலில் சர்வதேச எல்லையை எப்படிக் கண்டுபிடிப்பது? சர்வதேச எல்லையில் கைகாட்டி மரமோ, விளக்கோ அல்லது சோதனைச் சாவடியோ, வேலியோ இல்லை. அந்த நிலவொளியிலே மீனவர்கள் செல்கின்றபொழுது சில சமயங்களில்



சர்வதேசக் கடல் எல்லையை தாண்டக்கூடும். அந்த நேரத்தில் கண்ணிவெடிகளால் அவர்கள் இறக்கின்றார்கள். இது கொடுந்துயரமானது. இது இந்தியாவின் இறையாண்மைக்கே விடுக்கப்பட்டிருக்கின்ற சவாலாகக் கருதப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் இது சர்வதேசக் கடல் எல்லை விதிக்கு முரணானதாகவும், மாறுபட்டதாகவும் இருக்கின்ற காரணத்தினால் இதற்கு ஒரே ஒரு தீர்வு, இன்றைக்கு அந்தக் கச்சத் தீவை மீட்டெடுப்பதுதான். 10,000 முதல் 25,000 மீனவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு இலட்சம் குடும்பங்கள் இந்தத் தொழிலை நம்பியிருக்கின்றார்கள். ஒரு நாளைக்கு இரண்டு கோடி ரூபாய் வருமானம் தரக்கூடிய அந்தத் தொழில் நசிந்து அந்தக் குடும்பங்கள் அழியக்கூடிய அபாயத்தில் இருக்கின்ற சூழ்நிலையில் தமிழக அரசு, மத்திய அரசை வலியுறுத்தி கண்ணிவெடிகளை அகற்றவும் கச்சத் தீவை மீட்டெடுக்கவும் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

***திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்படுவது, சிறைப்பிடிக்கப்படுவது, சுட்டுக்கொல்லப்படுவது போன்ற சம்பவங்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன. அதன்காரணமாக, தமிழகக் கடலோரப் பகுதிகளில் எல்லாம் ஓர் அமைதியற்ற சூழ்நிலை என்பது இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இலங்கையில் ஓர் அமைதியற்ற சூழ்நிலை இருப்பதும், தொடர்ச்சியாக இலங்கையில் உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருப்பதும், இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வராத நிலையில் அது தமிழகத்தையும் பாதித்து, குறிப்பாக, தமிழகக் கடலோர மீனவர்களையும் பாதித்துக் கொண்டிருக்கிறது. எனவே, இலங்கையில் ஓர் அரசியல்ரீதியான தீர்வு ஏற்படவேண்டுமென்பதில் தமிழர்களும், இந்தியர்களும் முழு அக்கறை கொண்டிருந்தாலும், அந்தத் தீர்வு எட்டப்படும்வரை, தமிழ்நாட்டில் இருக்கின்ற மீனவர்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்தி, கண்டித்து உங்களுடைய உள்நாட்டுப் பிரச்சினை தனி, தமிழ்நாட்டோடு மோதாதீர்கள் என்று எச்சரிக்கின்ற அளவுக்கு இந்திய நாட்டினுடைய ஒற்றுமையையும், இந்தியர்களுடைய

வாழ்க்கையைப் பாதுகாக்கின்ற பொறுப்பையும் மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அதோடு கடலிலே வரையறை போன்ற பிரச்சினைகளிலும் ஒரு தெளிவான நிலை எடுக்கவேண்டும். அப்போதுதான் தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும். அதைத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கடலில் மீன்பிடிக்கச் செல்லுகிற மீனவர்கள், தொடர்ச்சியாக பல ஆண்டுகாலமாக இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்து பல்வேறு வகைகளிலே அவர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் கண்ணிவெடிகளுக்கு ஆளாக்கப்படுவதும் தொடர்ந்து நீடித்துக்கொண்டு இருக்கிற நிலையில் சர்வதேச எல்லைக் கோடுகளைப் பற்றி மீனவர்கள் எளிய முறையில் அறிந்துகொள்ளக்கூடிய வகையிலே, மத்திய அரசாங்கம் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இப்படித் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அச்சத்தோடு கடலுக்குச் செல்லுகிற மீனவர்கள் உயிரோடு திரும்பி வருவார்களா என்கிற உணர்விலே அவர்களை எதிர்பார்த்து அவர்களுடைய குடும்பங்கள் கரையிலே காத்திருக்கிற ஒரு நிலைமை தொடர்ந்து நீடித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இவற்றுக்கு ஒரு நிரந்தரமான தீர்வும், மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பும், அவர்கள் நம்பி வாழுகிற மீன்பிடித் தொழிலுக்கு உரிய பாதுகாப்பும் வழங்குவதற்கு மத்திய அரசும் மாநில அரசும் கலந்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, இதுபோன்ற படுகொலைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

முற்பகல் 10–45

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தம், நம்முடைய மீனவர்கள் கச்சத் தீவிற்குச் சென்று வலைகளைக் காயப்போடவும், ஓய்வு எடுக்கவும்,





அங்குள்ள அந்தோணியார் சாமி கோயிலிலே வழிபடவும் வகை செய்திருக்கிறது. ஆனால், இலங்கைப் பேரினவாத அரசு, யாரையும் கேட்காமல் தற்போது அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்திருக்கிறது. எதற்காகக் கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள்? யாரைக் கேட்டுக் கொடுத்தார்கள்? அப்போது இருந்த அரசைக் கேட்டார்களா என்றால், இல்லை. இப்படித் தமிழ் இனத்திற்குத் துரோகம் செய்து, அந்தக் கச்சத் தீவைத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார்கள். தற்போது அங்கே என்ன நடைபெறுகிறது என்றால், கச்சத் தீவிற்கும், நெடுந் தீவிற்கும் இடையேயும், இலங்கைக்கும், இந்தியக் கடல் எல்லையில் கண்ணி வெடிகளை மிதக்க விட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இந்தியப் பேரரசின் கடற்படை என்ன செய்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே, சேது சமுத்திரத் திட்டத்தை நாம் எப்படி நிறைவேற்றப்போகிறோம் என்ற ஒரு கேள்வியும் எழுகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு, சட்டப்பேரவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, கச்சத் தீவை நாம் மீட்டெடுக்க வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாகப் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்று, சிறையிலே அடைப்பதைப் பற்றியும், அவர்களுடைய படகுகளைப் பறிமுதல் செய்வதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி, திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. தி. இராமசாமி, திரு. சி. கோவிந்தசாமி, திரு. கு. செல்வம் ஆகிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எப்படி, இந்த அவையிலே இருக்கக்கூடிய மற்ற உறுப்பினர்கள், தமிழக மீனவர்களைப் பற்றி, தங்களுடைய கவலையைத் தெரிவித்தார்களோ, அவர்களைக் கைது செய்வதைப் பற்றியும், இலங்கை இராணுவம் அவர்களைச் சிறையிலே அடைப்பதைப் பற்றியும் இங்கே எடுத்து, விவரமாகச் சொன்னார்களோ, அதுபோல அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் ஆளுங்கட்சிக்கும்

கிடையாது. இன்னும் சொல்லப்போனால், ஆளுங்கட்சி, அதிலும் குறிப்பாக நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழக மீனவர்கள், இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி கிடைத்த உடனேயே, எந்த அளவிற்கு வேதனைப்படுகிறார்கள், மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொள்கிறார்கள், அங்கே இருக்கக்கூடிய மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு அகமது அவர்களோடு பேசுகிறார்கள் என்பதையெல்லாம் நாங்கள் நன்றாக அறிவோம்.

தமிழக மீனவர்கள் சில நேரங்களிலே தங்களையும் அறியாமல், கடல் எல்லையைத் தாண்டி, அவர்கள் இலங்கைப் பகுதிக்குச் செல்கின்ற நேரத்திலேதான், இலங்கை இராணுவம் அவர்களைக் கைது செய்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே, 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் சர்வதேசக் கடல் எல்லை தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், பாக் வளைகுடா மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கடல் எல்லைக் கோட்டினை தமிழக மீனவர்கள் எதிர்பாராமல் இயற்கைச் சீற்றத்தினாலும், மாறுபட்ட கடல் நீரோட்டத்தினாலும், இயந்திரப் பழுதினாலும் மற்றும் அறியாமையினாலும் கடக்க நேரிடும் நிகழ்வுகளில் இலங்கை இராணுவத்தினால் சிறைப்பிடிக்கப்பட்டும், சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில், இராமேஸ்வரம், அதாவது, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கடலோரப் பகுதியிலிருந்து 9 முதல் 34 கடல் மைல் தூரத்திற்குள் சர்வதேசக் கடல் எல்லை அமைந்துள்ளது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், அந்த எல்லை வரையறுக்கப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், ஏற்கெனவே இரண்டு அரசுகளும் சேர்ந்து, எந்த அளவிற்கு அந்தக் கடல் எல்லை அமைக்கப்படவேண்டும் என்பதை அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். இராமேஸ்வரத்திலிருந்து 14.07 கடல் மைல் தூரமும், தனுஷ்கோடியிலிருந்து 9 கடல் மைல் தூரமும் உள்ளதால், மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைக் கடக்கின்ற நிகழ்வுகள் அவ்வப்போது ஏற்படுகின்றன.





முற்பகல் 10–50

கடந்த 2006–2007 ஆம் ஆண்டுகளில் மற்றும் 2008 ஜனவரி 2 ஆம் தேதி வரை ஐந்து நிகழ்வுகள் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு நடைபெற்றிருக்கின்றன. இந்த ஐந்து நிகழ்வுகளில், 157 மீனவர்கள் உள்ளிட்ட 30 மீன்பிடி விசைப் படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு மேற்கொண்ட துரித முயற்சியால் 157 மீனவர்களும், அவர்களது 30 மீன்பிடி விசைப் படகுகளுடன் இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தமிழக அரசு துரிதமாகச் செயல்பட்டு மீனவர்கள் மற்றும் விசைப் படகுகள் விடுவிக்கப்பட்டதற்கு சில நிகழ்வுகளையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். 12-8-2006 மற்றும் 14-8-2006 தேதிகளில் இலங்கை இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 19 மீனவர்களும் மற்றும் 5 விசைப் படகுகளும் 25-11-2006 அன்று விடுவிக்கப்பட்டுள்ளன. 19-9-2007 அன்று கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 10 மீனவர்கள் மற்றும் 2 விசைப் படகுகளைப் பொறுத்தவரை 2-10-2007 அன்று 10 மீனவர்களும் 5-11-2007 அன்று 2 விசைப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. 2-11-2007 அன்று கைது செய்யப்பட்ட 97 மீனவர்கள் மற்றும் 17 விசைப் படகுகளில் தமிழக அரசின் சீரிய முயற்சியினால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் இரண்டே நாட்களில், அதாவது கைது செய்யப்பட்டது 2 ஆம் தேதி, 4-11-2007 அன்றே விடுவிக்கப்பட்டு தமிழகத்திற்கு திரும்ப அழைத்து வரப்பட்டனர். 2-1-2008 அன்று கைது செய்யப்பட்ட நாகப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 31 மீனவர்களில் 28 மீனவர்கள் 3-1-2008 அன்றும் மீதமுள்ள 3 மீனவர்கள் 12-1-2008 அன்றும் விடுவிக்கப்பட்டு தமிழகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தற்போது, 21-1-2008 அன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 3 விசைப் படகுகள் மற்றும் 12 மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைக் கடந்ததாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்தது. உடனடியாக, சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதுவரை தமிழக அரசின் உயர் அதிகாரிகள் தொடர்புகொண்டு தமிழக மீனவர்களை மீட்கத் தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். அதுமட்டுமின்றி, மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் மத்திய இணை அமைச்சர் திரு. அகமது அவர்களையும் தொடர்புகொண்டு பேசியிருக்கிறார். நானும் மூன்று முறை அவரோடு தொடர்பு கொண்டு பேசினேன். கடந்த இரண்டு நாட்களாக விடுமுறையாக இருந்த காரணத்தினால் இலங்கையிலே இருக்கின்ற அதிகாரிகளோடு தொடர்புகொள்ள முடியவில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார். இன்றையதினம் இலங்கை அதிகாரிகளோடு தொடர்புகொண்டு பேசுவதாகவும் வாக்குறுதி தந்திருக்கின்றார். இதற்கிடையில், முதல்வர் தரப்பிலிருந்து மீனவர்களை விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளின் காரணமாக மீனவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வுகளைத் தவிர்க்க, பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்துள்ளது:

*மீனவர்களை அவர்களின் சொந்த நலன் கருதியும் மற்றும் பாதுகாப்புக் கருதியும் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடிப்பதில் ஈடுபடக்கூடாது என மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், விசைப் படகுகளின் உரிமையாளர்கள் மூலமாகவும் மீனவர்களுக்கு அப்போதைக்கப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.*

*மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைக் கடக்காமல் இருக்க மீனவக் கிராமங்களில் தமுக்கு அடித்து எச்சரிக்கப்படுகின்றனர். வரி விலக்கு அளிக்கப்பட்ட எரி எண்ணெய் வழங்கும் புத்தகத்தில், சர்வதேசக் கடல் எல்லையை எக்காரணத்தைக் கொண்டும் கடக்க வேண்டாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.* இங்கே சொன்னார்கள், எல்லைகளே தெரியவில்லை என்று. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தப் புத்தகத்திலே எந்தெந்த இடத்திலே எல்லையைத் தாண்டக்கூடாது என்ற விவரங்களெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. *மீனவர்கள் கண்டிப்பாக அடையாள அட்டை மற்றும் மீன்பிடி விசைப் படகு பதிவுப் புத்தகத்தின் ஒளி நகலினையும் மீன்பிடிப்பு செய்யும் சமயம் கண்டிப்பாக எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.*

சர்வதேசக் கடல் எல்லையைக் கடக்கும் விசைப் படகுகளுக்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகிறது. *பாக் ஜலசந்தி பகுதியில் கடலோரக் காவல் படை தொடர்ந்து காவல் பணி*





*மேற்கொள்ள மத்திய அரசுக்குத் தமிழக அரசு கோரிக்கை விடுத்து, கடலோரக் காவல்படையினர் ரோந்துப் பணி மேற்கொண்டு வருகின்றனர்.*

*முற்பகல் 10–55*

*அரசாணை (நிலை) எண் 113, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 10-7-2000-ல் குறிப்பிட்டுள்ளவாறு, சர்வதேசக் கடல் எல்லையைக் கடக்கும் மீன்பிடிப் படகுகளுக்கு அபராதம் விதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிவுரைகள் வழங்கப்பட்டும் மீனவர்கள் எதேச்சாதிகாரமாக சர்வதேசக் கடல் எல்லையைக் கடக்க நேரிடும் நிகழ்வுகளில், தமிழக அரசு, நடுவண் அரசினுடைய வெளி விவகாரத் துறைமூலம் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் வழியாக, துரித நடவடிக்கை மேற்கொண்டு, தமிழக மீனவர்கள் இலங்கை அரசிடமிருந்து விடுவிக்கப்பட்டு தமிழகத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்படுகின்றனர்.*

இதோடு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். கச்சத் தீவிலே சில உரிமைகள் நமக்கு கொடுக்கப்பட்டன; அந்த உரிமைகள் இப்பொழுது பறிக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். இதுகுறித்தும், மத்திய அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு நம்முடைய தமிழக மீனவர்களுக்கு கச்சத் தீவிலே மீன் பிடிக்கின்ற உரிமை மற்றும் எந்தெந்த உரிமைகள் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஆணையாக வழங்கப்பட்டதோ, அந்த உரிமைகள் பறிக்கப்படாமல் இருப்பதற்கு மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தும் என்பதையும், எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவலையோடு, இந்த அரசாங்கமும் கவலைமட்டும் கொள்ளாமல், அவர்களை மீட்டுத் . தமிழகத்திற்கு கொண்டுவருவதற்கான, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது சமீபத்திலே பிடிக்கப்பட்ட மீனவர்கள் அங்கே சிறைச்சாலைகளிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கள், அவர்கள் எல்லாம் சித்திரவதை செய்யப்படுகிறார்கள், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், என்றெல்லாம் சொன்னார்கள். இதுவரையிலே ஐந்து முறை சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்கள் வெளியிலே வந்து பத்திரிகையாளர்களை சந்திக்கும்போது "நாங்கள் சிறையிலே இருக்கின்றபோது இலங்கை இராணுவத்தினாலோ, அந்த

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 ஜனவரி 28

அதிகாரிகளினாலோ, எங்களுக்கு எந்தத் தொல்லையும் இல்லை, நாங்கள் துன்புறுத்தப்படவில்லை" என்ற செய்திகளை பத்திரிகையாளர்கள் மத்தியிலே பேசியிருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்படுகின்ற மீனவர்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் எந்த பாதிப்பும் ஏற்படாமல், அவர்கள் சித்திரவதை செய்யப்படாமல் பத்திரமாகத் தமிழகத்திற்கு கொண்டுவருவதற்கான, எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். இப்போது இராமேஸ்வரத்திலிருந்து சென்று கைது செய்யப்பட்டிருக்கின்ற மீனவர்கள் குறித்து பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி அன்று, நீதிமன்றத்திலே வழக்கு வருகிறது; அதுவரையிலே அவர்கள் சிறையிலே இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இலங்கை அரசாங்கத்தாலே எடுத்துச் சொல்லப்பட்டது. இன்றையதினம் மத்திய இணை அமைச்சர் திரு. அகமது அவர்களைத் தொடர்புகொண்டு, இலங்கையில் அவர்களின் வழக்கு எப்போது வேண்டுமானாலும் நடத்தட்டும்; ஆனால், அதற்கிடையிலே சிறையிலே இருக்கக்கூடிய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி இலங்கை அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். விரைவிலே அந்த மீனவர்களை விடுவித்து, தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மாண்புமிகு திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார், எல்லாம் விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 68 முதல் 73 வரையிலான ஆறு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



2008 ஜனவரி 28]

### (ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2007-2008 ஆம் ஆண்டுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். 11 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் எல்லோரும் பேசி முடிக்க வேண்டும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், உங்களுக்கு 15 நிமிடங்கள்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டில், 13-வது சட்டமன்றப் பேரவையின் 7-வது கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் உவந்தளித்த பேருரைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்களால் முன்மொழியப்பட்ட ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும், தமிழினத்தின் வாழ்வே தன் வாழ்வு என வாழ்ந்து வரும் வாழும் வள்ளுவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியில் நல்லாட்சி செலுத்தி, ஓய்வுக்கு ஓய்வுகொடுத்து ஓய்வறியா எங்கள் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

தமிழினத்தின் மொழி, இனம், இசை, கலாச்சாரம், பண்பாட்டைப் பேணிக் காப்பதில் நம்முடைய முதலமைச்சருக்கு இணை நம்

முதல்வர்தான். தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்ற முடிவை அனைத்துத் தமிழ் அறிஞர்களும், தமிழ் மக்களும் வரவேற்கின்றனர். வரும் தை முதல் நாள் தமிழாண்டுத் தொடக்கத்தை திருவையாற்றில் தமிழிசை மன்றத் தொடக்க விழாவில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றுத் தொடங்கி வைத்து சிறப்பிக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருவையாறு தமிழிசை மன்றத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கிச் சிறப்பித்தார்கள். அதனைக் கடந்த ஆட்சியிலே நிறுத்திவிட்டார்கள். மீண்டும் முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு ரூபாய் 3 இலட்சம் தந்து சிறப்பித்துள்ளார்கள். தமிழிசையை வளர்க்க முதல்வர் எடுத்துள்ள நடவடிக்கையை அனைத்து தமிழ் அறிஞர்களும், இசைவாணர்களும் பாராட்டுகின்றனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழரின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டை உச்ச நீதிமன்றம் தடை விதித்ததை உச்ச நீதிமன்றத்தில் உரிய ஆதாரம், ஆவணங்களைத் தந்து வாதாடி, நீதிமன்றத் தடையாணையை விலக்கி, தமிழரின் கலாச்சார உரிமையை மீட்டுத்தந்த தமிழக முதல்வர் அவர்களை அனைத்துத் தரப்பு தமிழ் மக்களும் பாராட்டுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழரின் கூத்து, நடனம், பாரம்பரிய இசையைப் பொறுத்தவரை சென்னை சங்கமம்மூலம் மக்களிடம் தமிழிசையைக் கொண்டு செல்லும் பணியை மிகச் சிறப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி கனிமொழி அவர்களும், பண்பாட்டுத் துறையும், நம்முடைய சுற்றுலாத் துறையும் மிகச் சிறப்பாக கடந்த ஆண்டு சென்னையிலே செய்தனர். அதைத் தொடர்ந்து இந்த ஆண்டும் சென்னையிலே மிகச் சிறப்பாக அது நடைபெற்று, ஏழை கிராமிய இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற அந்தச் செயலைத் தொடர்ந்து, வருகின்ற ஆண்டுகளில் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் மேற்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காக்கவும், நதி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், தேசிய நதிகள் இணைக்கப்பட வேண்டும். பருவ காலங்களில் தமிழக நதிகளில் உபரி நீர் கடலில் கலந்து வீணாகாமல் தடுத்து, வறட்சிப் பகுதிகள் வளம் பெறவும்,





நிலத்தடி நீர் சேமிப்புகளைப் பயன்படுத்தவும் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும் வல்லுநர் குழு அமைப்பதை வரவேற்கின்றேன். ஆறுகள், சிற்றாறுகள், ஓடைகளில் வீணாகும் நீரைத் தடுத்து தடுப்பணைகள்மூலம் நீரைச் சேமிப்பது, வேளாண்மை மற்றும் குடிநீர்த் தேவைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டம் வகுப்பது மிக மிக அவசியமானது.

2005 ஆம் ஆண்டு பெய்த கன மழையில் கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் 3 இலட்சம் கன அடிக்கு மேல் நீர் திறந்துவிடப்பட்டது. கல்லணையிலிருந்து அணைக்கரை வரை கொள்ளிடக் கரையின் இரண்டு கரைகளையும் பலப்படுத்தி உயர்த்த வேண்டும். ஆற்றின் கரைப் பகுதிகளையொட்டி மண் எடுத்து செங்கல் சூளை அமைப்பதால் ஆற்றின் கரைகள் வலு இழந்து உடைப்பு ஏற்படுகிறது. இதனைத் தடுக்க கரைகளிலிருந்து குறிப்பிட்ட தூரம் செங்கல் சூளை அமைப்பதைத் தடுக்க வேண்டும். தனியார் பட்டா நிலமாக இருந்தாலும், அனுமதிக்கக்கூடாது. கல்லணைக் கால்வாயின் கரைகள் வலு இழந்து அடிக்கடி வெள்ளப் பாதிப்பு ஏற்படுகிறது. பூதலூர், தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, பேராவூரணிவரை பாசனம் கொண்ட பகுதிகள் இவ்வாறு அவசியமாக சீரமைக்கப்பட வேண்டும்.

21-1-2008 அன்று நபார்டு வங்கி அதிகாரிகளும், பொதுப் பணித் துறை பொறியாளர்களும், நானும் ஆய்வுப் பணிக்குச் சென்றிருந்தோம். சுமார் 175 கோடி ரூபாய் நிதி வழங்குவதற்கு நபார்டு வங்கியினுடைய அதிகாரிகள் பரிந்துரைப்பதாக அறிந்தேன். எனவே, பொதுப் பணித் துறை பணியை எடுத்து சிறப்பாகக் கல்லணைக் கால்வாயை நவீனப்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தியாவில் முதன்முறையாக நபார்டு வங்கியும் வணிக வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் இணைந்து, கிராம ஏற்புத் திட்டம் என்ற திட்டம் 2007 மே 27 ஆம் நாள் மாண்புமிகு மத்திய நிதித் துறை இணை அமைச்சர் அவர்களால் பூதலூரில் தொடங்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் கிராமத்திலுள்ள ஏரி, குளங்களைத் தூர் வாருவது, பாசன வடிகால்கள் வெட்டுவது, சாலை, மருத்துவ வசதி போன்றவற்றுக்கு வங்கிமூலம் முதலீடு செய்து மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

பூதலூர் ஒன்றியத்திலுள்ள கட்டளைக் கால்வாய், அதைச் சார்ந்த ஏரிகள், உய்யக்கொண்டான் வாய்க்கால், அதைச் சார்ந்த ஏரிகள் என நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகள், குளங்கள், ஊருணிகள் உள்ளன.

கரைகளைப் பலப்படுத்தி, பாசன வடிகால்களைப் பராமரித்து, பாசனத்திற்கு நீரைப் பெறுகின்ற அதேவேளையில், நிலத்தடி நீரைச் சேமிக்கின்ற பயனையும் நாம் அதிகமாகப் பெறலாம். எனவே, பொய்யப்படி ஏரியில் மாற்று வழி வாய்க்கால் திட்டமான by-pass channel வெட்டுகின்ற திட்டத்தை பொதுப் பணித் துறையினர் விரைந்து, துரிதப்படுத்தி நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, வாழவந்தான்கோட்டை ஏரியில் by-pass channel வெட்டித் தந்து அந்தப் பகுதியினுடைய ஏரிகளுக்குப் பாசனம் பெறுகின்ற அந்தப் பணியினை பொதுப் பணித் துறை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திருவையாறு, பூதலூர் பகுதிகளில் மழைக் காலங்களில் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் வெள்ளம் ஏற்படுத்துகின்ற சோழகன்பட்டி ஏரி, அய்யனாபுரம் ஏரி, தோகூர்-வேங்கூர் பகுதிகளை வெள்ளம் ஏற்படுத்தும் அடப்பப்பள்ளம் siphon சரி செய்வது, கோணக் கடுங்கலாறு, தூரியாறு, வடிகால்களைத் தூர் வாரி வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வது அவசியமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, தலைமுறை தலைமுறையாக அவர்கள் கடனாளிகளாய் இருந்ததை உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல 7,000 கோடி ரூபாயை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்றைக்கே உத்தரவிட்டு, கடனைத் தள்ளுபடி செய்தார்கள்.

முற்பகல் 11-05

கூட்டுறவுத் துறை அதிகாரிகள், ஒவ்வொரு விவசாயிகளின் இல்லத்திற்கும் சென்று, நீங்கள் வாங்கிய கடன் இவ்வளவு, அதற்குரிய வட்டி இவ்வளவு என்பதைக் குறித்துச் சொல்லி இந்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது முதலமைச்சர் அறிவிப்பால் என்று ஒவ்வொரு இல்லமாகக் கொடுத்து வந்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் உரிய நேரத்தில், உரிய முறைப்படி விவசாயத்திற்கு விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் விவசாயிகளுக்கு தி.மு.க. அரசு ஏதும் செய்யவில்லை என்றும், கூட்டுறவுக் கடன் வழங்கவில்லை என்றும், இம்மாமன்றத்திலும், மன்றத்திற்கு வெளியிலும் அறிக்கை, ஆர்ப்பாட்டம், போராட்டம், உண்ணாவிரதம் என்று அறிவிக்கின்றனர். மாண்புமிகு முதலமைச்சர்





அவர்கள் கொண்டுவந்த இந்தத் திட்டத்தின் மூலமாக தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறந்த இரண்டு விவசாயிகள் பெற்ற கடன் தள்ளுபடியையும், அதைத் தொடர்ந்து அவர்கள் கடன் பெற்றதையும் இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவர், திரு. கு. தங்கமுத்து, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தினுடைய முன்னாள் தலைவர், அண்ணா தி.மு.க.வினுடைய மாவட்ட அவைத் தலைவர்; அவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த அந்தக் கூட்டுறவு தள்ளுபடிக் கடனில், ரூ. 4 லட்சத்து 22 ஆயிரத்து 740 ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்த வங்கியினுடைய பெயர் திருநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி. அந்த வங்கியில் அவர் பெற்ற கடனான 4 இலட்சத்து 22 ஆயிரத்து 740 ரூபாய், முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதே திருநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் திரு. தங்கமுத்து அவர்களுடைய குடும்பத்தார், 2006-2007 ஆம் ஆண்டிற்கான கடன் வாங்குகின்ற அந்த நிலையில் 2-8-2006 ஆம் நாள், ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 427 ரூபாய் கடன் பெற்றிருக்கிறார்கள். இதற்கான ஆதாரம் இதிலே இருக்கிறது.

அதேபோல, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர் திரு. துரை பாலகிருஷ்ணன் அவர்களுக்கு, கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் ஈச்சங்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில், ஒரத்தநாடு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில், ஆக மொத்தம் ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 622 ரூபாய்க்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல அவர், 2006-2007 ஆம் ஆண்டு, ஈச்சங்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 26-8-2006 ஆம் நாள் 52 ஆயிரத்து 210 ரூபாய் பயிர்க் கடன் பெற்றுள்ளார். இது வங்கியிலே அவர்கள் வாங்கியிருக்கிற கடனிற்கான ஆதாரம். ஆனால் நிலைமை என்னவென்றால், அவர்கள் தலைமையிலே விவசாயிகள் ஆர்ப்பாட்டம், அதேபோலப் போராட்டம், உண்ணாவிரதம் என்று அவர்கள் உண்மைக்குப் புறம்பாக இந்த மன்றத்திலும் பேசுகிறார்கள், வெளியிலேயும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்தக் கடன் தள்ளுபடித் திட்டத்தைக் கொச்சைப்படுத்தி, கூட்டுறவு வங்கிக் கடனைக் கொடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கடந்த டிசம்பர் மாதத்தில் 5 நாட்கள் மிகப் பெரிய மழை பெய்தது. அது தேவையான மழையும்கூட. இப்போது மேட்டூரிலே

[திரு. துரை சந்திரசேகரன்] [2008 ஜனவரி 28

தண்ணீர் இருப்பதற்குக் காரணமாக அந்த மழை அமைந்தது. இந்த 5 நாட்களில் மிகப் பெரிய மழை பெய்து, தஞ்சை மாவட்டத்தினுடைய பல பகுதிகளில் ஏரிகள், குளங்கள் எல்லாம் நிரம்பி இருந்தன; ஒருசில பகுதிகளிலே வெள்ளம் ஏற்பட்டு, பாதிப்பு ஏற்பட்டது உண்மை. மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் நேரடியாக வருகை தந்து, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எல்லாப் பகுதிகளுக்கும் நேரடியாக வந்து பார்வையிட்டார்கள். கல்லணை முதற்கொண்டு அவர்கள் பார்வையிட்டதன் பயனாக, தஞ்சை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் நேற்றையதினம் 2 கோடி ரூபாய்க்கு விவசாயிகளுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை இந்த 31 ஆம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, கடந்த 5 ஆண்டு காலத்தில் நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில் 13 இலட்சத்து 20 ஆயிரத்து 945 மெட்ரிக் டன்தான் அ.தி.மு.க. ஆட்சியிலே நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், கலைஞர் அரசால், 2007-2008, ஓராண்டில் 5 இலட்சத்து 81 ஆயிரத்து 820 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. சன்ன இரகத்தைப் பொறுத்தவரையில், 675 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, ஊக்கத் தொகையாக மத்திய அரசு 100 ரூபாய் வழங்கியது. நம்முடைய கலைஞர் அரசு மேலும் ஊக்கத் தொகையாக 50 ரூபாய் கொடுத்து, இப்போது விவசாயிகளுக்கு 825 ரூபாய்க்கு ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் விளைவித்த அத்தனை நெல்லையும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக அரசே கொள்முதல் செய்து, விவசாயிகளுடைய வாழ்விலே ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களுடைய பொருளாதாரத்தை வளர்த்து இருக்கிறது. அதேபோல, விவசாயிகளுடைய வாழ்வாதாரத்திற்குத் தேவையானதை வழங்க, வேளாண்மைத் துறை மூலமாகவும், கூட்டுறவுத் துறை மூலமாகவும், உணவுத் துறை மூலமாகவும், பொதுப் பணித் துறையின் மூலமாகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் ஏராளமான நிதியினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்து இப்பொழுது விவசாயிகள் வாழ்வில் ஒரு புதிய மறுமலர்ச்சியை, ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை.



2008 ஜனவரி 28] [திரு. துரை சந்திரசேகரன்]

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வோர் பட்டியல், Below Poverty Line (BPL) பட்டியல் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் இந்திரா காந்தி நினைவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முதியோர் உதவித் தொகைக்கு B.P.L. பட்டியலில் இருக்கிறதா என்று வட்டாட்சியர்கள் கேட்கின்றார்கள். அதேபோல 35 கிலோ அரிசி வழங்குகின்ற பட்டியலும் தவறாக இருக்கிறது. கடந்த ஆட்சியில் தவறான முறையில் எடுக்கப்பட்ட விவரங்களின் காரணமாக, பல பணக்காரர்கள், பல வசதிபடைத்தவர்கள் 35 கிலோ அரிசியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். நான் படித்த பட்டியலிலே இரண்டு பேர் இருக்கின்றார்கள். அது மாற்றியமைக்கப்படவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற வருவாய்த் துறை அதிகாரிகள், அதை எங்களால் மாற்றியமைக்க முடியாது என்கிறார்கள். எனவே அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, பட்டியலை மாற்றியமைக்கவேண்டும். வாய்ப்பு வசதி உள்ளவர்கள் குறைந்த விலையில், 2 ரூபாய்க்கு 35 கிலோ அரிசியை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதை மாற்றியமைக்க வேண்டும். அதேபோன்று group house வேண்டுமென்றால், B.P.L. பட்டியலில் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். O.A.P. வேண்டுமென்றால், B.P.L. பட்டியலில் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அந்தப் பட்டியல் முழுக்க முழுக்கத் தவறானது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பூதலூர் ஒன்றியத்தில் மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகின்றது. அது தனியார் டிரஸ்ட் வடிவத்தில் இருக்கிறது. அதற்கு ஏராளமான நிலங்கள், சுமார் 400 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அந்த மருத்துவமனையை அரசே எடுத்து நடத்தவேண்டும். அந்த 400 ஏக்கரையொட்டி, அரசாங்கத்தின் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மிகப் பெரிய தொழிற்புரட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காலத்தில், தஞ்சை மாவட்டத்து விவசாயக் குடும்பத்தின் பிள்ளைகள் வேலைவாய்ப்புப் பெறுகின்ற வகையில் I.T. Park அல்லது தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பாரம்பரியமிக்க தஞ்சை நகராட்சியை, மாநகராட்சியாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எல்லா சிறப்பும்

[திரு. துரை சந்திரசேகரன்] [2008 ஜனவரி 28

உள்ள திருவையாறு பேரூராட்சியை, நகராட்சியாகவும் அறிவித்து, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் போதிய கட்டட வசதி இல்லாததால், புதிய கட்டடம் ஒன்றையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த கவர்னர் உரையில் பல்வேறு அம்சங்களைக் குறிப்பிட்டு பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில், வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு முன்னோட்டமாக, எல்லாத் துறைகளுக்கும் சிறப்புக் கவனம் செலுத்துகின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு மேதகு ஆளுநர் உரையைத் தந்திருக்கிறது. எனவே இந்த உரை வெறும் காகிதப் பூ அல்ல, கலைஞர் அரசின் திட்டங்களைத் தெரிவிக்கின்ற திட்ட அறிக்கை என்று கூறி, இதை வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழையாக இறங்கி வந்தால் மண் மார்பு வலிக்கும் என்று மேகமாக இறங்கி வந்த மனித நேயத்தின் மறு பதிப்பு, மக்கள் தலைவி மாணிக்கத் தலைவி, மாசற்ற தலைவி, எங்களின் சிங்கநிகர்த் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை நன்றியோடு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிரியின் பாய்ந்து வருகின்ற ஈட்டி முனைக்குக்கூட மார்பு காட்டுகின்ற தீரர் கூட்டமாக, இங்கே அமர்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களில், எனக்கு இன்று பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய எங்களது வள்ளலின் வாரிசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவையிலே சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரையில், தமிழ்நாட்டு மக்களின் நலன் காப்பதையே தலையாய கடமையாகக் கொண்டும், இந்த அரசு பதவியேற்ற ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாகவே, தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து வருவதாகவும், தமிழ்நாடு மாநிலம் அமைதி மாநிலமாக விளங்கி வருவதாகவும் மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், வானவில்லில் கயிறு திரித்து



2008 ஜனவரி 28] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

நிலாவிலே சகடம் வைத்து மின்னலை உருக்கி வாளி செய்து பாதாள கங்கையை இறைக்கப்போவதாகச் சொல்லும் கவைக்குதவாத கற்பனையின் விற்பனைப் பட்டியலே ஆளுநர் உரை; ஈஸ்ட்மேன் கலரில் எக்ஸ்-ரே என்று தமிழக மக்களை நம்ப வைக்கும் உபயோகமில்லாத உரை; எதிர்காலத் தலைமுறையைப் பற்றி சிந்திக்காத எதற்கும் உதவாத கட்டுக் கதைகளின் கூட்டுத் தொகுப்புதான் ஆளுநர் உரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துப்பாக்கிக் குழலிலிருந்து வண்ணத்துப் பூச்சிகள் பறந்த, வன்முறையில்லாத, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை, ஆயுதக் கடத்தல், கொலை, கொள்ளை, வழிப்பறி, சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, தீவிரவாதம், பயங்கரவாதம், விடுதலைப் புலிகளின் ஊடுருவல், பால்ரஸ் குண்டுகள் கடத்துதல், RDX வெடிகுண்டுகள் கடத்துதல் ஆகியவற்றின்மூலம் ஆயுதக் காடாக இந்த அரசு மாற்றியுள்ளது.

(முற்பகல் 11-15

ஸ்காட்லாந்து போலீசுக்கு இணையாக இருந்த திறமையான துறை தமிழகக் காவல் துறை, கொலைகாரன், கொள்ளைக்காரன், காட்டுமிராண்டி சந்தன வீரப்பனை யாராலும் பிடிக்க முடியாது என்று கொக்கரித்தவர்களுடைய கொட்டத்தை அடக்கி, வீரப்பனுக்கு வக்காலத்து வாங்கியவர்களின் ஏளனங்களை, எள்ளி நகையாடிய எத்தர்களின் மனக்கோட்டைகளை, தூள் தூளாக்கி, தமிழகத்தின் ஜான்சி ராணி, மக்களுக்காக, மக்களின் நலனுக்காகவே வாழ்ந்து வருகின்ற எங்களின் சிங்கநிகர்த் தலைவியின் மதிநுட்ப ஆலோசனைப்படி தமிழகக் காவல் துறை வெற்றி நடைபோட்டு, வெல்வதற்கரிய வீரப்பனை வீழ்த்தி சரித்திர சாதனை நிகழ்த்திய தமிழக காவல்துறையை, ஈரல் கெட்டுவிட்ட காவல்துறை என்று கூறி, சென்னை மாநகராட்சியில் குப்பையை வார வைத்த பெருமை இந்த அரசையே சாரும்.

தமிழகத்தில் மக்களுக்குப் பாதுகாப்பில்லை. தமிழகத்தினுடைய பிரதான எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இல்லத்திற்கு, இரண்டு முறை மர்ம மனிதர்கள் உள்ளே நுழைந்ததற்குப் பிறகு, அவர்களைக் கைது செய்த காவல்துறை, அவர்களுக்குப் பைத்தியக்காரன் என்று பட்டம்சூட்டி விடுதலை செய்திருக்கிறது. இப்பொழுது தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்கள்மீது,

நிர்வாகிகள்மீது, பல்வேறு இடங்களிலே பொய் வழக்கு போடுகின்ற நிலைமையும், இப்பொழுது இருக்கின்ற காவல் துறை, ஆட்சி அதிகாரத்திலே இருக்கின்றவர்களின் ஏவல் துறையாக மாறி, பொய் வழக்குகளை புனையக்கூடிய நிலைமையும் தமிழகத்திலே உருவாகிக்கொண்டிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மேதகு ஆளுநர் அவர்கள், இந்த அரசு பதவியேற்ற ஒன்றரை ஆண்டுக் காலத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ பொய் வழக்கு போடுகிறார்கள், பொய் வழக்கு போடுகிறார்கள் என்கிறார். ஏதாவது ஒரு ஆதாரத்தோடு சொன்னால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். பொய் வழக்கு யார் ஆட்சியிலே போடப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். தலைவர் கலைஞர்மீதே பொய் வழக்கு போட்ட ஆட்சிதான் உங்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) வேடிக்கை என்னவென்றால், ஆட்சியிலே இருக்கின்றவரையில் கலைஞரை எதற்காகக் கைது செய்தார்கள் என்பதற்கு எப்.ஐ.ஆர். போடாத ஆட்சி உங்கள் ஆட்சி. எனவே, ஆதாரத்தோடு இன்னார்மீது பொய் வழக்குப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அரசாங்கத்திற்கு பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறீர்களா? திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, பொய் வழக்குகள் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள், எந்தப் பொய் வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன என்று கேட்டார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அரி போன்றவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக காலையிலே போராட்டம் நடத்துகிறபோது, இரவு நேரத்திலேயே அவர்கள் சட்டம்-ஒழுங்கை சீர்கெடுக்கிறார்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற பொய் வழக்கு எல்லாம் இருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதை எப்படிப் பொய் வழக்கு என்று சொல்கிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினரே சொல்கிறீர்கள், அவர் என்ன செய்தார் என்று. அது எப்படிப் பொய் வழக்காகும்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போராட்டம் அடுத்த நாள் காலையில். இரவோடு இரவாகக் கைது செய்தார்கள். போராட்டம் என்று சொன்னால், கஞ்சித்தொட்டி திறப்பது. கஞ்சித்தொட்டி திறப்பதே தவறு என்று சொன்னால் இந்த ஆட்சியிலே கைத்தறி நெசவாளர்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நாடே புரிந்துகொண்டிருக்கிறது. கஞ்சித் தொட்டி திறக்க. . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சி நடைபெற்றாலும் ஒரு போராட்டம் அறிவிக்கின்றபோது, அந்தப் போராட்டத்திலே யாராவது சில பேர் வன்முறைகளைத் தூண்டிவிடுவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்ற செய்தி, காவல் துறைக்கு வருமானால் Preventive arrest என்று arrest செய்வது வழக்கம். உதாரணத்திற்குச் சொல்கிறேன், உங்களுடைய ஆட்சியிலேயே நாங்கள் போராட்டம் அறிவித்தபோது, நாங்கள் இரவு 11-00 மணிக்கு தூங்கிக்கொண்டிருக்கிற நேரத்திலேயே Preventive arrest செய்தார்கள். Preventive arrest என்பது அரசியல்வாதிகள் போராட்டம் நடத்தக்கூடிய சூழ்நிலையில் வேறு ஏதாவது நிகழ்ச்சிகளிலே ஈடுபடுவார்களா, அமளியாகப் போராட்டம் நடத்துவார்களா என்று காவல் துறையினர் பார்க்கின்றார்கள். திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஏதாவது திட்டம் வைத்திருந்தால், அவர்களுக்குத் தெரிந்திருந்தால், Preventive arrest என்ற முறையில் கைது செய்திருக்கக்கூடும். இது பொய் வழக்கல்ல. இது அரசியலிலே எல்லா அரசியல் கட்சிகளும் சந்தித்த ஒன்று. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) குறைவது உங்கள் நேரம்தான். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொய் வழக்குகள் எங்கே போடப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2008 ஜனவரி 28

கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது பல வழக்குகள், பொய் வழக்குகள் தொடர்ந்தாலும், அனைத்தையும் தூள்தூளாக்கி நீதிமன்றத்திலே வெற்றி பெற்றவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Preventive arrest என்பது வேறு. பொய் வழக்கு என்பது வேறு. வழக்கைத் தொடுத்து அதை நடத்துவது என்பது வேறு. சற்றுமுன் இந்த வாதத்திலே சொன்னதைப்போல் போராட்டக் காலங்களில் அரசியல்வாதிகள் போராட்டத்தில் ஈடுபடாமல், முன்கூட்டியே கைது செய்யப்படுவது preventive arrest. ஆனால் ஒருவரைக் கைது செய்து remand வாங்கிக் கொடுத்து, கடைசி வரையில், ஆட்சியில் இருக்கிற வரையில், அவர்மீது குற்றச்சாட்டே கொண்டு வராமல் வீட்டிற்குப் போனீர்களே அதுதான் பொய் வழக்கு. கலைஞர்மீது போட்டதுதான் பொய் வழக்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதை அவரைச் சொல்லச் சொல்லுங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசும்போது அம்மாமீது பொய் வழக்குப் போட்டு, நீதிமன்றத்திலே விடுவிக்கப்பட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த அரசாங்கம் யார்மீதும் பொய் வழக்கு போடவில்லை. டான்சி வழக்கிலே, நிலம் வாங்கியதிலே ஒரு வழக்குப் போடப்பட்டது. ஆனால், உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்தபோது என்ன தீர்ப்புச் சொன்னார்கள் என்றால் அந்த நிலத்தை அரசாங்கத்திடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த நிலம் கொடுப்பதற்கு அதிகாரிகள் எல்லாம் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்றெல்லாம் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலே சொல்லப்பட்டு கடைசியாக என்ன



2008 ஜனவரி 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

காரணத்தினாலோ அவர்கள் விடுவிக்கப்பட்டார்களே தவிர, ஒரு அரசாங்கத்தினுடைய நிலம் வாங்கப்பட்டதற்குப் பிறகு அரசாங்கத்திடம் திருப்பிக் கொடு என்பது என்ன தீர்ப்பு? ஆக, இப்படித்தான் தீர்ப்பு வழங்கப்பட்டதே தவிர, அவர் நிரபராதி என்று தீர்ப்பு வழங்கிவிடவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பொன்முடி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள்மீது போடுவது மட்டும் பொய் வழக்கல்ல. தன் கட்சிக்காரர்கள்மீதே, செரீனாமீது கஞ்சா வழக்கு; வளர்ப்பு மகன்மீது கஞ்சா வழக்கு. பொய் வழக்குகளைப் போட்டதற்குப் பட்டியல் எடுக்க வேண்டுமென்று சொன்னால் கடந்த கால ஆட்சியில் உங்கள் ஆட்கள்மீது நீங்கள் போட்ட வழக்கையே நிறைய எடுக்க முடியும். தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் மேலே போட்டது. சுதாகர்மீது போட்ட case. ஆக, பொய் வழக்குக்கு முதலில் முகவுரை எழுதியதே உங்கள் ஆட்சிதான். பண்ணுகிறவர்களும் நீங்கள்தான். இந்த ஆட்சியிலே பொய் வழக்கே கிடையாது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு. . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொய் வழக்கைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையான வழக்கு எது என்றால், அதையும் சொல்கிறேன். பொள்ளாச்சி ஜெயராமன் மேலே போட்டிருக்கிறோமே, பொதுப் பணித் துறை விருந்தினர் மாளிகையிலே போய் அக்கிரமம் பண்ணினார் என்று, அதுதான் உண்மையான வழக்கு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையான வழக்கு ஜெயராமன்மீது போடப்பட்ட வழக்கு என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையான வழக்கு என்று சொன்னால்—P.C.R. Act-ல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. ஒருவர்மீதல்ல, 48 பேர்மீது. 48 பேரும் அவரைப் பற்றிக் கொச்சையாக, அவருடைய ஜாதியைப் பற்றிக் குறிப்பிட்டதாகச் சொல்லியிருப்பது உண்மையிலேயே இதைவிட பொய்யான case-ஐ எவராலும் தொடுத்திருக்க முடியாது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப்போல.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆட்சியில் போடப்பட்ட உண்மைக்கு மாறான வழக்கை நீங்களே வாபஸ் பெற்றுக் கொண்டீர்கள் என்று இங்கே சொல்லப்பட்டது. எங்கள் ஆட்சியில், சில முன்னாள் அமைச்சர்கள்மீது புகார் வந்ததையடுத்து அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. விசாரணையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில் நீங்கள் ஆட்சிக்கு இன்றைக்கு வந்திருக்கிறீர்கள். ஆனால், உண்மையிலேயே நீங்கள் குற்றமற்றவர்களாக இருந்திருந்தால் அந்த வழக்கை விசாரணை நடத்தி, வழக்குக்கு உட்படுத்தி, தீர்ப்பின்படி நிரபராதி என்று நிரூபித்திருக்க வேண்டும். ஆனால், கொல்லைப்புற வழியாக அந்த வழக்கை வாபஸ் வாங்கியது நீங்கள்தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரும் வாபஸ் வாங்கவில்லை. (குறுக்கீடு) யாரும் வாபஸ் வாங்கவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் முன்னாள் அமைச்சர்கள்மீது சொத்துக் குவிப்பு வழக்குகள் என்று சொல்லப்பட்டு சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. சில வழக்குகள் நீதிமன்றத்திலே இருந்தன. ஆனால், மாண்புமிகு முன்னாள் அமைச்சர்கள்—நம்முடைய துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும்—என்னுடைய வீடு ரெய்டு செய்யப்பட்டது. பொதுப் பணித் துறை அமைச்சர், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர், இப்படிப் பல அமைச்சர்களுடைய வீடுகள் ரெய்டு செய்யப்பட்டது தெரியும். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் மீதெல்லாம் வழக்கு. ஆனால், எங்கள்மீது போடப்பட்ட வழக்குகளிலே, என்மீது உங்கள் ஆட்சிக் காலத்திலேயே





ஆதாரம் இல்லையென்று, வழக்கு போடவில்லை. நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர்மீது ஒரு வழக்கு போட்டீர்கள். நீதிமன்றத்திலே அதற்கான ஆதாரம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். அதைப்போலவே, பொதுப் பணித் துறை அமைச்சர்மீது போடப்பட்ட வழக்கு நீதிமன்றத்திலே தள்ளுபடி செய்யப்பட்டதே தவிர, இந்த அரசாங்கம் வந்து யார் பேரில் இருந்த வழக்கும் திரும்பப் பெறவில்லை. நீதிமன்றங்கள்தான் அவர்களை விடுவித்து இருக்கிறது.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்மீது போடப்பட்ட வழக்கு கோர்ட்டிலே விசாரணை நடத்தி, நிரூபிக்கப்படவில்லை என்று நீதிபதியே தீர்ப்பு சொல்லி இருக்கின்றார்கள். அதனால் நீங்கள் சொல்வதுமாதிரி கொல்லைப்புறம் வழியாக வரவேண்டும் என்ற அவசியம் இல்லை. இப்போது உங்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்கில் நீங்கள் எப்படி முன் மாதிரி சொல்லியிருக்கிறீர்களோ, அதன்படி வழக்கு நடத்திதான் வெளியே வரவேண்டும், அதை நீங்கள் பின்பற்றுங்கள் போதும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. சார், நேரம் நெருங்கிவிட்டது.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. தேர்தல் அறிக்கை பக்கம் 32-ல் வரி எண் 4-ல் தமிழகத்தில் மொத்தம் உள்ள 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஒவ்வொரு ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் 2 ஏக்கர் நிலம் வழங்குவதாகக் கூறியிருக்கின்றீர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே சட்டமன்றத்தில் 2006 மே மாதம் 27 ஆம் தேதி பேசுகின்றபோது தமிழகத்திலே 55 இலட்சம் ஏக்கர் அரசினுடைய தரிசு நிலம் இல்லை என்றும், தமிழகத்திலே 3 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் மட்டுமே அரசினுடைய தரிசு நிலமாக இருப்பதாகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புள்ளி விவரத்தோடு, ஆதாரத்தோடு இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பதில் அளித்துப் பேசிய நீங்கள், தமிழகத்திலே கையளவு நிலம் இருந்தாலும்கூட அவற்றை நாங்கள் அளிப்போம் என்று முகாரி பாடியிருக்கின்றீர்கள். ஓன்றை நீங்கள் மறந்துவிட்டீர்கள். இன்றைய முதலமைச்சர் அவர்கள் சேப்பாக்கம் தொகுதியிலே தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக ஏப்ரல் மாதம்

11 ஆம் தேதி, சேப்பாக்கம் சட்டமன்றத்தினுடைய வேட்பாளராக பொதுமக்களைச் சந்தித்து வாக்குகளைச் சேகரிக்கின்றபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்தபோது தமிழகத்திலே 5.5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டு, அந்த நிலங்களைத் தமிழக மக்களுக்கு வழங்குவதாக இருந்த நேரத்தில், தி.மு.க.வினுடைய ஆட்சி முடிவுக்கு வந்தது என்று சொல்லி இருக்கிறார். அதற்கான ஆதாரம் இங்கே இந்த முரசொலி பேப்பரிலே இருக்கிறது என்பதை நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*(உறுப்பினர் நாளிதழை அவையில் காண்பித்தார்)*

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 2001-2002 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே நீங்கள் சொல்லியதனால் நாங்களும் அதையொட்டி, தமிழகத்திலே 5.5 இலட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். அது தவறு. முதலிலே தமிழகத்திலே 5.5 இலட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொல்லி இருப்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலே வேட்பாளராகப் போட்டியிட்டபோது, மக்களைச் சந்திக்கின்றபோது சொல்லியிருக்கிறார் என்பதற்கான ஆதாரம் முரசொலி பத்திரிகையில் ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி வெளிவந்திருக்கிறது என்பதை இந்தச் சட்டமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நிறைவேற்ற முடியாத திட்டத்தை ஏன் நீங்கள் எங்களால் தொடர்ந்து செய்ய முடியும் என்று தவறான கருத்துகளை மக்கள் மத்தியிலே பரப்பிக்கொண்டு வருகிறீர்கள்?

ஆளுநர் உரையில், பக்கம் 12-ல் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, அவற்றை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 1 இலட்சத்து 38 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இந்த அரசு இலவசமாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலே நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் 86 இலட்சம் பேர் இருக்கின்றார்கள். ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் முடியப் போகிறது. இன்னும் இருக்கின்ற குறை காலத்தில், இருக்கின்ற 85 இலட்சம் ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வீதம் இந்த அரசு வழங்குமா? இதுவரை தரிசு நிலங்களைப் பண்படுத்தியது யார்? வேளாண்மைத் துறையா, வருவாய்த் துறையா, வேளாண்மை பொறியியல் துறையா





அல்லது நிலமற்ற விவசாயிகளா என்பதை இந்த அரசு தெளிவுபடுத்த வேண்டும். அதேபோல் இதுவரை வழங்கியுள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கமாவது இதுவரையிலே 1 இலட்சத்து 38 ஆயிரம் பேருக்கு 1.61 இலட்சம் ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டு, இன்னும் சொல்லப்போனால், திருவள்ளூருக்குப் பக்கத்திலே போய் பார்த்தால் முதலமைச்சர் நிலம் வழங்கியபோது சீர்திருத்தப்பட்டு, அங்கே bore well போட்டப்பட்டு, மின் இணைப்பு கொடுக்கப்பட்டு sprinkler மூலமாக நீர் இறைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நிலம் வழங்கினார்கள். அந்த விவசாயிகள் பெற்றிருக்கின்ற நிலம் ஒவ்வொரு ஏக்கரும் ரூ.5 இலட்சம், 6 இலட்சம் விலை போகும் என்று அந்தப் பக்கத்திலே இருக்கிற விவசாயிகளே தெரிவிக்கின்றார்கள். நான் கேட்க விரும்புவது எங்களுடைய முரசொலியிலே வந்ததைப் பார்த்துத்தான் நாங்கள் 2001 ஆளுநர் உரையிலே 5.5 இலட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாக நாங்கள் சொன்னோம் என்கிறீர்கள். முரசொலியிலே வந்ததையெல்லாம் நீங்கள் அப்படியே பின்பற்றுகிறீர்களா?

*முற்பகல் 11-30*

இன்னொன்று, நாங்கள் இந்த அளவிற்காவது நிலங்கள் கொடுத்திருக்கின்றோம். ஆனால், நீங்கள் 5.5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருப்பதாக முரசொலியிலே வந்ததையே ஏற்றுக்கொண்டு சொல்லியிருந்தால்கூட, தமிழ்நாட்டிலே உங்களுடைய ஆட்சியிலே எத்தனை பேருக்கு, நிலமற்றவர்களுக்கு ஏழை விவசாயிகளுக்கு நாங்கள் கொடுத்ததைப்போல பண்படுத்தி அவர்கள் பயிரிடக்கூடிய அளவுக்கு செடிகளையும் வைத்து கொடுத்திருக்கின்றீர்கள் என்பதை நீங்கள் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிலமில்லாத ஏழைகளுக்கு, நிலம் வழங்குகின்ற திட்டத்தை தமிழகத்திலே, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு

[திரு. இ. பெரியசாமி] [2008 ஜனவரி 28

நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றிலே குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சியினுடைய தலைவியினுடைய ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியிலே மட்டும் நிலமற்ற ஏழைகளுக்கு 534 ஏக்கர் நிலம் இதுவரை வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை மறுக்க முடியுமா? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலமே வழங்கவில்லையென்று சொன்னார்கள். அவர்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர், எதிர்க்கட்சியினுடைய தலைவியினுடைய சட்டமன்றத் தொகுதியிலே மட்டும் 534 ஏக்கர் நிலம் நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலங்காலமாக தமிழகத்திலே பின்பற்றி வருகின்ற நடைமுறையை இங்கே தெரிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சி காலத்திலே 5 ஆண்டு காலத்திற்கே—காலங்காலமாக பின்பற்றி வருகின்ற முறை இருக்கின்றது. ஆனால், கடந்த ஆட்சி காலத்திலே, 5 ஆண்டு காலத்திலே-- அதிகபட்சமாக மொத்தம் 5,000 ஏக்கர் நிலம்கூட வழங்கப்படவில்லை. தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான் அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 5 ஆண்டுகளிலும் மொத்தமே 5,000 ஏக்கர் வழங்கப்பட்டது என்பதை அறுதியிட்டுச் சொல்கிறாரா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** நான் சொல்வது அதிகபட்சமாக, மொத்தம் 5 ஆண்டு காலத்திலே 5,000 ஏக்கர் தான் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குகின்ற திட்டத்திலே நீங்கள் வழங்கியிருக்கின்றீர்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன். சுமார் 5,000 ஏக்கர்தான் வழங்கப்பட்டிருக்கிறது கடந்த ஆட்சி காலத்திலே.



2008 ஜனவரி 28]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை கடந்த சட்டமன்றத் தொடரில் எழுப்பப்பட்டு அதற்கு புள்ளிவிவரங்கள் மூலமாக— ஏற்கெனவே நாடு சுதந்தரம் அடைந்த காலத்திலேயிருந்து ஒவ்வொரு வருடமும் ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் அல்ல, 3 ஏக்கர் நிலம் வரை நாம் வழங்கியிருக்கிறோம். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் ஒவ்வொரு வருடமும், எந்தெந்தமாதிரி, எவ்வளவு நிலங்கள், எத்தனை விவசாயிகளுக்கு, எத்தனை ஏக்கர் வழங்கப்பட்டிருக்கிறது என்று விவரமாகச் சொல்லியிருக்கின்றேன். புள்ளிவிவரங்கள் என்னிடம் தற்சமயம் இல்லை. ஆனால், ஐந்து வருடமும் 15,000-லிருந்து 30,000 ஏக்கர் வரை வழங்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 5 ஆண்டுகளில் எவ்வளவு நிலம் வழங்கப்பட்டிருக்கின்றது என்கின்ற விவரத்தை நாளை நான் உங்களுக்குத் தருவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், 5,000 ஏக்கர் அல்ல என்பதும் அதற்குமேலாக 4 மடங்கு, 5 மடங்கு வரும் என்பதை மட்டும் நான் இங்கே தெளிவுபடக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவரிடம் ஒரேயொரு வினாவிற்கு மட்டும் விடையை எதிர்பார்க்கின்றேன். இவர்களுடைய ஆட்சி காலத்திலே ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு வழங்கப்படும் என்று சொன்னார்கள். 5 ஆண்டு காலத்திலே எத்தனை பேருக்கு வழங்கினார்கள் என்கின்ற விவரத்தைத் தரமுடியுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் ஒரு நிமிடம் எடுத்துக் கொண்டு பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப் பாடமாக்குவதற்காக சட்டம் இயற்றப்பட்டு அனைவரும் தமிழ் பயில இவ்வரசு வழிவகுத்துள்ளது என்று பக்கம் 9, பத்தி 12-ல் கூறும் இந்த அரசு, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இளநிலை வேளாண்மை பாடத் திட்டத்தில் மொழிப் பிரிவில் தமிழ் மொழிப் பாடம் நீக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு கல்வி ஆண்டு முதல் தமிழ் மொழி பாடத் திட்டத்திலிருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டு உள்ளது என்பதை தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக நான் அறிந்துள்ளேன். இன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து.

[2008 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** நீங்கள் எல்லாம் என் நேரத்தை எடுத்துக்கொண்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 30 நிமிடங்கள் முடிந்து விட்டன. Interruption வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குறுக்கீடுகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

முற்பகல் 11-35

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** அதேபோல் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 27 உதவிப் பேராசிரியர்களும், ஒரு உதவி நூலகரும் நியமனம் செய்யும்பொருட்டு 2007-ல் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு நேர்காணல் நடத்தி கடந்த செப்டம்பர் மாதத்தில் பணி நியமனம் செய்யப்பட்டனர். 28 நபர்களுக்குப் பதிலாக 40 உதவிப் பேராசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் விசேஷம் என்னவென்றால், ஒரு பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டுமானால், தேசிய தகுதித் தேர்வு (National Eligibility Test) தேவை என்பது அடிப்படை விதி. ஆனால், இந்த விதிமுறைகள் மீறப்பட்டு, தேசிய தகுதித் தேர்வு எழுதியவர்கள் நேர்காணலில் கலந்துகொண்டிருந்தாலும்கூட, அவர்களைத் தேர்வு செய்யாமல், தகுதி இல்லாதவர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்தப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற Director of Planning and Monitoring பதவியில் உள்ள ஒருவர் இங்கே தலைமைச் செயலகத்திலே அயல் பதவியிலே இருக்கின்ற காரணத்தினால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினுடைய நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், தமிழகத்தினுடைய வேளாண்மைத் துறை, சீரமைப்பு என்ற பெயரில் சீரழிக்கப்பட்டிருக்கிறது. 3,500 ரூபாய் Basic Pay உள்ள V.A.O. பதவிகள்கூட தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்படும்போது (மணியடிக்கப்பெற்றது) ரூபாய் 4,500 Basic Pay உள்ள A.A.O.பதவிகள். . .



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு) 35 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன், interruption எல்லாம் சேர்த்து. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசும்போது நிறைய நேரம் கொடுப்போம், winding up speech-ல். Mr. Ramakrishnan.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரை விவாதத்தில் கலந்துகொள்வதில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேச ஆரம்பித்துவிட்டார். உங்கள் கூட்டணியில் இருக்கிற அவர் தவறாக நினைப்பார். (குறுக்கீடு) Grace time தரப்படுகிறது.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** ரூபாய் 4,500 Basic Pay உள்ள A.A.O. பதவிகள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மத்திய அரசின் திட்டமான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் தமிழ்நாட்டிலே 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர்கூட இந்தத் திட்டம் சரியான முறையில் செயல்படவில்லை என்று கூறி இந்தத் திட்டத்தையே இரத்து செய்யலாமா என்று கூறியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைச் சொல்கிறார். இந்தியாவிலே இந்தத் திட்டத்தை சரியாக அமல்படுத்தவில்லை என்று சொன்னாரே தவிர, இந்தத் திட்டம் தமிழ்நாட்டிலே மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாகச் செயல்படுகிறது என்று திட்டக் கமிஷன் துணைத் தலைவர் சொல்லியிருக்கிறார்.

[2008 ஜனவரி 28

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** தமிழ்நாட்டிலே உரத் தட்டுப்பாடு, கந்து வட்டி, லாட்டரிச் சீட்டு விற்பனை, கஞ்சா, சாராயம், போதைப் பொருட்கள் விற்பனை அமோகமாக நடந்து கொண்டிருக்கிறது. அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி விலைகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன என்று உங்களுடைய கூட்டணிக் கட்சியான பா.ம.க.-வே செயற்குழுவில் தீர்மானம் போட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரை விவாதத்தில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முதலில் சமீபத்தில் என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற சில சம்பவங்களை இங்கே குறிப்பிட்டுவிட்டு விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

கம்பம் தொகுதி உத்தமபாளையத்தில் 80 ஆண்டுகளுக்கும் மேலான சார்பு நீதிமன்றம் இருக்கிறது. அது மிகவும் பழமையானது, மண்ணால் கட்டப்பட்டது, இடிந்து விழக்கூடிய அபாயத்தில் இருக்கிறது. நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், உயிருக்குப் பயந்து அச்சத்தோடு அங்கே பணியாற்றுகிறார்கள். சமீபத்தில் அந்த மேற்கூரையைப் பிரித்து குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாட்டு வெடித் துப்பாக்கிகள், ஆவணங்கள் திருடப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் கருத்தில்கொண்டு, ஏற்கெனவே உத்தமபாளையம் அனுமந்தம்பட்டியில் ஒரு ஏக்கர் 60 சென்ட் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளாக கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று முயற்சிக்கப்படுகின்றது. இந்தச் சூழலில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதிநிலை அறிக்கையில் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு நிதியினை ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக கம்பம் தொகுதியில் 30-வது வார்டில் ஆங்கூர்பாளையத்தில் 2,000 குடும்பத்திற்கு மேல் வசிக்கின்றார்கள். மக்கள் வசிக்கின்ற. . .

**THIRU S. PETER ALPHONSE:** On a point of order.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன point of order?

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே விவாதம் நடக்கும்போது அழைக்கப்படுகின்ற உறுப்பினர்கள், தங்கள் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையிலே அழைக்கப்படுகிறார்கள்.

முற்பகல் 11-40

பிரதான எதிர்க்கட்சி பேசி முடித்தவுடனேயே அதற்கு அடுத்த பெரிய கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலிருந்து உறுப்பினர் பேச அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அந்த வரைமுறை பின்பற்றப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வது உண்மை. எப்போதும் எதிர்க்கட்சி பேசியவுடனே அடுத்து காங்கிரஸ் கட்சிக்குத்தான் வாய்ப்புத் தர வேண்டும். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் பேசுவதாக இருந்தார். அவர் இன்று வெளியூருக்குச் செல்கின்ற காரணத்தினாலே முதலில் என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள் என்று கேட்டார். அதற்காகத்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறாரே தவிர, காங்கிரசைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அதைப்போலவே நம்முடைய சிவபுண்ணியம் அவர்களும் கேட்டார்கள். அவருக்கும் அந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அவர் பேசி முடித்தவுடனே அடுத்து காங்கிரஸ் கட்சிக்குத்தான் அந்த வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஓர் உறுப்பினருடைய சில அசௌகரியங்களைப் புரிந்துகொண்டு விட்டுக் கொடுப்பதிலே காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அவரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசுவதற்கு முன்னாலேயேகூடப் பேச அழைத்திருக்கலாம். (குறுக்கீடு) அதாவது எங்கள் ஊரிலே ஒரு பழமொழி சொல்வார்கள்; 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்று சொல்வார்கள். அதைப்போல எதற்கெடுத்தாலும் காங்கிரஸ் தலையிலே கை வைக்கின்றதைத்தான் எங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பெருந்தன்மையாக இதைப் பொறுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலேதான் இதைச் செய்தோம். எதிர்காலத்திலே இப்படித் தவறு நடக்காமல் பார்த்துக்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இந்தக் குறுக்கீடுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆனால், நீங்கள் வெளிநாட்டுக்குப் போகக்கூடாது. இங்கேயேதான் இருந்து பேச வேண்டும். *(சிரிப்பு)*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** 24 ஆம் தேதி இந்த அவையில் நடைபெற்ற ஒரு சம்பவம் எங்களுக்கு மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் பேசுகின்றபோது மலேசியாவிலே வாழ்கின்ற தமிழர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது தானே ஐயா சொல்லி முடித்தோம்!

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள்—இப்போது அவர்கள் இங்கே இல்லை, மருத்துவமனையில் இருக்கின்றார்கள். அவர் நலம் பெற்று வரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.-- அந்த நேரத்திலே அவர் சொன்ன கருத்து, மலேசியா சென்ற தமிழர்கள் பாஸ்போர்ட் இல்லாமல் சென்றார்கள். பாஸ்போர்ட் இல்லாத தலைவர்களோடு நீங்கள் கூட்டணி வைத்திருக்கின்றீர்கள் என்று சொன்னார்கள். இதிலே ஏதாவது நண்பர் கலைராஜன் பேசிய பேச்சுக்கும் அவர் பேச்சுக்கும் தொடர்பு இருக்கின்றதா? சம்பந்தப்பட்ட உறுப்பினர் நான். கேலியும் கிண்டலுமாக, நையாண்டியோடு, பரிகாசத்தோடு மறைமுகமாக எங்களுடைய தலைவர் வைகோவை இடித்துப் பேசுகிறபோது நான் வாய்ப்புக் கேட்டேன். அத்தோடு நிற்காமல் திருமதி யசோதா அவர்கள்





எழுந்து கள்ளத் தோணியில் போகின்றவர்களை எப்படிக் கைது செய்ய முடியும் என்று கேட்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மரியாதையும், என்னுடைய கௌரவமும் உங்களால்தான் காப்பாற்றப்பட வேண்டும். நானாக இங்கே வரவில்லை. ஒரு கட்சி அனுப்பி வைத்திருக்கிறது; அந்தக் கட்சியினுடைய தலைவர், எங்கள் தலைவர் வைகோ அவர்கள் என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவரைப்பற்றி இடித்துப் பேசுகின்றபோது, கேலியாகப் பேசுகின்றபோது, சம்பந்தப்பட்ட உறுப்பினர் என்ற வகையில் நான் வாய்ப்புக் கேட்கின்றபொழுது அந்த வாய்ப்பை நீங்கள் தர வேண்டுமா, தரக் கூடாதா? *(குறுக்கீடு)* என்ன நியாயம்?

***திருமதி டி. யசோதா:** துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான், கள்ளத் தோணியில் செல்கின்றவர்கள்மீது மத்திய அரசாங்கம் எந்தவகையான நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றித்தான் குறிப்பிட்டேனே தவிர, யார் கள்ளத் தோணியில் போனார்கள் என்று எனக்குத் தெரியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கள் அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்று சொல்லி அவர்களே வந்தார்கள் என்று சொன்னால் அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. நான் வை. கோபாலசாமி என்று பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை என்பதைத் தங்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உங்களைக் கேட்டுக்கொள்கிறார், உங்கள் சார்பாகப் பேசுகின்றாராம்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஏதோ எங்களை இகழ்ச்சியாகப் பேசுவதனால் நாங்கள் மகிழ்ச்சியை இழந்துவிட்டோம் என்று கருதிவிட வேண்டாம். ஒன்றை நினைவுபடுத்திப் பாருங்கள். 2004 ஆம் ஆண்டு கூட்டணியில் இருந்தபோது எங்கள் தலைவர் வைகோ அவர்களை காங்கிரஸ் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்ட தொகுதிகளுக்கெல்லாம் அழைத்துச் சென்று அவருடைய உழைப்பைப் பயன்படுத்தி வெற்றி கண்டபிறகு வாழ்க வைகோ! வாழ்க வைகோ! என்று வாழ்த்தினீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்னொன்றையும் சொல்கின்றேன், நீங்கள் ஏற்றுக்கொண்ட தலைவர் இந்த நாட்டின் பிரதமர், அவரே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு, I salute Mr. Vaiko என்று

சொன்னார்கள். மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே சொன்ன பிறகு—நீங்கள் கேலி பேசுங்கள், கிண்டல் பேசுங்கள்--கேலியும், கிண்டலும் பேசுவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் இந்தச் சட்டமன்றம் பட்டிமன்றமாக இருக்கும், முறையாக இருக்காது என்பதனை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள், சார். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கம்பம் இராமகிருஷ்ணன் அவர்கள் ஏன் இவ்வளவு உணர்ச்சிவசப்பட வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. இங்கே தனிப்பட்ட முறையிலே யாரையும், எந்த அரசியல் இயக்கத்தினுடைய தலைவரையும், நாம் விமர்சனத்துக்கு உட்படுத்துவதில்லை. ஒவ்வொரு அரசியல் கட்சியும், ஒவ்வொரு அரசியல் கட்சியினுடைய தலைவர்களும் தங்களுடைய கடந்தகால அரசியல் நடவடிக்கைகளுக்கும், தங்களுடைய கடந்தகால அரசியல் பேச்சுகளுக்கும் இந்த அவையிலே விமர்சனத்திற்கு உட்படுவதற்கான பொறுப்பிலே இருக்கிறார்கள், கடமைப்பட்டிருக்கிறார்கள். கள்ளத் தோணி என்று சொன்னால், தோணி ஒன்றும், ஒரு நாளும் கள்ளத் தோணி கிடையாது. அதில் ஏறிப் போனவர்களால்தான் அந்தத் தோணி கள்ளத் தோணி ஆகிவிட்டது. யாரையும் எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி. யசோதா அவர்கள் பெயரைக் குறிப்பிட்டோ, ஒரு அரசியல் கட்சியைக் குறிப்பிட்டோ எந்தவிதமான குற்றச்சாட்டும் சொல்லவில்லை. கள்ளத் தோணியிலே போகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்ன அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் இவ்வளவு உணர்ச்சிவசப்பட வேண்டிய தேவையில்லை.

கடந்த காலத்திலே காங்கிரஸ் கட்சி தேர்தல் பிரச்சாரத்திற்கு நம்முடைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் அவர்களை எங்கள் தொகுதிக்கு வாருங்கள். எங்கள் தொகுதிக்கு வாருங்கள், என்று அழைத்தீர்கள் என்று சொன்னார். கூட்டணியிலே இருந்தபோது கூட்டணியிலே இருக்கின்ற கட்சித் தலைவர்களை அந்தக் கூட்டணியில் இருக்கின்ற பிற கட்சிகள் தங்கள்



தொகுதிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வர அழைப்பது தவறா என்று அவர் சொல்லவேண்டும். ஏனென்றால், மாண்புமிகு நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்கூட இதே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தொகுதியிலே சென்று அவர்களுக்கு வாக்கு கேட்கிறார்கள். கூட்டணிக் கட்சியிலே இருந்தபோது வாக்கு கேட்டிருக்கிறோம். அதேநேரத்திலே, நண்பர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களுக்கு கடந்தகால சரித்திரத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவருடைய தலைவர் நமது இந்திய எல்லையைக் கடந்து வவுனியா பகுதிக்குள்ளே சென்றபோது அவரை உயிரோடு பாதுகாத்து மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கு அமரர் இராஜீவ் காந்தி அவர்கள் ஒரு நாள் இரவு முழுவதும் தூங்கவில்லை என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் என்னுடைய மாவட்டத்துக்காரர். நானும் அவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். எனக்கு மிக வேண்டியவர். உங்கள் பொதுச் செயலாளருடைய தாத்தா அவர்கள், நான் இருந்த மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவராக எனக்கு முன்னால் இருந்தவர். அப்படிப்பட்ட அந்த நல்ல நண்பர் இன்று உயிரோடு நல்ல திடமாக அரசியல் கட்சியிலே தமிழகத்திலே இருக்கிறார் என்று சொன்னால் அதற்கு மிகப் பெரிய காரணம் இராஜீவ் காந்தி என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, கடந்த காலங்களில் நடந்ததை நாம் ஒருவருக்கொருவர் அரசியல் கோணங்களில்தான் பார்க்கவேண்டுமேயொழிய அதிலே மாண்புமிகு உறுப்பினர், நண்பர் இராமகிருஷ்ணன் அவர்கள் உணர்ச்சிவசப்படுவதற்கு எந்தவித அவசியமும் இல்லை. அவர்களைப் புண்படுத்தவேண்டுமென்கிற எண்ணம் காங்கிரஸ் கட்சிக்கு இல்லை. அரசியல் ரீதியாக விமர்சனம் செய்யும்போது கடந்தகால அரசியல் சம்பவங்களை நாம் சுட்டிக்காட்டுவதற்காகவே கடந்தகால சம்பவங்கள் சிலவற்றை நினைவூட்டுகிறோம் என்கிற அளவிலேயே அவர் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், நீங்கள் ஆளுநர் உரைக்குப் போய்விடுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** உணர்ச்சிவசப்படவில்லை. (குறுக்கீடு) உணர்ச்சிவசப்படவில்லை. கள்ளத் தோணி என்கிற வார்த்தை உங்களை குறிப்பிடவில்லை என்று சொல்கின்றார்கள். பிற தலைவர்களையும், அவர்களுடைய பெயர் குறிப்பிடாமல், சம்பவங்களைத் தொடர்புபடுத்தி, மறைமுகமாக கேலி பேசலாம்.

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2008 ஜனவரி 28

அதற்குத் தமிழில் ஆயிரம் வார்த்தைகள் இருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எதிர்காலத்தில் ஒரு கட்சியையோ, அதன் தலைவர்களையோ மறைமுகமாக இதுபோன்று கேலியும், கிண்டலுமாகப் பேசுவதை இந்த அவையில் சட்டமன்ற பேரவைத் தலைவர் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டு அன்றைக்குப் பயன்படுத்திய அந்த சொற்றொடரை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொறுங்கள். அதற்கு நான் ruling கொடுக்கிறேன். கள்ளத் தோணி என்பது unparliamentary word அல்ல. அது அப்படியே இருக்கட்டும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா., வீராசாமி:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். எந்த உள் நோக்கத்தோடும் யாரையும் குறிப்பிட்டுத் தான் சொல்லவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராமகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்று சொல்கிறார். திருமதி யசோதா அம்மையார் அவர்கள் என்ன பேசினார் என்பதை இங்கே நான் படிக்கிறேன். அதில் யாரையாவது குறிப்பிட்டு இருக்கிறாரா? அப்படித் தவறான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றனவா என்பதைப் பார்க்கவேண்டும். யசோதா அம்மையார் அவர்கள் பேசியது, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்போர்ட் இல்லாமல் போகின்றவர்களைக் கண்டுபிடிக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்பதை நாங்கள் மறுக்கவில்லை. கள்ளத் தோணியில் செல்கின்றவர்களை எப்படிக் கைது செய்வது என்பதைத்தான் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். அவர் எந்தக் கட்சியையும், எந்தக் கட்சித் தலைவரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

*(முற்பகல் 11-50)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரு விஷயத்தைத் தொடர்புபடுத்தி, மறைமுகமாக கேலியும், கிண்டலுமாகப் பேசுவதை அனுமதிக்கக்கூடாது என்று சொல்கிறேன்.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், திரு. இராமகிருஷ்ணன். நேராக ஆளுநர் உரைக்குப் போங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத (குறுக்கீடு) . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அந்த நேரத்தையெல்லாம் கணக்கில் எடுக்கக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் நேரத்தில்தான் அதைக் கழித்துக் கொள்வோம். (குறுக்கீடு) திரு. வி.பி. கலைராஜன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அன்றைக்குக் குறிப்பிட்டது, மலேசியாவில் இருக்கிற மலேசியத் தமிழர்களைச் சொல்லவில்லை. இந்தியாவிலிருந்து மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருக்கிற சிறைகளிலே—இங்கிருந்து பாஸ்போர்ட்டோடுதான் போகிறார்கள். அது expire ஆகி Overstay என்கின்ற பெயரில்--பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கே இருக்கிறார்கள். பிஜி தீவிலே இந்தியர்கள் பாதிப்பில் இருந்தபோது, வட இந்தியாவைச் சேர்ந்த லல்லு பிரசாத் யாதவ் போன்றவர்களுக்கெல்லாம் வேகம் வந்து, உடனே அங்கிருந்து மத்திய அரசிடம் கூறி அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். அதைப்போல, இந்திரா காந்தி அம்மையார் பிரதம அமைச்சராக இருக்கிறபோது, சிங்கப்பூர், மலேசியா தமிழர்களை தனிக் கப்பல் மூலமாக அழைத்து வந்திருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்டவர்களை இந்த அரசாங்கம் விடுவிக்க வேண்டும், உங்களுடைய வழிகாட்டுதல்படி மத்திய அரசு நடக்கிறது என்று சொல்கிறீர்களே, அதைச் செய்யுங்கள் என்று சொன்னேன். கள்ளத் தோணி என்ற வார்த்தை வருவதற்கான காரணமே தேவையில்லாமல் வம்புக்காக இழுத்ததுதான் அது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படாத மின்சார வெட்டினால் தமிழ்நாடு இருண்டு இருக்கின்றது. ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது மின் உற்பத்தியையும், மின் நுகர்வோருடைய எண்ணிக்கையையும் பொறுத்துதான் குறியிடப்படுகின்றது. அந்த வகையிலே, 2007 ஆம்

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2008 ஜனவரி 28

ஆண்டு மார்ச் மாதம் இந்த அவையிலே நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருகின்றபொழுது அமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 10,011 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகின்றது. 8,300 மெகா வாட் மின்சாரம் அதில் பயன்படுத்தப்படுகின்றது--உண்மை--மீதமுள்ள மின்சாரம் வெளி மாநிலங்களுக்கு, பஞ்சாப், மராட்டியம் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது என்றெல்லாம் சொல்லிவிட்டு, தற்சமயம் மின் வெட்டிற்குக் காரணம், மின் மாற்றிகள் பழுதடைந்துள்ளதாலும், அதைத் தொடர்ந்து காற்றாலையில் காற்று முறையாகக் கிடைக்காததாலும், அனல் மின்சாரத்திற்கு நிலக்கரி கிடைக்காததாலும், மேலும் மத்தியத் தொகுப்பிலிருந்து போதிய மின்சாரம் நமக்குக் கிடைக்காததாலும், விவசாயத்திற்கு 18 இலட்சம் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதாலும், 10 இலட்சம் குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குவதாலும், பல இலட்சம் நெசவாளர்களுக்கு மின்சாரம் வழங்குவதாலும், 48 விழுக்காடு நிதிச் சுமை ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரத்தையும், மேலும் மின்சாரப் பகிர்மானத்தினால் 18 பர்சென்ட் மின்சார இழப்பு ஏற்படுகிறது என்ற விவரத்தையும் சொல்லிவிட்டு, இறுதியாக ஒன்றைச் சொன்னார்கள். கடந்த ஆட்சியில் புதிய மின் நிலையங்கள் துவக்கப்படவில்லை என்று சொன்னார்கள்.

நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், 2006 ஆம் ஆண்டு துவக்கத்தில் 10,011 மெகா வாட் மின்சார உற்பத்தி இருந்தது உண்மை. 2007-ல் நீங்கள் இந்த அவையிலே அறிவித்ததன்படி 10,011 மெகா வாட் மின்சார உற்பத்தி இருந்தது உண்மை. அண்ணா தி.மு.க. ஆட்சி என்றாலும் சரி, தி.மு.க. ஆட்சி என்றாலும் சரி, அந்த அனல் மின்சாரம், புனல் மின்சாரம், காற்றாலை அதே கட்டமைப்பில்தான் இருக்கின்றது. மின் உற்பத்தி குறைவதற்கு முதல் காரணம், முக்கியமான காரணம், காற்றாலை மின்சாரம் கிடைக்கவில்லை என்று சொல்கின்றார்கள். இந்த வருடம் காற்றாலையைப் பொறுத்தவரையில், காற்றாலையில் காற்றின் அளவு என்பது அதிகரித்திருக்கிறது. திறன் அதிகரித்திருக்கின்றது. காற்று வளமும் அதிகரித்திருக்கின்றது. இப்படி இருக்கும்போது, எந்தக் காரணத்தின் அடிப்படையில் அந்தக் காற்றாலையின் மூலமாக வரும் மின்சாரம் குறைந்திருக்கின்றது? நான் கேள்விப்பட்டதெல்லாம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமகிருஷ்ணன் கேட்கிறார், எந்த அடிப்படையிலே இந்த ஆண்டு இப்படி மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று? அவர் சொன்னதைப்போல நான் சொல்லவில்லை. விவசாயிகளுக்கு அதிகமாக மின்சாரம் கொடுக்கிறோம், இலவச மின்சாரம் கொடுக்கிறோம் என்று எங்கேயும் சொல்லவில்லை. அதனாலே மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம், நமக்கு டிசம்பர் மாதம், ஜனவரி மாதம் 15 ஆம் தேதி வரையில் காற்றின் மூலமாகக் கிடைக்கக்கூடிய மின்சாரம் கிடைக்கும். ஆனால் எதிர்பாராத விதமாக இந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து காற்று வீசாத காரணத்தால், காற்றின்மூலம் மின்சாரம் தயாரிப்பது தடைப்பட்டுவிட்டது. அதனாலே 1,200 மெகா வாட் மின்சாரம் நமக்கு பற்றாக்குறை ஏற்பட்டது என்று சொன்னேன்.

(முற்பகல் 11-55

இன்னொன்று கேட்டார்கள். இப்போது அதிகமாக மின்சாரம் தேவைப்படுவதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். கலைஞர் 2006 ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு 9 புதிய தொழிற்சாலைகள் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கின்றன. அவர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்தினுடைய அளவு 700 மெகா வாட். எனவே, 700 மெகா வாட் புதிதாக நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே, அதனாலேயும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட எப்படியும் இதைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய அரசாங்கம், அதிலும் குறிப்பாக முதலமைச்சர் டெல்லிக்குச் சென்றிருந்தபோது மத்திய அரசாங்கத்தோடு, பிரதமரோடு, அன்னை சோனியா காந்தியோடு பேசி மின்சாரம் வாங்கி வந்திருக்கிறார்கள். மேலும், அஸ்ஸாம், ஹரியானா போன்ற மாநிலங்களிலேயிருந்தும் மின்சாரம் பெற இருக்கிறோம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே கோடைக் காலத்திலே எந்தவிதமான இடர்பாடும் வராதபடி இந்த அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் இராமகிருஷ்ணன் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஜனவரி 28

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்றாலை மின்சாரம் குறைந்ததற்கு காற்றாலையில் கட்டமைப்பு தொழில்நுட்பரீதி இல்லை. அனல் மின்சாரத்திற்கு சில காரணங்கள் உண்டு. அனல் மின்சாரத்தில் குறைவான மின் உற்பத்திக்குக் காரணம் நான் கேள்விப்பட்டவரையில் அங்கே காலியாக உள்ள 4,000 தொழில்நுட்பப் பணியாளர்களை, மின் பொறியாளர்களை பணியமர்த்தாததாலும், உதவி மின் ஊழியர்களை பணியமர்த்தாததாலும் சரியான முறையில் பராமரிப்பு வேலை நடக்கவில்லை, பழுது பார்க்கவில்லை; அதனால் அந்த உற்பத்தி குறைந்தது என்றும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு யாரோ தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்கள். இப்பொழுதுகூட 300 உதவிப் பொறியாளர்களை இந்த அரசாங்கம் நியமித்திருக்கிறது. 21,600 ஒப்பந்தப் பணியாளர்களிலே 6,000 பேரை இந்த அரசு நியமித்து இருக்கிறது கடந்த ஆண்டு. இந்த ஆண்டு மேலும் 6,000 பேரை நியமிப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. நான் திடீரென்று யாருக்கும் சொல்லாமல் வட சென்னையிலே போய் ஒரு நாள் எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகிறது என்று பார்க்கின்ற நேரத்தில்--85 சதவிகிதம்தான் சராசரியாக, இந்தியாவிலே மின்சாரம் அனல் மின் நிலையங்களிலே உற்பத்தியாகும்—ஆனால், நான் போய்ப் பார்த்த அன்று 91 சதவிகிதம் மின்சாரம் உற்பத்தியாகியிருப்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். தினம்தோறும் எவ்வளவு உற்பத்தி செய்கிறார்கள் என்று ஒரு data வைத்திருக்கிறார்கள். உறுப்பினர் வேண்டுமானால் தூத்துக்குடிக்கோ, வட சென்னைக்கோ, எண்ணூருக்கோ அல்லது மேட்டூருக்கோ போய்ப் பார்த்தால் 85 % PLF என்பதைவிட அதிகமாக அனல் மின் நிலையங்களிலே மின்சாரம் உற்பத்திச் செய்யப்படுகிறதே தவிர, எந்த அனல் மின் நிலையத்திலேயும் இப்பொழுது குறைவாக மின்சாரம் உற்பத்திச் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிவிட்டது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்பொழுது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு எந்தவித புதிய மின் திட்டங்களையும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கின்றார்கள், அது தவறு. 2004 ஆம் ஆண்டு NLC, NTPC அதாவது Neyveli Lignite Corporation, National Thermal Power Corporation இந்த இரண்டு நிறுவனங்களோடு தலா ஆயிரம், ஆயிரம் மெகா வாட்—அதாவது வட சென்னையிலே ஆயிரம் மெகா வாட் NLC–யோடும், அதேபோன்று தூத்துக்குடியிலே ஆயிரம் மெகா வாட் NTPC–யோடும் அனல் மின் நிலையம் அமைத்து மின் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. பூர்வாங்க வேலைகளும் நடைபெற்றன. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே அடிக்கடி குறிப்பிடும்பொழுது வட சென்னையிலே 500 மெகா வாட் என்றுதான் குறிப்பிடுகிறாரேயொழிய ஆயிரம் மெகா வாட் என்று குறிப்பிடவில்லை. எனவே, என்னுடைய கேள்வி அந்த ஆயிரம், ஆயிரம் மெகா வாட், NLC, NTPC-யோடு புரிந்துணர்வு இரண்டு ஒப்பந்தங்கள் போடப்பட்ட அந்த நிலையில், அது இரத்து செய்யப்பட்டுவிட்டதா, இல்லை அதற்கான பூர்வாங்க வேலைகளைத் தொடருவதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்றார்களா, இல்லை வட சென்னையிலே 500 மெகா வாட் என்று அவர் அறிவித்து இருப்பது (மணியடிக்கப்பெற்றது) இந்த ஆயிரம் மெகா வாட்டைத் தவிர்த்தா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 500 மெகா வாட் என்று அறிவித்தது 2007 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பட்ஜெட் உரையிலே படிக்கின்ற நேரத்தில் புதிதாக வட சென்னையிலே, அதைப்போல மேட்டூரிலே 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று அறிவித்தார்கள், அதைத்தான் சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அம்மா ஆட்சியிலே 2004–லே தூத்துக்குடியிலேயும், வட சென்னையிலேயும் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ததாகச் சொன்னார்கள். 2004–லே அப்படி ஒரு திட்டம் தீட்டப்பட்டு அது

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 ஜனவரி 28

அமல்படுத்தப்பட்டு இருக்குமானால் இந்த 3 ஆண்டுகாலத்திலே மின்சாரம் நமக்கு வந்திருக்கும். ஆனால் மின்சாரம் வரவில்லை. அதற்குக் காரணம் நிர்வாகத்திலே தடை ஏற்பட்டது. அவர்கள் அறிவித்தது உண்மை, ஆனால் அமல்படுத்தவில்லை. ஆனால், இப்பொழுது நாம் வந்ததற்குப் பிறகு, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களே வந்து வட சென்னையிலே 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான அடிக்கல் நாட்டியிருக்கிறார். ஆகவே 1,000 மெகா வாட் என்பதற்குப் பதிலாக 1,500 மெகா வாட் மின்சாரம் மத்திய அரசாங்கத்தினுடைய N.T.P.C. மூலமாக உற்பத்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், 31 ஆம் தேதியன்றைக்குப் பேசிக்கொள்ளலாம். நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள்தான் ஆளுநர் உரைக்கு வர முடியாது என்று சொல்லிவிட்டீர்களே! நேரே மலேசியாவுக்குப் போய்விட்டீர்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. ராஜசேகரன். (குறுக்கீடு) உரையை முடித்துக்கொள்ளுங்கள். திரு. ராஜசேகரன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். 31 ஆம் தேதி வாய்ப்புக் கொடுத்துவிடலாம்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** நான் பேச முடியாது இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சபையிலே விவாதத்திலே கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்த சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பெரியவர் சுதர்சனம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவமனையில் இருக்கின்ற அவர் விரைவிலே குணமடைந்து, அவைக்கு வந்து பணியாற்ற, அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றேன்.



2008 ஜனவரி 28] [திரு. மா. ராஜசேகரன்]

என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற பல பிரச்சினைகளை முன்வைக்க எனக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலும் ஒரு சில கோரிக்கைகளை முன்வைத்து நான் விவாதத்தில் நுழைய விரும்புகின்றேன். நான் இதுவரையில் நான்கு முறை இந்தச் சட்டமன்றப் பேரவையில் பேசியிருக்கிறேன். நான்கு முறையும் என்னுடைய தொகுதியினுடைய மிக முக்கியமான பிரச்சினையாக ஸ்ரீராமசமுத்திரம் குறம்பு பற்றிப் பேசியிருக்கிறேன். காவிரி ஆற்றிலேயிருந்து தற்காலிகக் குறம்பு அமைக்கும்போது என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் சட்டமன்றத் தொகுதியிலும் இருக்கின்ற கிட்டத்தட்ட 11,000 ஏக்கர்கள் பாசன வசதி பெறுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் தற்காலிகக் குறம்பு அமைப்பதற்காக அரசு அதிக நிதி செலவிடுகிறது. ஆனால் வெள்ளம் வரும்போது குறம்பு அடித்துச் செல்லப்படுகிறது. நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து நீண்ட நாள் கோரிக்கையாக இந்தக் கோரிக்கை அந்த மக்களிடம் இருக்கிறது. ஆகவே தயவுசெய்து, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலாவது இதை நிறைவேற்றித்தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

சத்துணவிலே வாழைப்பழத்தைச் சேர்க்க வேண்டுமென்று நான் பல முறை முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன். நான் பேசும்போதெல்லாம் வாழைப்பழம் வேண்டும், வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இந்த முறை அதுபற்றி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கிறேன் என்று கூறியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், சத்துணவிலே வழங்கப்பட்ட ஒரு முட்டை என்பது இரண்டு முட்டை, மூன்று முட்டை என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு எல்லா வழியிலும் உதவி புரிந்திருக்கின்ற நமது முதல்வர், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு நியாய விலைக் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதற்கு ஒரு ஏற்பாடாக வாழைப் பழத்தை சத்துணவிலே அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவசாயம் சார்ந்த பகுதி. முனிசிபாலிட்டிகூட அங்கே கிடையாது. 4 பேரூராட்சிகளும், ஊராட்சியும் மட்டுமே இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே அரசு தொழிற்கல்லூரி ஒன்று தொடங்க வேண்டும். அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. இதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் 15 ஆண்டுகளுக்கு

[திரு. மா. ராஜசேகரன்] [2008 ஜனவரி 28

முன்பாகத் திறந்து வைத்தார்கள். அந்தக் கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. என்னுடைய தொகுதியின் அருகில் எந்தப் பொறியியல் கல்லூரியும் இல்லை. அந்தக் கல்லூரியை பொறியியல் கல்லூரியாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொட்டியம் சட்டமன்றத் தொகுதி வெற்றிலைக்கு மிகச் சிறந்த இடம். அங்கே, உற்பத்தி செய்கின்ற வெற்றிலையானது தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆகவே, வெற்றிலை ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரியில் ஒவ்வோர் ஆண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றபோது காவிரியின் மேலணை மதகிலே தேக்கி, கொள்ளிடத்தின் வழியாகத் தண்ணீரை அனுப்பும்போது குறைந்தது 70, 80 டி.எம்.சி. அடி தண்ணீர் கடலுக்குச் செல்கின்றது. ஆனால், தண்ணீர் பற்றாக்குறைப் பற்றிப் பேசும்போது நாம் காவிரியிலே தண்ணீர் விடவேண்டுமென்று கர்நாடகாவிடம் கையேந்தி நிற்கின்றோம். ஆகவே, ஒரு புதிய தண்ணீர்த் திட்டத்தை அறிவித்து, மாயனூரிலே இருக்கின்ற மதகை உயர்த்தி, தடுப்பணையாக உயர்த்தி—காவிரியின் தென்பகுதியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெரிய வாய்க்காலையும் புள்ளம்பாடி வாய்க்காலையும் வெட்டியிருக்கிறார்கள்—அதேபோல, வடபுறப் பகுதியிலே ஒரு வாய்க்காலை வெட்டி அந்தத் தண்ணீரை வெள்ளக் காலத்தில் திருப்பி விடுவோமேயானால் குறைந்தது 10 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள். திருச்சி மாவட்டத்திலே வட பகுதியிலே உள்ள மக்களும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளும் பயனடைவார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'கூட்டணிக் கட்சிகள் அரசைப் பற்றி எப்போது பேசினாலும், அடித்துச் சொல்ல வேண்டாம், இடித்துச் சொன்னால் போதும்' என்று சொல்லியிருக்கிறார்கள் நாங்கள் காங்கிரஸ்காரர்கள். மரியாதைக்குரிய மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 'பெருந்தன்மை வாய்ந்த காங்கிரஸ் பேரியக்கம்' என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு அடிக்கவும் தெரியாது, இடிக்கவும் தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிமெண்ட் விலை உயர்வு காரணமாக அறிக்கை விடும்போது—மத்திய அரசின்,



2008 ஜனவரி 28] [திரு. மா. ராஜசேகரன்]

மிக வல்லமை படைத்த மத்திய அரசின் வர்த்தக அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் சிமெண்ட் உற்பத்தியாளர்களை நேரடியாக அழைத்து அவர்களிடம் பேசும்போது அவர்கள் சிமெண்ட் விலையைக் குறைக்க மறுத்துவிட்டார்கள். அந்தக் காலகட்டத்திலே தமிழக முதலமைச்சர், அவர்களை அழைத்துப் பேசி, மிகக் கடுமையாகப் பேசி, நீங்கள் விலையைக் குறைக்கவில்லையென்றால் உங்களது ஆலைகள் அரசு ஆலைகளாக மாற்றப்படும் என்று அவர்களை மிரட்டியதன் காரணமாக, சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டார்கள்.

பிற்பகல் 12-05

அப்படிப்பட்ட வல்லமை படைத்த தலைவர் அவர்கள், எப்படி சிமெண்ட் விலையைக் குறைத்தார்களோ அதேபோல, மணல் விலையையும் குறைக்க அவர்கள் ஆவன செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், 632 ரூபாய்க்கு விற்கக்கூடிய 2 யூனிட் மணல், நுகர்வோரைப் போய்ச் சேரும்போது கிட்டத்தட்ட 4,000, 5,000 ரூபாய்க்குச் செல்கின்றது. ஆகவே மணல் விலையைக் குறைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாநிலத்தில் பாயக்கூடிய நதிகள் அனைத்தையும் இணைப்பதற்கு ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக நமது கவர்னர் உரையிலே அறிவித்திருக்கிறார்கள்; வரவேற்கக்கூடிய ஒரு விஷயம். ஏனென்று சொன்னால், நான் முன்னால் சொன்னதுபோல, காவிரியில் 70, 80 டி.எம்.சி. அடி தண்ணீர் கடலுக்குச் செல்வதைத் திருப்பி மற்ற நதிகளுக்கு விடும்போது நாட்டினுடைய பெரும்பகுதி விவசாயப் பகுதியாக மாற்றப்படும். ஆகவே, நான் அதை வரவேற்கிறேன்.

மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனே நிவாரணம் வழங்க வேண்டும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.40,000 கோடியாக இருந்த நிதியை 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.85,347 கோடியாக மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது. அதையும் பாராட்டி வரவேற்கிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் அளிப்பதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட செம்மொழி தமிழ் ஆய்வு நிறுவனத்தை சென்னையில் அமைப்பதை நான் வரவேற்கிறேன்.

நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரசின் வாயிலாக நாங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு 100 ரூபாய் கூடுதலாகக் கொடுக்கிறது குவின்டாலுக்கு. மாநில அரசு 50 ரூபாய் கொடுக்கிறது. ஒரு குவின்டாலுக்கு 825 ரூபாய் தற்சமயம் கிடைக்கிறது. அதை மேலும் உயர்த்தி, ஆயிரம் ரூபாயாகக் கொடுத்தால் அரசினுடைய நிதி நிலையிலே எந்தவிதமான பாதிப்பும் இருக்காது. ஏனென்று சொன்னால், விவசாயிகள் 15 ஆண்டு காலம் படாத பாடுபட்டுக் கொண்டிருந்த கடன் சுமையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 7,000, 8,000 கோடி ரூபாய் அளவுக்குக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதன்பிறகு இப்போதுதான் அனைத்து விவசாயப் பெருமக்களும் நிம்மதியாக இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கிற விவசாயப் பொருட்களுக்கு நியாய விலை கிடைக்க வேண்டும். அடிப்படை நியாய விலை கிடைத்தால் அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு அவர்களுக்கு உதவியாக இருக்கும். அப்போதுதான் கூட்டுறவுச் சங்கங்களும் திறமையாகச் செயல்பட முடியும். ஆகவே, விவசாய உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புறம்போக்கில் குடியிருக்கக்கூடிய மக்களுக்கு, பத்தாண்டுகளாக இருந்த இருப்பிட காலத்தை, 5 ஆண்டுகள் இருந்தால் போதும் என்று குறைத்து, அவர்களுடைய வருமான வரம்பைக் குறைத்து, இப்போது 5 ஆண்டுகளாக இருந்தால்போதும், அவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

கோயில் நிலங்களில் இதே நிலையை அமல்படுத்துவதைப் பொறுத்தவரை, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்கூட காலையில் பேசும்போது, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக பல கோயில்களில் திருப்பணி செய்ய முடியாமல் போகிறது என்று சொன்னார்கள். தயவுசெய்து நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கோயில் நிலங்களிலே இந்தச் சட்டத்தை அமல்படுத்தும்போது சற்று கவனமாக அமல்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், கோயில் நிலங்களை வைத்திருப்பவர்கள் அனைவருமே குத்தகைதாரர் மாதிரி இல்லை; சொந்த நிலம் மாதிரிதான் வைத்திருக்கிறார்கள்; யாரும் குத்தகை கட்டுவது இல்லை. ஆகவே ஒரு தனிச் சட்டத்தையிட்டு, கோயில்களைப் புனரமைப்பதற்கும், திருப்பணிகளை முறையாகச் செயல்படுத்துவதற்கும் அதில் விதிவிலக்கு



அளித்து கோயில் நிலங்களை அரசு கையகப்படுத்தி முறையாக Open Tender மூலமாக விட்டு வருமானத்தைப் பெருக்கி, அரசு நிதி நிலையைச் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, மின்சாரப் பற்றாக்குறை. அறிவிக்கப்படாத மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒரு மாதத்திற்கு முன்பாக அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள். இல்லையென்று மறுக்க முடியாது. அப்போது நமது தமிழக அரசின் சார்பாக மின்சாரப் பற்றாக்குறை கிடையாது, மின்வெட்டு கிடையாது, மத்திய உற்பத்தியிலே இருக்கின்ற மின் உற்பத்தி கிடைக்காததனால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அருமைத் தலைவர் அவர்கள், தமிழக முதலமைச்சர் அவர்கள், டெல்லி சென்றிருந்தபோது, அன்னை சோனியா காந்தி அவர்களையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும் சந்தித்துக் கேட்டபோது, 500 மெகா வாட் மின்சாரம் கேட்டிருந்தார்கள். 300 மெகா வாட் மின்சாரத்தைக் கொடுத்து உடனே அதை நிவர்த்தி செய்து கொடுத்தார்கள். இந்த நடவடிக்கையைச் சற்று முன்னதாகவே எடுத்திருக்கலாம். அப்படி எடுத்திருந்தால் மின்சாரத் தட்டுப்பாட்டைத் தவிர்த்திருக்கலாம்.

கவர்னர் உரையிலே இந்திய மேலாண்மை நிறுவனத்தைக் கோவையில் அமைப்பதாகவும், இந்திய தொழில்நுட்பவியல் நிறுவனத்தை மதுரையில் அமைப்பதாகவும், அறிவியல் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தைத் திருச்சியில் அமைப்பதாகவும், மத்தியப் பல்கலைக்கழகத்தைத் திருவாரூர் மாவட்டத்தில் அமைப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

தமிழகத்தில் இருக்கின்ற தனியார் தொழிற்சாலைகள் ஹூண்டாய், ஃபோர்டு போன்றவை எல்லாம் இலட்சக்கணக்கான கார்களை அதிகமாக உற்பத்தி செய்கின்றன என்று அறிவித்திருக்கிறார்கள். இது நமது தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது.

அடுத்து, எண்ணூர் கப்பல் கட்டும் தளத்திற்கு 3,068 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் 10,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் வரவேற்கிறோம்.

நெசவாளர்கள் பிரச்சினையில், கூட்டுறவுக் கடன் எப்படித் தள்ளுபடி செய்யப்பட்டதோ, அதேபோல, நெசவாளர்கள் 10,000, 15,000 ரூபாய்தான் கூட்டுறவுச் சங்கத்திலே கடன் வாங்கியிருக்கிறார்கள்.

[திரு. மா. ராஜசேகரன்] [2008 ஜனவரி 28

கிட்டத்தட்ட ரூ.70 கோடிதான் வரும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்த கடனையும் தள்ளுபடி செய்தால் நெசவாளர்கள் வயிற்றில் பால் வார்த்ததாக இருக்கும் என்று கூறிக்கொள்கின்றேன்.

அருந்ததியினர் பின்தங்கியுள்ளார்கள். அவர்களுக்கும் இட ஒதுக்கீடு அளிப்பதாக இந்த கவர்னர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த இட ஒதுக்கீடானது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டில் ஒதுக்குவது சற்று நெருடலை ஏற்படுத்துகிறது. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே அவர்கள் எங்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்று கூறிக்கொண்டிருப்பதனால், அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாக இணைத்து, அவர்களுக்குத் தனி ஒதுக்கீடு கொடுத்தால் சற்று நன்றாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-10*

V.A.O. - கிராம நிர்வாக அதிகாரிகள் கிட்டத்தட்ட 2,000 பேர்களை நியமனம் செய்தீர்கள். ஆனால், Ex-Servicemen 120 பேர்களுக்கு இன்றையவரைக்கும் appointment கொடுக்கவில்லை. ஏன் அவர்களுக்கு இதுவரையில் நியமனம் கொடுக்கவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தனியார் நிறுவனத்தில் மருத்துவம் பயில்கிற, அதாவது B.Pharm., D.Pharm. படிக்கக்கூடியவர்களை ஊக்கப்படுத்துகிறது அரசு. அதனால் கிராமத்தில் இருக்கின்ற அனைத்து மாணவ, மாணவிகள் தனியார் பள்ளியிலே படித்து வேலைக்கு அலைகின்றார்கள். ஆனால், அவர்களில் அரசு செவிலியர் பயிற்சி பெற்றவர்களுக்கு மட்டுமே அரசுத் துறையில் பணி அளிப்பதாக ஒரு வதந்தி வெளியிலே இருக்கிறது. அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வேடசந்தூரில் இருக்கின்ற குடகனாறு அணையிலே 27 அடி தண்ணீரைத் தேக்கலாம். இப்போது மழை பெய்து அணை வழியக்கூடிய அளவிற்கு இருக்கும்போதுகூட, மதகு சரியாக இல்லாத காரணத்தினால், 27 அடி தண்ணீரும் வடிந்துவிட்டது. ஆகவே, அந்த மதகினைச் சரி செய்யக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தந்தை பெரியார் அவர்களுக்குத் தமிழகத்தில் இருக்கின்ற சமத்துவபுரத்திலே சிலை வைப்பதாக அறிவித்திருக்கிறீர்கள்;



2008 ஜனவரி 28] [திரு. மா. ராஜசேகரன்]

வரவேற்கவேண்டிய ஒரு விஷயம். ஏனென்று சொன்னால், சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதற்காகப் பெரியார் அவர்கள் ஆற்றியிருக்கும் பணி அனைவருக்கும் தெரிந்தது. 95 அடி சிலை வைப்பதற்குப் பதிலாக, புதிதாக 95 சமத்துவபுரங்களை அமைத்து, அதிலேயும் சிலை வைக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்; அது வரவேற்கவேண்டிய விஷயம். ஆனால், ஒன்றை நினைவுகூர விரும்புகின்றேன். இங்கேயிருக்கின்ற 234 சட்டமன்ற உறுப்பினர்களில், 70 விழுக்காடு பேர், 1967-ல், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் தொடங்கப்பட்ட பள்ளிகளிலே பயின்று, சட்டக் கல்லூரியிலே படித்து, மாணவர்களாக மேல்நிலை படிப்புகளைப் படித்து, இன்றையதினம் அவையிலே வீற்றிருக்கின்றார்கள். அதேபோல, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாணவர்களின் கல்விக் கண் திறந்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும், அரசுப் பள்ளிகள் அனைத்திலுமே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பள்ளி மாணவனைக் கையிலே பிடித்துக் கொண்டு செல்லக்கூடிய சிலை எப்படி தென் மாவட்டங்களில் வைக்கப்பட்டிருக்கிறதோ, அதேபோன்ற சிலையைத் தமிழகத்தில் இருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் வைக்கவேண்டுமென்று எங்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், ஒரு முக்கியமான நிலையை எடுத்துச் சொல்லவேண்டிய காலகட்டத்திலே காங்கிரஸ் இயக்கம் இருக்கிறது. ஏனென்று சொன்னால், 100 கோடி மக்களையும் நம்முடைய கூடப்பிறந்த சகோதரர்களாகப் பாவிக்கின்ற நாடு இந்திய நாடு. இந்த நாட்டிலே, காஷ்மீரிலே, பாகிஸ்தான் பக்கத்திலே இருக்கின்ற தீவிரவாதிகள் இயக்கம், பாகிஸ்தானிலே இருந்துகொண்டு சுதந்திரத்தைப் பறிக்கப் பார்க்கின்றது. தினசரி பல ஆயிரம் பேர் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்; இராணுவ வீரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நேற்றைக்குக்கூட பார்த்தீர்கள் என்றால், 'அர்ஜுனா விருது' பெற்ற இளைஞர், ஒரு இராணுவ அதிகாரி; Lieutenant General, 27 வயதுமிக்கவர், ஜனாதிபதியிடம் award வாங்கிவிட்டு நேற்றைக்கு இறந்திருக்கிறார். Award வாங்குகிறார்; award வாங்கிவிட்டு evening duty-க்குப் போகிறார்; நேற்று இரண்டு தீவிரவாதிகளைச் சுட்டு, அவர் இறந்திருக்கிறார். அப்படி border-லே நாட்டைப் பாதுகாக்கக்கூடியவர்களுக்குக்கூட நம்முடைய தமிழக மக்கள் குரல்

கொடுப்பதில்லை. அங்கே நாம் தீவிரவாதத்தை ஆதரிக்க முடியாது. அஸ்ஸாமிலே உல்பா தீவிரவாதிகள், தனி நாடு கேட்டுப் போராடுகிறார்கள்; அதை ஆதரிக்க முடியாது. ஆந்திராவிலே, தெலுங்கானா திட்டம் வேண்டுமென்று கேட்பதைத் தீவிரவாதிகள் ஆதரிக்கிறார்கள்; அதை ஆதரிக்க முடியாது. ஆனால், இலங்கையிலே தனி நாடு கேட்கக்கூடிய விடுதலைப் புலிகளை எப்படி ஆதரிக்கிறார்கள் என்று புரியவில்லை. நமக்கு ஒரு நியாயம், வெளிநாட்டிற்கு ஒரு நியாயமா? நான் ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகின்றேன். பாதிக்கப்படும் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால், இலங்கைத் தமிழர்கள் என்ற போர்வையிலே, விடுதலைப் புலிகளை ஆதரிப்பதை எந்த நிலையிலும் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாது. (மேசையைத் தட்டும், ஒலி)

தமிழகத்திலே பத்மநாபா உள்ளிட்ட 16 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களைச் சிங்கள இராணுவமா சுட்டுக் கொன்றது? விடுதலைப் புலிகள். சபா ரத்தினத்தைச் சுட்டுக் கொன்றது யார்? விடுதலைப் புலிகள். அமிர்தலிங்கத்தைச் சுட்டுக் கொன்றது யார்? விடுதலைப் புலிகள். .இவர்கள் எல்லாம் என்ன சிங்களர்களா? இவர்கள் எல்லாம் நமது உடன் பிறந்த தமிழர்கள் இல்லையா? இவர்களையெல்லாம் சுட்டுப் பொசுக்கி, தான் மட்டும் வாழவேண்டும் என்று எண்ணுகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தை எந்த விதத்தில் ஆதரிக்க முடியும்? எங்கள் அருமைத் தலைவர் இராஜிவ் காந்தி படுகொலை செய்யப்பட்டு, 17 ஆண்டுகள் ஆகின்றன என்று அறிவித்திருக்கிறார் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர். காலையிலே எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் அதுபற்றி விவாதத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார். நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. ஏனென்று சொன்னால், நாளைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதாகக் கூறியிருக்கிறீர்கள். ஆகவே, மத்திய அரசு தடை செய்த இதுபோன்ற இயக்கத்தைக் கடுமையாக நாங்கள் எதிர்க்கின்றோம். இல்லையென்று சொன்னால், இந்த நாட்டினுடைய இறையாண்மை கெட்டுவிடும்.

காலையிலே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் கச்சத் தீவைப்பற்றிப் பேசும்போது, இந்தியாவின் இறையாண்மையைப் பற்றிப் பேசினார்; இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், அவருடைய தலைவர் பாஸ்போர்ட் இல்லாமல் இலங்கைக்குச் சென்றதை சொல்லும்பொழுதுமட்டும்



அவர்களுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. பாஸ்போர்ட் இல்லாமல், இந்திய அரசமைப்புச் சட்டத்தை மீறி, நாடாளுமன்றத்திலே பதவியேற்றிருக்கிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எப்படி வெளிநாட்டிற்குச் செல்வதை நாம் ஆதரிக்க முடியும்? கள்ளத் தோணியிலே சென்றார் என்றால், அதைப் பேசுவதற்கு அவர்கள் மறுக்கிறார்கள். இதையெல்லாம் சற்று உன்னிப்பாகப் பார்க்கவேண்டும்.

நாட்டின் இறையாண்மையைப் பற்றிப் பேசுகின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் இதைக் கவனிக்கவில்லை? தீவிரவாதத்தை ஊக்கப்படுத்துவதற்காகவா சட்டமன்றம் இருக்கிறது? (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, தயவு செய்து நான் உங்களுக்குப் பகிரங்கமாகக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வேண்டுகோள் வைக்கிறேன். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதில், இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்திற்கோ, மத்திய அரசாங்கத்திற்கோ எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால், அதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவோ அல்லது மற்ற கட்சியினர்களோ, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுகிறோம் என்ற போர்வையிலே, விடுதலைப் புலிகளை ஆதரிப்பதை எந்த நிலையிலும் இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாது என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

இந்த கவர்னர் உரையிலே மிகத் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு, மாநில அரசுகளின் உறவுமுறை புட்டுப்புட்டு வைக்கப்பட்டிருக்கிறது பக்கத்திற்குப் பக்கமாக. உள்ளங்கை நெல்லிக்கனிபோல மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஏனென்று சொன்னால், மத்திய அரசு, மாநில அரசுக்கு எந்தெந்த நிதி நிலையிலே எப்படியெல்லாம் உதவி செய்திருக்கிறது; எவ்வளவு திட்டங்களை அறிவித்திருக்கின்றது; அதனால் இந்த ஒன்றரை ஆண்டுக்காலத்திலே தமிழகத்தினுடைய வளர்ச்சி எப்படியெல்லாம் உயர்ந்திருக்கிறது என்பதை கவர்னர் உரையில் மிக அற்புதமாகப் பட்டியலிட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? மத்திய அரசில் இருக்கின்ற, அன்னை சோனியா காந்தியின் வழிகாட்டுதலில் இருக்கின்ற பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள், தமிழக முதலமைச்சர் கேட்கும்போதெல்லாம் இலட்சக்கணக்கான தொகைகளை, கோடிக்கணக்கான தொகைகளை வாரி வழங்கி தமிழக மக்களின் எண்ணங்களை நிறைவேற்றக்கூடிய ஓர் அரசு தமிழகத்திலே

இருக்கிறது. அந்த மக்களுக்கு நாம் அனைவரும் மத்திய அரசின் சார்பாக பல உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கூறி (மணியடிக்கப்பெற்றது) அதிகப்படியான தொகைகளை வழங்குகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த அரசு தன்னுடைய நிலையை மிகத் தெள்ளத்தெளிவாக இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறது. கவர்னருடைய உரையை நான் பாராட்டி வரவேற்று இடம் அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு.. தி. வேல்முருகன். உங்களுக்கு 15 நிமிடங்கள்தான். நேரம் ஆகிவிட்டது.

**திரு. தி. வேல்முருகன்:** இப்போதே நேரம் 12-16 ஆகிவிட்டது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீதான இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் தமிழகத்திற்குத் தேவையான நல்ல பல செய்திகளைச் சொல்லியிருக்கின்றீர்கள். குறிப்பாக, தமிழர் திருநாள் பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்ற தமிழர்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளை உள்வாங்குகின்ற வகையில் தைத் திங்கள் ஒன்றாம் நாளைத் தமிழர்களுடைய புத்தாண்டாக அறிவித்துள்ளதற்காக தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இந்தத் தமிழ்ச் சமூகத்தை, தமிழனுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தை, நாகரிகத்தை, ஒழுக்கத்தை, இந்த நாட்டினுடைய உறவுமுறைகளை, இந்த நாட்டினுடைய பழக்கவழக்கங்களை, இந்த நாட்டினுடைய உடை அணிகின்ற முறைகளை ஒட்டுமொத்தமாகச் சீரழித்துச் சின்னாபின்னமாக்கிக் கொண்டு வருகின்ற இந்த சின்னத் திரையிலும், வண்ணத் திரையிலே நடக்கின்ற அவலங்களையும், அதிலே நடக்கின்ற ஆபாசக் கூத்துகளையும், அதிலே நடக்கின்ற வக்கிரங்களையும், அதிலே நடக்கின்ற காமக் களியாட்டங்களையும், பெண்ணின் விடுதலைக்கு வித்திட்ட தந்தை பெரியார் அவர்களுடைய வழியில் ஆட்சி நடத்துகின்ற தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆட்சிக்காலத்திலும் இந்த அவலங்கள் தொடர்கின்றனவே என்கிற வேதனையான செய்திகளை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தச் சின்னத் திரை என்று சொல்லக்கூடிய தொலைக்காட்சிகளில், அது எந்தத் தொலைக்காட்சியாக இருந்தாலும், அது 'சன்' டி.வியாக இருக்கலாம், அல்லது 'ஜெயா' டிவியாக இருக்கலாம், அல்லது 'ராஜ்' டி.வியாக இருக்கலாம் அல்லது 'கே' டிவியாக இருக்கலாம். இப்போது தொடங்கப்பட்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சருடைய பெயரைத் தாங்கி வருகின்ற 'கலைஞர் தொலைக்காட்சி'யாக இருக்கலாம். இந்த ஊடகங்கள் எல்லாம் இந்த நாட்டினுடைய மொழியையும், இந்த நாட்டினுடைய பண்பாட்டையும், இந்த நாட்டினுடைய கலாச்சாரத்தையும், இந்த நாட்டினுடைய உறவுமுறைகளையும், தாய், தந்தை, தாரம், தங்கை, குழந்தை என்கிற எந்த நிலையிலும் விட்டுவைக்காமல் மிகப்பெரிய, ஒரு கலாச்சாரச் சீரழிவுக்கு இந்தத் தமிழ்ச்சமூகத்தை இன்றைக்கு இவை இட்டுச்செல்கின்றன. இதைத் தணிக்கை செய்வதற்கு, இதைக் கட்டுப்படுத்துவதற்கு, இதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு தமிழாய்ந்த தலைமகன், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் முன்வரவேண்டுமென்கிற வலியை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம், குறிப்பாக பெண்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளும், பெண்கள் பாலியல்ரீதியான சீண்டலுக்கு உள்ளாக்கப்படுவதும், அந்தப் பெண்களைப்பற்றி வருகின்ற தொடர்களும், ஒவ்வொரு தொலைக்காட்சியிலும் வருகின்ற செய்திகள், வருகின்ற காட்சிகள், விஜய் தொலைக்காட்சியிலே 'ஜோடி நம்பர் ஒன்' என்று போடுகிறார்கள். அதிலே ஆடுகிற ஆட்டமும், அடிக்கிற கூத்துகளும், கும்மாளங்களும் எவ்வளவு நா கூசுகின்ற, கண் கூசச்செய்கின்ற, குழந்தைகளோடு உட்கார்ந்து பார்க்க முடியாத காட்சிகள். இன்னும் சொல்லப்போனால், 'ஜில்லென்று ஒரு காதல்' என்று மிகப்பெரிய ஒரு கலாச்சாரச் சீர்கேட்டை அதிலே காட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் நம்முடைய கலைஞர் பெயரைத் தாங்கி வருகின்ற நம்முடைய 'கலைஞர்' டி.வியிலே, 'மானாட மயிலாட' என்கிற நிகழ்ச்சி அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படாமல் அந்த டி.வி–யில் அனுமதித்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவ்வளவு கேவலமான, மோசமான காட்சிகள், அரங்க அமைப்புகள். அதேமாதிரி, 'சன்' தொலைக்காட்சியில் வருகின்ற கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள், அவர்களுக்கு ஒத்த வயதுடைய அந்த இளம் ஆண், பெண்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஆடச் செய்வதும், கை கோர்த்து ஆடச் செய்வதும், முத்தமிடுவதும், இடையிலே முத்தமிடுவதும், மிக ஆபாசமாக

[திரு. தி. வேல்முருகன்] [2008 ஜனவரி 28

அரங்கேறிக் கொண்டு இந்தத் தமிழ்ச்சமூகத்தை சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. நீங்கள் சொல்கிற scene எல்லாம், scene by scene, frame by frame பார்க்கிறீர்கள். (சிரிப்பு)

**திரு. தி. வேல்முருகன்:** இவையெல்லாம், நான் சொல்லுகிற செய்திகளையெல்லாம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் இப்பொழுது திரைப்படத்திலே நடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர் நடித்த 'வாழ்த்துகள்' என்ற படத்தைக்கூட நான் பார்த்தேன். நான் சொல்ல வருவது, "மானாட மயிலாட" என்ற நிகழ்ச்சியிலே எந்த ஆபாசமும் இல்லை. அதில் நடனம் ஆடுகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அதைத் தமிழ்நாட்டிலே அதிகமாக விரும்பிப் பார்க்கின்ற மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டிருக்கிறது. ஏதாவது ஆபாசமாக இருந்தால் அதைக் குறிப்பிடலாம். ஆனால், அந்த நிகழ்ச்சியிலே நாட்டியம் ஆடுகிறார்கள், அவ்வளவுதான். அதிலே எந்த team வெற்றிபெறுகிறது என்று ஒன்று, இரண்டு, மூன்று என்று மார்க் போடுவதற்குக்கூட தொலைபேசி எண் கொடுக்கிறார்கள். எனவே அதிலே ஒன்றும் இல்லை.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே இறுதித் தீர்ப்பு வழங்க வருகின்றவர்கள், சிறப்பு விருந்தினராக வருகின்றவர்கள் அணிந்து வருகின்ற உடை—கலைஞர் தொலைக்காட்சியை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தமிழ்ச் சமூகத்தில் தமிழின் பெயரிலே வெளியிடப்படுகின்ற அனைத்துத் தொலைக்காட்சிகளிலும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டிருக்கின்ற மக்கள் தொலைக்காட்சியைத் தவிர்த்து வருகின்ற அனைத்துத் தொலைக்காட்சிகளிலுமே இந்தப் பண்பாட்டு, கலாச்சார சீரழிவு



2008 ஜனவரி 28] [திரு. தி. வேல்முருகன்]

உள்ளது--அரை ஜான் உடைகளில்தான் வருகின்றார்கள், நமிதா என்ற ஒரு நடிகை வருகிறார், தீர்ப்புச் சொல்ல வருகிறார், நடுவராக வருகின்றார்; அவர் அணிந்து வருகின்ற உடை சிறிய உடை. சமீபத்தில் கலைஞர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியிலே, சுராயா என்கிற ஒரு நடிகை வருகிறார். அவர் அணிந்தது அரை ஜான் உடை.... (குறுக்கீடு) அது சுராயாவோ, சராயாவோ, வாயிலே நுழையாத பெயரை வைத்துக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், இந்த அவையிலே இல்லாதவர்கள் பெயரையெல்லாம் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) ஏனென்றால் அவர்களுக்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு இல்லை.

**திரு. தி. வேல்முருகன்:** நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஆனால், அவர்கள் அணிந்துவந்த அந்த உடை, இது போன்ற உடைகளும், அந்த நடைகளும்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரேயா அரசாங்க விழாவிலே உடை அணிந்து வந்ததை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். நடிகர்கள் எல்லாம் இப்படித்தான் உடை அணிய வேண்டுமென்று ஒரு சட்டம் போட முடியாது. வேண்டுமானால், ஆபாசமாக இருந்தால் அதை நாம் அவர்களுக்கு அறிவுரையாக வழங்கலாம். அதைத் தடைகூடச் செய்யலாம். ஆனால், நடிகர்கள், நடிகைகள் எப்படி உடை அணிய வேண்டும் என்பதை அவர்களாகவே முடிவு செய்கிறார்கள். அரசாங்கம் முடிவு செய்வதில்லை.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய குடியரசு தின விழாவிற்கு பிரான்ஸ் நாட்டினுடைய அதிபர் அவர்கள் வருகை தந்தார்கள். அவர் வருகை தந்தபோது இந்திய நாட்டினுடைய பிரதமரோடு அவர்கள் கலந்துகொண்டபோது பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றபோது இந்த நாட்டைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேள்வி தொடுக்கின்றபோது அந்நிய நாட்டில் பிறந்த வெள்ளைக்காரர் சொல்கிறார், "இந்திய நாட்டினுடைய பண்பாடும், கலாச்சாரமும், நாகரிகமும் உலகளாவி இருக்கின்ற அனைவரையும் ஈர்க்கின்ற

செய்தி. இந்த நாட்டினுடைய பாரம்பரியத்திலே நான் ஊன்றுவதற்கு ஆசைப்படுகிறேன். இந்த நாட்டினுடைய குடியரசு தின விழாவிலே கலந்து கொள்வதற்கு பெருமையடைகிறேன்" என்கிறார். அவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய நாட்டின் வழிகாட்டியாக இருப்பது தமிழகம். பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம், ஒருமைப்பாட்டு உணர்வு, தமிழ் என்கிற உணர்வு இப்படி எல்லா நிலைகளிலும் உயர்ந்து நிற்கிற இந்தத் தமிழகத்திலே இந்த தறிகெட்டத்தனமான நடவடிக்கைகளால் இந்த சின்னத் திரைகளில், பெரிய திரைகளில் குத்தாட்டங்களும், கும்மாள ஆட்டங்களும் ஆடுவதை தணிக்கைத் துறை ஏன் கண்டிக்கவில்லை? தணிக்கைத் துறை கண்டிப்பதற்கு, மத்திய அரசிலே நாம் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறோமே, பாட்டாளி மக்கள் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, அதிலும் பெண் உறுப்பினர்களை அதிகமாக நியமனம் செய்து, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற அந்தப் பாங்கு. இன்றைக்கு ஒரு சிறுவன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆபாசம் என்பதற்கு எந்தவிதமான அளவுகோலும் கிடையாது. இத்தனை இன்ச் இடுப்பைக் காட்டலாம், இத்தனை இன்ச் பிரா போடலாம், இத்தனை இன்ச் ஜாக்கெட் போடலாம், இத்தனை இன்ச் குட்டைப் பாவாடை கட்டலாம் என்று ஒன்றும் கிடையாது. அவரவர்களுடைய மனசைப் பொறுத்ததுதான் ஆபாசம் என்பது. நம்முடைய அருமை நண்பர் வேல்முருகன் அவர்கள் நடித்த படத்தை நாங்கள் எல்லாம் பார்த்தோம். அதிலேயே "சிங்சிக் சிங்சிக் சிக்" என்று வருகிறதே, அதை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்? (சிரிப்பு) ஆகையினாலே, ஆபாசம் என்பது ஏதோ கொஞ்சம் உடை குறைவாக ஆடுவதே ஆபாசம் என்று வராது. ஆபாசம் என்பதற்கு ஒரு அளவுகோல் கிடையாது. Obscenity என்று சொல்வார்கள். (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** நான் சொல்லிவிடுகிறேன் (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். ஆபாசம் என்பது மனதிலே இருக்க வேண்டுமென்று சொல்கிறார். அதற்காக அரை குறை ஆடை கட்டி, குட்டை ஆடை அணிந்துகொண்டு நடுத் தெருவிலே போகமுடியுமா? வீட்டிலே



நம்முடைய குழந்தைகளை அனுமதிக்க முடியுமா? அரசு இதிலே அக்கறை செலுத்த வேண்டும். நடிகர், நடிகை அல்லது வேண்டுமென்று போகக்கூடியவர்கள் எப்படி வேண்டுமானாலும் அரைகுறை ஆடை கட்டி வெளியிலே வருவதும், திரைப்படங்களிலே நடிப்பதும், பொது இடங்களிலே வருவதும், சமுதாயத்திலே சீரழிவை உண்டாக்கும். விழிப்புணர்வு வேண்டும். தடுப்பு நடவடிக்கை வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறோமே தவிர, குறை சொல்வதற்காக அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நடித்த படத்தைப் பற்றிச் சொன்னார். நான் இந்தத் தமிழ்ச் சமூகம் எவ்வளவு சீரழிந்துக் கொண்டிருக்கிறது, எவ்வளவு அநியாயம் நடந்துக் கொண்டிருக்கிறது? ஆங்கில கலப்பு ஏதும் இல்லாமல் அந்தப் படத்திலே பாடல் காட்சிகளாக இருந்தாலும், வசனக் காட்சிகளாக இருந்தாலும் அமைய வேண்டும்; முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று நடித்தேன். ஒரு 'சேது', ஒரு 'அழகி', இப்போது வந்திருக்கிற 'ஒன்பது ரூபாய் நோட்டு', நான் நடித்திருக்கிற 'வாழ்த்துகள்' உட்பட பல படங்கள் உண்டு. நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு காலையில் நான் வந்தவுடனேயே ஒரு வார்த்தைகூட ஆங்கிலக் கலப்பு இல்லாமல் இருப்பது முன்முயற்சி என்று பாராட்டுகின்ற விதத்தில்தான் நாங்கள் நடித்திருக்கிறோமே தவிர ஆபாசத்தை விதைப்பதற்காக அல்ல. அருவருக்கத்தக்க காட்சிகளை அமைப்பதற்காக அல்ல. குடும்பங்களோடு இன்றைக்கு தமிழ்ச் சமூகத்தில் யாராவது உட்கார்ந்து படம் பார்க்க முடிகிறதா? பாட்டு கேட்க முடிகிறதா? பாட்டுகளுடைய வரிகள் என்ன? 'கட்டிப்புடி கட்டிப்புடிடா', 'நீ ரெடியா, நான் ரெடியா', 'எப்படி? எப்படி? சமஞ்சது எப்படி?' இவற்றையெல்லாம் நாம் ஏன் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம்? ஏன், பெண்களை இப்படிக் கூறு போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்? ஏன், இவ்வளவு ஆபாசமும், அக்கிரமும், அநியாயமும் நடந்து கொண்டிருக்கின்றன? இவற்றை தடுத்து நிறுத்த வேண்டிய தணிக்கைத் துறை ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது? சின்னத் திரையிலும் இந்தக் கட்டுப்பாடுகள் வேண்டும்; தணிக்கை செய்யப்பட வேண்டும்.

பிற்பகல் 12-25

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைவிட இன்னும் ஒரு படி மேலே சென்று, இன்றைக்கு live programme என்று சொல்கிறார்கள். அதிலே பக்கத்து வீட்டுப்

[திரு. தி. வேல்முருகன்] [2008 ஜனவரி 28

பெண்ணாக இருக்கலாம். எனது தங்கையாக இருக்கலாம், எனது மனைவியாக இருக்கலாம். யாரை வேண்டுமானாலும் I Love you சொல்வது, ரேடியோவில் F.M. என்கிற அலைவரிசை வந்தபிறகு, அதிலே நேருக்கு நேராக, விபச்சாரம் என்கிற மிகக் கேவலமான நிலையைத் தாண்டி, உச்சகட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் இந்தத் தமிழ்ச் சமூகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஒரு மணி நேரத்திற்கு 64 பெண்கள் பாலியியல் ரீதியாகத் துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள், 54 பெண்கள் கற்பழிக்கப்படுகின்றார்கள் என்கிற புள்ளிவிவரங்களையெல்லாம் இன்றைக்கு வல்லுநர்களும், புள்ளியியல் அறிஞர்களும் சொல்கிறார்கள். அரசே சொல்கிறது; தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சொல்கின்றன; பத்திரிகைகள் சுட்டிக்காட்டுகின்றன; முன்னணிப் பத்திரிகையாளர்கள் தலையங்கம் எழுதுகிறார்கள். ஆனால், இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் இருப்பது, மிகவும் வேதனை அளிக்கக்கூடிய செய்தி.

இந்த நாட்டினுடைய உறவுமுறைகள் எப்படி உள்ளன? இன்றைக்கு எந்தப் பத்திரிகையைத் திறந்து பார்த்தாலும், கணவனோடு உல்லாசமாகப் படகு சவாரி செல்கிறார்கள். உடனே மனைவி, கணவனைத் தள்ளி விடுகிறாள். கல்லைத் தூக்கிப்போட்டுக் கொலை செய்ய வருகிறாள் என்பவை போன்ற அத்தனை அருவருக்கத்தக்க செய்திகளும் இந்த மண்ணிலே வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இந்த நாடு தட்டிக் கேட்காமல் சென்று கொண்டிருந்தால், இந்த நாட்டினுடைய பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம், தமிழ் இனம், மொழி இவற்றையெல்லாம் பேசுகின்ற நாம், இன்றைக்கு இந்த நிலைகளெல்லாம் இந்த மண்ணைவிட்டு மறைந்து போய்விடும் என்கிற ஆதங்கத்தில்தான் சொல்கிறோமேதவிர, இதை நாங்கள் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இந்த அரசு இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசுக்கு அதிகாரம் இருந்தால், மத்திய அரசை, நாம் அனைவரும் ஆதரிக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தால் வலியுறுத்தி, இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதைக் குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், அரசாங்கத்திற்கு இந்த யோசனைகளைச் சொன்னதற்கு நன்றி. நம்முடைய நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்காக, நாளை முதல் வேல்முருகன் அவர்கள் வேட்டி, சட்டை அணிந்து வந்தால் நல்லது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு மூத்த அமைச்சர். நான் மட்டும்தான் பேண்ட் சட்டை போடுகிறேனா, மற்றவர்களெல்லாம் போடவில்லையா? நான் வேட்டி, சட்டையும் அணிந்து வருகிறேன். நான் சொல்வது, சமூகத்தினுடைய ஒரு முக்கியமான பிரச்சினை. இதை ஏதோ ஒரு விளையாட்டாகவோ, சிரிப்புக்காகவோ, நகைச்சுவைக்காகவோ நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடை அணிவது என்பது, கலாச்சாரத்தை வெளிப்படுத்துவதாக இருக்கலாம். ஆனால், அதேநேரத்தில் convenience என்பதும் இருக்கிறது. தந்தை பெரியார் அவர்களே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஆண்களைப்போலப் பெண்களும் உடையணிய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சார், இருங்கள் சார். அதைத்தான் முதலில் சொல்லிவிடுகிறேன். சும்மா, நாம் நினைத்ததையெல்லாம் தத்துவம் என்று பேசிக்கொண்டேயிருக்க முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், இருங்கள். அமைச்சர் பேசிய பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பெண்கள் ஒரு காலத்திலே புடவைதான் அணியவேண்டும் என்று இருந்தது. இன்றைக்கு அவர்களுடைய தேவைக்காக—சைக்கிள் ஓட்டுகிறார்கள், சிலர் டூ வீலர் ஓட்டுகிறார்கள்—அதற்காக உடைகளை மாற்றிக்கொண்டு செல்லக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. அதற்காக உடனே, கலாச்சாரம் அழிந்து போய்விட்டது என்று சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? கலாச்சாரம் என்பது ஆடை அணிவதில் மட்டுமல்ல. மனதிலே இருக்கிற பண்பாட்டிலேயும் வளர்ந்திருக்கிறது. அதற்காகத்தான் கலைஞர் அவர்கள், சமத்துவத் திருநாள், சமத்துவப் பொங்கல் என்று, கலாச்சாரங்களை வளர்க்க வேண்டுமென்ற எண்ணங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆடைகள் என்பது, காலத்திற்கேற்ப, தேவைக்கேற்ப மாறுகிற சூழ்நிலை. நம்

[டாக்டர் க. பொன்முடி] [2008 ஜனவரி 28

ஊரில்கூடத்தான், அந்தக் காலத்தில் ஏர் ஓட்டினார்கள். எப்படி ஏர் ஓட்டினார்கள்? உங்களைப்போல பேண்ட் போட்டுக்கொண்டா போய் ஏர் ஓட்டினார்கள்? அன்றைக்கு கோவணம் கட்டிக்கொண்டுதான் ஏர் ஓட்டினார்கள். அதை அரைகுறை ஆடை என்று சொல்ல முடியுமா? அன்றைய கலாச்சாரம் அது. காலத்திற்கேற்ப ஆடைகளும், உடைகளும் மாறிக்கொண்டிருப்பது இயற்கை. அப்படிச் செய்கிறபொழுது, அதை நாம் பார்க்கிற பார்வையில்தான் அநாகரிகம் இருக்கிறது. சில நேரங்களில் சிலர் செய்கிறார்கள். நீங்கள் சொல்வதை நாங்கள் முழுமையாக மறுக்கவில்லை. சில நேரங்களில் சிலர், அதுபோன்ற உடைகளை அணிகிறபோது, அதைத் தடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், இதனாலேயே கலாச்சாரம் அழிந்துவிடுகிறது என்று ரொம்ப மிகைப்படுத்திப் பேசுவதும் தேவையில்லாத ஒன்று.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருபோதும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. "பதினெட்டு வயசு, இளமொட்டு வயசு, ஏங்குது பாய்போட" என்ற வரிகளிலே, தமிழ் மண்ணிலே, தமிழர் குடும்பங்களிலே, நம்மை அறியாமல், நம்முடைய வீதிகளிலே, நம் முற்றங்களிலே, தொலைக்காட்சியிலே தமிழன் தொலைத்துக் கொண்டிருக்கிறான். வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கிறான். அண்ணன் தம்பிகள், தன் உடன் பிறந்த சகோதரியை காம இச்சைக்குப் பலியாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; தந்தை தன்னுடைய மகளைக் கற்பழிக்க முயற்சிக்கிறான் என்ற அன்றாடச் செய்திகள் இந்த நாட்டிலே வந்து கொண்டிருக்கின்றனவா, இல்லையா? ஏதோ நாம் போட்டிருக்கிற பேண்டைப் பற்றியும், உடைகளைப் பற்றியும் நான் சொல்லவில்லை. இந்த நாட்டிலே அவலங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு, புத்தாண்டைக் கொண்டாடுகிறோம் என்ற பெயரிலே, ஒரு பெண்ணை இருபதுக்கும் மேற்பட்ட நபர்கள் கடத்திச் சென்று, தூக்கிக் கொண்டுபோய் கற்பழிக்கின்ற அவலம் நடந்து கொண்டிருக்கிறது. ஈவ் டீசிங் எப்படித் தொடங்கியது? இந்த அவலங்களைச் சுட்டிக் காட்டுகிறோம். இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தடுத்து நிறுத்த வேண்டும்.

இன்றைக்கு நாம் எத்தனையோ சலுகைகளைத் தருகின்றபோது, இந்த பட அதிபர்களை, தயாரிப்பாளர்களை அழைத்துப் பேச வேண்டும். தமிழிலே படத்தின் பெயர் வரவேண்டும் என்பதற்காக, வரிவிலக்குத் தர வேண்டும், தலைப்பு தமிழில் வைப்பதற்காக என்று



2008 ஜனவரி 28] [திரு. தி. வேல்முருகன்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையா? இன்றைக்கு தமிழ்ப்படப் பெயர்களெல்லாம் தமிழிலே மாற்றப்படுவதற்கு முன்முயற்சி நடைபெறவில்லையா? நாங்கள் ஒட்டுமொத்த சினிமாவையும் குறை சொல்லவில்லை. ஒட்டுமொத்த சின்னத்திரையையும் குறை சொல்லவில்லை. இன்றைக்கு நூற்றுக்கு தொண்ணூறு சதவிகிதம், இதுபோல அநியாயங்கள், அக்கிரமங்கள், ஆபாசக் கூத்துகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். பேண்ட் போட்டுக்கொண்டு வேல்முருகன் இருக்கிறார் என்று மட்டும் சொல்லாதீர்கள். பேண்ட் எல்லோரும் போடுவார்கள். ஆகவே, நான் சொல்கின்ற கருத்தினுடைய வலியை உணர்ந்துகொள்ளுங்கள். இன்றைக்கு எவ்வளவு மோசமானதொரு கலாச்சாரச் சீரழிவை நோக்கி, தமிழ்ச் சமூகமும், நம்முடைய ஊடகங்களும் நம்மை அழைத்துச் செல்கின்றன என்பதற்காக நான் சொல்கிறேன்.

T.R.P. Rating என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். இதில் நடக்கிற கூத்து என்னவென்றால், T.R.P. Rating-லே, சில தனியார் தொலைக்காட்சிகளுக்கு வருமானம் வரவேண்டும் என்பதற்காக, இதுபோன்ற மோசமான காட்சிகளையும், ஆட்டங்களையும், இந்த two piece உடைகளைப் போட்டுக்கொண்டு ஆடுபவர்களைக் கொண்டுவந்து ஆடவிட்டால், அதை மக்கள் அதிகமாகப் பார்க்கிறார்கள் என்று அதைத் திணிக்கின்றபோது, அந்த T.R.P. Rating என்பது, வெறும் 650 வீடுகளிலே அந்தத் தொலைக்காட்சியை வைத்துவிடுகிறார்கள். அதிலே வருகிற கணக்கை எடுத்துப் பார்த்தால், ஒரு ஆண்டுக்கு 4,000 கோடி ரூபாய் ஒரு தொலைக்காட்சி சம்பாதிக்கிறது. அப்படி, தன்னுடைய குடும்பம் நன்றாக இருக்கவேண்டும், தான் கோடீஸ்வரனாக வரவேண்டும், தான் வாழவேண்டும் என்பதற்காக ஒட்டுமொத்த இந்த தமிழ்ச் சமுதாயத்தை, எதைக் கொடுத்தாலும் பரவாயில்லை, எந்த வக்கிரத்தைக் காட்டினாலும் பரவாயில்லை, எந்த ஆபாசத்தைக் காட்டினாலும் பரவாயில்லை, எந்தப் பண்பாட்டுக் கலாச்சாரச் சீரழிவைக் காட்டினாலும் பரவாயில்லை, நம்மைக் கேட்பதற்கு இந்த நாட்டிலே நாதி இல்லையென்கிற நிலையே இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் எங்களுடைய ஆதங்கத்தை, என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

*பிற்பகல் 12-30*

ஏனென்று சொன்னால், நீங்கள் பேசுகிறீர்களே, நான் பேண்ட் போட்டதைப்பற்றிச் சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன், கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த தொலைக்காட்சியிலே—இன்றைக்கு மக்கள் தொலைக்காட்சியிலே புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஒவ்வொரு தமிழனும் தன்னுடைய மரபுவழி தமிழன் தன்னுடைய தாய்மொழியை மறந்துவிடக்கூடாது என்பதற்காக—உலகமெல்லாம் வருகின்ற அனைத்துத் தொலைக்காட்சிகளுக்கிடையே எங்களுடைய நாட்டினுடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும், மொழியின் தன்மையையும் உலகுக்கு எடுத்துச் சொல்கின்ற ஓரே தொலைக்காட்சி மக்கள் தொலைக்காட்சி என்று பாராட்டப்படுகிற நிலையில் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மகிழுந்து, சரக்குந்து, தொடர் வண்டி என்கிற புதிய சொற்றொடர்களை தமிழ் மொழியிலே உருவாக்கியது "தமிழ் ஓசை" பத்திரிகை என்கிற அளவிலே ஒரு முன்னுதாரண நடவடிக்கையில்தான் இன்றைக்குப் பாட்டாளி மக்கள் கட்சியும், எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களும் எங்களை வழிநடத்திச் செல்கின்றதால் அந்த அடிப்படையிலேதான் நல்ல கருத்துகளை, சொல்ல வேண்டிய ஆட்சியாளர்களிடத்தில், சொல்ல வேண்டிய தலைவர்களிடத்தில் சொன்னால், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றால், நிச்சயமாக ஒரு நியாயம் பிறக்கும்; இதிலே ஒரு நடவடிக்கை எடுக்கப்படும். உரியவர்களை அழைத்துப் பேசி இதற்கு ஒரு தீர்வு காண்பார்கள், நிச்சயம் இந்தத் தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு வழி பிறக்கும் என்ற ஆதங்கத்தின், அடிப்படையின் வெளிப்பாடுதான் என்னுடைய உரை; இந்தப் புள்ளிவிவரங்கள்.

இன்னும் சொல்லப்போனால், காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து (மணியடிக்கப்பெற்றது) வெளியிடப்பட்டிருக்கிற வெளியீடுகளை அவர்களிடத்திலே தந்தபோது அவர் அதை வாங்கிப் படித்துவிட்டுச் சொன்னார், நா கூசுகிறது என்று. அவ்வளவு மோசமான வரிகள். இங்கே அருமை சகோதரிகள் இருக்கிறார்கள், தாய்மார்கள் இருக்கிறார்கள், பெண் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். நான் இப்படிப்பட்ட வரிகளைச் சொல்வதற்கு இந்த அவையிலே மன்னிப்பு கோருகின்றேன். ஆனால், முதலமைச்சர் அவர்கள்கூட இவ்வளவு மோசமான வரிகளா என்று சொன்னார். நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஆயிரம்



வேலைகள் இருக்கும், பிரச்சினைகள் இருக்கும். இந்தச் சமுதாயச் சீர்கேடுகளும், இந்தக் கலாச்சாரச் சீர்கேடுகளும் அவருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் இருக்கும். ஆக, வேல்முருகன் அவர்களிடம் எடுத்துச் சென்றால், நிச்சயமாக முதல்வர் அவர்கள் இதிலே ஒரு நல்ல நடவடிக்கை எடுப்பார்கள் என்கிற அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தானே தவிர, நான் வேறு எதற்காகவும், ஒட்டுமொத்தமாகக் குற்றஞ்சாட்ட வேண்டும், திரைத் துறையே மோசமாக இருக்கிறது, சின்னத்திரையே மோசமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. ஏன் நல்ல படங்கள் வரவில்லையா? 'சேது' வரவில்லையா? 'அழகி' வரவில்லையா? எத்தனையோ புதுப் படங்களும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவற்றிலே ஒன்றிரண்டு மட்டும்தான் நம்முடைய குடும்பத்தோடு உட்கார்ந்து பார்க்கும்படியாக இருக்கின்றன.

வீட்டிலே கொலை நடக்கிறது. மாமியாரை கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்றுவிட்டு பீரோவிலிருந்து நகையை எடுத்துக்கொண்டு போனால்கூட நம்முடைய பெண்கள் தொலைக்காட்சியைப் பார்த்து அழுதுகொண்டிருக்கிறார்கள். பெண்மணிகள் என்றாலே ஏதோ அழுவதற்காகப் படைக்கப்பட்டவர்கள்போல, கூலி வேலையைச் செய்வதற்குப் படைக்கப்பட்டவர்கள்போல அவர்களைக் காட்டுகின்ற அந்த நிகழ்ச்சிகள், அவர்களை ஏளனம் செய்வதைப்போல இருக்கிறது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு கட்டுப்பாடுகளே கிடையாது. இன்றைக்கு எஃப்.எம். என்று அலைவரிசை வந்திருக்கிறது. அதிலே என்னக் கட்டுப்பாடு இருக்கிறது? நீங்கள் எங்கேயாவது வண்டியிலே போகும்போது கொஞ்சம் கேட்டுப் பாருங்கள். ஒரு காதலன் காதலிக்குச் சொல்கின்ற வார்த்தைகளும், காதலி காதலனுக்குச் சொல்கின்ற வார்த்தைகளும், அவ்வளவு அருவருக்கத்தக்க, அவ்வளவு மோசமான வார்த்தைகளாக இருக்கின்றன.

பிறகு, நேரடி நிகழ்ச்சி என்று சொல்லி "ஹலோ" என்று ஃபோனைப் போட்டு, அந்த டி.வி.யிலே பேசுகிறார்கள். உலகம் முழுவதும் பார்க்கிறார்கள். 18 வயது முடிந்து மணம் முடிக்கக் காத்திருக்கிற தன்னுடைய பெண்ணின் பெயர்கூட அதிலே வந்துபோனதென்றால், அந்தக் குடும்பம் தன்னுடைய மகளையே சந்தேக வட்டத்திற்கு உட்படுத்திக்கொண்டு, அந்த இளம் பிஞ்சு வயதிலேயே அவள் மன ரீதியாகப் பாதிக்கப்படுகிறாள். பெண்கள் பண்பியல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்றார்கள். குடும்ப உறவுமுறைகளை வழி நடத்துகின்ற அந்த நிலையிலிருந்து அவருடைய வாழ்க்கைச் சீரழிக்கப்படுகிறது. ஆக,

தடுமாறி இளைய சமுதாயம் செல்வதற்கு இதுபோன்ற தவறுகளை இந்த மண்ணிலே விதைத்துக்கொண்டிருக்கிறார்களே. இதை யாரும் கேட்பதற்கு நாதி இல்லையா என்கிற ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் எனனுடைய கருத்துகள்.

கொலை, கொள்ளை, வழிப்பறி எப்படிச் செய்ய வேண்டுமென்று காட்டுகிறார்கள். கர்ப்பிணிப் பெண்களை ஒருவன் அப்படியே வயிற்றிலே கத்தியால் குத்திக் கொலை செய்கிறான். ஏ.கே. 47 ரகத் துப்பாக்கியைக் கொண்டு படபடவென்று சுட்டுக் கொல்கிறான். ஒன்பதாவது மாடியிலிருந்து குதித்து ஒரு பெண்ணைக் காதலிக்கிறாராம், பெண்ணைத் தர மறுக்கிறார்களாம், உடனே மாமனாரையே கொலை செய்கின்ற ஒரு நிகழ்ச்சி. இவற்றையெல்லாம் இந்த இளம் சமுதாயம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். இவற்றையெல்லாம் இந்த இளைய சமுதாயம் பின்பற்றுகிறது. அதனுடைய வெளிப்பாடுதான், நான் திரைப்படத்தைப் பார்த்துவிட்டுக் கொலை செய்தேன், நான் திரைப்படத்தைப் பார்த்துவிட்டுத்தான் என்னுடைய நண்பனைக் கொலை செய்தேன் என்கிற நிலை. பள்ளியில் படிக்கிற ஒரு சிறுவன் கொலைகாரனாக மாறுவதற்கு இந்த ஊடகங்களும், இந்தச் சின்னத்திரையும், இந்த வண்ணத்திரையும் பெரிதும் காரணமாக இருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு விரைவாக எடுக்க வேண்டும்.

'7G - ரெயின்போ காலனி' என்று ஒரு படம் வந்தது. அந்தப் படத்திலே, விடிந்தால் திருமணம், பெற்றோர்களால் பார்த்து முடித்து வைக்கப்பட்ட திருமணம். ஆனால், திருமணத்திற்குப் போவதற்கு முன்பாக அந்தப் பெண்—கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த மண் என்று வீரம் பேசுகிறோமே, வசனம் பேசுகிறோமே, கருத்துச் சொல்கிறோமே இந்த மண்ணில் அவன் பாடல் எடுக்கிறான், படம் எடுக்கிறான், தன் திருமணத்திற்குத் தாலியைக் கழுத்திலே வாங்கிக் கொள்வதற்கு முன்பாக--முதலிலே வேறு ஒருவனோடு தன்னுடைய காம இச்சையைத் தீர்த்துக்கொள்கிற மாதிரி காட்சி அமைக்கிறார்கள். இதையெல்லாம் நாம் அனுமதித்தோம் என்று சொன்னால், எந்த நாட்டில் நாம் வாழ்கிறோம் என்கிற மிகப் பெரிய அவலம் இந்த மண்ணிலே





தொடரும். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது சட்டமன்றப் பேரவையின் 7-வது கூட்டத் தொடரிலே, மேதகு ஆளுநர் அவர்களால் உவந்தளிக்கப்பட்டிருக்கக்கூடிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களது உரையில், கடந்த ஆண்டுகளில் மத்திய அரசு அமைத்த நிதிக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கு நிறைவு அளிப்பதாக இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பொதுவாக தமிழகம் போன்று சிறப்பாகச் செயல்படக்கூடிய மாநிலங்களுக்கு, நிதிப் பகிர்வு தொடர்ந்து குறைக்கப்பட்டு வந்துள்ளது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே இருக்கக்கூடிய 39 நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவோடு செயல்படக்கூடிய மத்திய அரசாங்கம், நன்கு செயல்படக்கூடிய மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வினைக் கூடுதலாக வழங்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மாதம் பெய்த பெரு மழையாலும், வெள்ளத்தாலும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பாலங்கள், சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. பயிர்களுக்கும் கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கிறது. சேதத்தின் மதிப்பை ஆய்வு செய்த மாநிலத்தினுடைய அமைச்சர் பெருமக்கள், அதிகாரி பெருமக்கள் எல்லாம், 1,510 கோடி ரூபாய் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய நிபுணர் குழுகூட, அந்தச் சேத மதிப்பீட்டை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சேதத்தை சரி செய்வதற்காக மாநில அரசாங்கம் 200 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி அதற்கான பணிகள் நடந்து கொண்டிருந்தாலும்கூட, கடந்த மாதம் பெய்த

பெருமழையால், வெள்ளத்தினால், ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த இழப்புகளை உடனடியாகச் சரி செய்வதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய மாநில அரசு கேட்டிருக்கக்கூடிய நிதியினை ஒதுக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இன்றைக்குத் தொடர் மழை பெய்தாலும்சரி அல்லது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும்சரி, டெல்டா மாவட்டங்களிலே கடுமையான பயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பயிர் சேதங்களைத் தடுப்பதற்கு டெல்டா மாவட்டங்களிலே இருக்கக்கூடிய கடலுக்குச் செல்லக்கூடிய வடிகால் பகுதிகள் எல்லாம் இப்பொழுது அடைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த வடிகால் பகுதிகளைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாடு என்று வரும்போது, அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது என்னவென்றால், தரிசு நிலங்களைப் பண்படுத்தி, அவற்றை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கும் திட்டத்தின்கீழ், 1 இலட்சத்து 38 ஆயிரம் விவசாயிகளுக்கு, 1 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இருக்கிறது. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் 55 இலட்சம் ஏக்கர் நிலங்கள் தரிசாக இருக்கின்றன. இந்த நிலங்கள் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் என்ற திட்டம் தொடங்கப்பட்டு இன்றைக்கு 1 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் மட்டுமே மாநிலத்தில் இருக்கக்கூடிய நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக புள்ளிவிவரம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை தமிழகத்திலே அமலாக்குவதற்கு முன்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசு தலைமையிலான மேற்கு வங்க மாநிலத்திற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர், அதிகாரி பெருமக்கள் எல்லாம் சென்று அங்கே தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், நிலமற்றவர்களுக்கு நிலம் அளிக்கக்கூடிய திட்டத்தை ஆய்வு செய்து, அந்தத் திட்டத்தை தமிழகத்திலே நாம் இன்றைக்கு அமலாக்கிக்கொண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட அமலாக்கம் என்று வரும்போது மாநில அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் முன்வைக்க விரும்புகிறேன்.





இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் பண்படுத்தப்படாமல் இருக்கக்கூடிய தரிசு நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற ஒரு வெள்ளை அறிக்கை இந்தப் பேரவைமுன் வைக்கப்பட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். ஏனென்றால், கடந்த காலத்திலும் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் என்று சொல்லப்பட்டது. இப்பொழுதும் சொல்லப்படுகிறது. ஆனால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கிறதா என்றால் கிடைக்காத சூழ்நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் நிலப் பயன்பாடு பற்றிய ஒரு வெள்ளை அறிக்கையை மாநில அரசாங்கம் வெளியிட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்து, இலவச பட்டா. கடந்த ஆண்டு, 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி தமிழகம் முழுவதும் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வாழக்கூடிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளுக்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இலட்சக்கணக்கான மக்களை அணி திரட்டி போராட்டம் நடத்தியது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மூன்று இலட்சம் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் 30 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அரசுப் புறம்போக்கு நிலங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இந்தத் திட்டத்தின்மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று... (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று நான் குறிப்பிட்டுச் சொல்வது (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக இருங்கள்.

*பிற்பகல் 12-40*

**திரு. கே. மகேந்திரன்:** அதேபோன்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை கடந்த 8 மாதங்களுக்கு முன்பாக, பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மட்டும் 5,261 விண்ணப்ப மனுக்கள் இலவசப் பட்டா வேண்டி கொடுக்கப்பட்டன. இன்றைக்குவர்ரை ஒருவருக்குக்கூட அங்கே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர் பகுதிகளில் 1965 ஆம் ஆண்டு அகதிகளாக தாயகம் திரும்பிய பர்மா தமிழர்கள் தமிழக அரசாங்கத்தால் குடியமர்த்தப்பட்டார்கள். 40 ஆண்டுகளுக்குப் பின்பும்கூட, இன்றைக்கு வரை அந்த மக்களுக்கு இலவசப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாக மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளுடன் பேசப்பட்டதற்குப் பின்பும்கூட, 40 ஆண்டுகளுக்குப் பின்பும்கூட இன்றைக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. நேற்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு ஒரு திருமணத்திற்கு வந்தபோது இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு பேசி, உடனடியாக அந்தப் பட்டா வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, அகதிகளாக தாயகம் திரும்பிய பர்மா தமிழர்கள் 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பட்டா இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்சிகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அரசு விதிகள் தளர்த்தப்பட்டு, இந்த மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், உடனடியாக பட்டா வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேபோன்று, கல்வி சம்பந்தமாகச் சொல்லும்போது, மாநிலத்தில் அனைவருக்கும் 5 வருட ஆரம்பக் கல்வி கிடைக்க வேண்டும் என்ற குறிக்கோளை இந்த அரசு எய்தியுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பத்திரிகைகளிலே வந்திருக்கக்கூடிய செய்தி, இந்திய நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஆரம்பக் கல்வியைப் பயிலக்கூடிய அனைத்து மாநில மாணவர்களது படிப்புத் திறன் என்று வரும்போது, தமிழகம் இன்றைக்கு பல மாநிலங்களோடு ஒப்பிடும்போது பின்னடைந்திருப்பதாக ஆய்வு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அனைவருக்கும் தரமான ஆரம்பக் கல்வி, படிப்புத் திறனோடுகூடிய ஆரம்பக் கல்வி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் மேற்கொள்வதோடு, சமச்சீர் கல்விக் கொள்கை தமிழகத்தில் அமலாக்கப்படும் என்று கடந்த ஆண்டிலே சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், இந்த ஆளுநர் உரையில் அதுசம்பந்தமான எந்த அறிவிப்புகளும் இல்லாமல் இருக்கிறது. வரக்கூடிய கல்வியாண்டில்





தமிழகத்தில் அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்கக்கூடிய அளவில் சமச்சீர் கல்விக் கொள்கை அமலாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்கிறேன்.

தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி சம்பந்தமாக பல விவரங்கள் நம்முடைய ஆளுநர் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. 4 புதிய கம்பெனிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 12 வெளிநாட்டு நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பல்வேறு நாடுகளுடைய நிறுவனங்களோடு ஏற்படுத்தும்போது, அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் என்ன ஷரத்துகள் இருக்கின்றன என்பதை குறைந்தபட்சம் இந்த அவைக்காவது மாநில அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால், இப்பொழுது நடைபெற்ற விவாதத்தில்கூட மின் தட்டுப்பாடு என்று வரும்போது, 4 கம்பெனிகளுக்கு 700 மெகா வாட் மின்சாரம் வழங்கப்பட்டதால் மின் தட்டுப்பாடு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சி, இந்த மாநிலத்தினுடைய மக்கள் வளர்ச்சி, வேலைவாய்ப்புக்காக இன்று அயல்நாட்டுக் கம்பெனிகள் தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்கான அனுமதி வழங்கும்போது, இந்த மாநில மக்களது உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை இந்த மாநில அரசு மேற்கொள்ள வேண்டும். ஆகவே, வெளிநாட்டு நிறுவனங்களோடு அல்லது இந்தியாவில் இருக்கக்கூடிய பெரிய நிறுவனங்களோடு போடப்படக்கூடிய M.o.U.-க்கள் என்னவென்று இந்த அவையிலே தெரிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

கடந்த டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து திருவொற்றியூரிலே இருக்கக்கூடிய மெட்டல் பாக்ஸ் நிறுவனம் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கதவடைப்பு சட்ட விரோதமான கதவடைப்பு என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதற்குப் பின்புகூட, இன்றுவரை அந்த மெட்டல் பாக்ஸ் நிறுவனம் திறக்கப்படாமல், அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் வீட்டிலே மிக மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலத் துறை உடனடியாக இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு, அந்த மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தைத் திறப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

[திரு. கே. மகேந்திரன்] [2008 ஜனவரி 28

விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தைப் பொறுத்தவரை சிறு தொழில்களில்தான் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைத்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைப்பதை நாம் உறுதிப்படுத்துவதற்கு இந்த சிறு தொழில்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும், பொறுப்பும், கடமையும் இந்த மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறது. மின் வெட்டு ஏற்பட்டால்கூட அதிலே பாதிப்படையக்கூடிய தொழிலாக சிறுதொழில்கள் இருக்கின்றன என்றால், அந்த சிறு தொழில்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

பிற்பகல் 12-45

சமீபத்திலேகூட மத்திய அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு, 530 பொருள்களுக்கு வரி விலக்கு மத்திய அரசாங்கத்தால் அளிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இப்படிப்பட்ட வரி விலக்குகள் அளிக்கப்பட்டால் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய சிறு தொழில்களை நம்மால் பாதுகாக்க முடியுமா என்றால் நிச்சயமாகப் பாதுகாக்க முடியாது. அதற்கென்று தனியான கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

மாநில அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் பற்றி ஆளுநர் உரையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தாலும் இன்றைக்கு வினியோகம் என்று வரும்போது மாநகரப் பகுதிகளில் குறிப்பிட்ட மக்களுக்குத்தான் அந்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வினியோகிக்கப்படுகின்றன. மாநகரத்திலே இருக்கக்கூடிய, சென்னையிலே இருக்கக்கூடிய மக்கள் அனைவருக்கும் வழங்க வேண்டுமென்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த உணர்வைப் புரிந்துகொண்டு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைவருக்கும் கிடைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். அடுத்து, சென்னை பெருநகர வளர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** இந்தியாவைப் பொறுத்தவரையிலே, most urbanised மாநிலமாக நம்முடைய மாநிலம் மாறிக் கொண்டிருக்கிறது.



2008 ஜனவரி 28] [திரு. கே. மகேந்திரன்]

சென்னை நகரத்திற்கு தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வரக்கூடிய காரணத்தால் இப்போது பெருநகர வளர்ச்சி என்பது அடிப்படைத் தேவையாக இருக்கிறது. பெருநகர வளர்ச்சி என்று வரும்போது ஆளுநர் அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டவாறு elevated express way உள்பட பல்வேறு பெருநகர வளர்ச்சிக்கான திட்டங்கள் இங்கே கொண்டு வரப்பட்டாலும்கூட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், இன்னும் 4 பேர் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** புதிய திட்டங்கள் என்பது கொண்டு வரப்பட்டாலும்கூட, இன்றைக்கு வட சென்னை மாவட்டத்தில் 50 ஆண்டுகாலமாக, நாங்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கக்கூடிய வியாசர்பாடி மேம்பாலக் கட்டுமானப் பணி தொடங்கப்படாத காரணத்தால் கடுமையான போக்குவரத்து நெரிசல் அந்தப் பகுதியிலே ஏற்பட்டு, தினம் தினம் மக்கள் போக்குவாத்து நெரிசலால் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அங்கே ஒரு மேம்பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இப்போது, professional colleges-லே அரசு ஒதுக்கீட்டில் பயிலக்கூடிய ஆதி திராவிட மாணவர்களுக்கு 60 சதவிகிதத்திற்கும் கூடுதலான மதிப்பெண் பெற்றிருப்பவர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும், Payment seat-லே சேரக்கூடியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படமாட்டாது என்று ஒரு சுற்றறிக்கையை மத்திய அரசாங்கம் அனுப்பி இருக்கிறது. அந்தச் சுற்றறிக்கை நம்முடைய மாநிலத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்ட காரணத்தால் payment seat-லே சேரக்கூடிய ஆதி திராவிட மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காது என்ற அச்சம் இப்போது மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டு பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நம்முடைய மாநில அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகரத்திலே, குறிப்பாக அவருடைய தொகுதியிலே பட்டா ஒன்றுகூட வழங்கப்படவில்லை என்ற ஆதங்கத்தை இங்கே வெளிப்படுத்தினார்கள். சென்னை மாநகரத்திலே மட்டும் கடந்த ஒரு வருட காலத்திலே அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக கடந்த மாதம் 1,742 பேருக்கு நகர்ப் பகுதியிலே, மத்திய நகர்ப் பகுதியிலே பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய மதிப்பு மட்டும் ஏறத்தாழ 94 கோடி ரூபாய். இங்கே, சென்னை மாநகரத்திலே நிலத்தினுடைய விலை வானுயரத்திற்கு உயர்ந்து இருக்கிறது. ஆக, ஒவ்வொன்றையும் கண்டறிந்து, அவை அரசுப் புறம்போக்கு நிலங்களிலே, அதுவும் குறிப்பாக ஆட்சேபகரமற்று இருக்கிற நிலங்களிலே நாம் பட்டா வழங்குகிறோம். நீர்நிலைப் பகுதியிலே மட்டும் வரத்து வாய்க்கால்கள் அல்லது ஏரிப் பகுதிகளை மட்டும் நாம் முற்றிலும் தடை செய்து இருக்கின்ற அந்த நிலை நகரத்திலே தொடர்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல அவருடைய தொகுதியிலே தகுதியிருப்பின்—நகரத்திலே தொடர்ந்து அந்த ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, கண்டிப்பாக அவருடைய தொகுதியில் பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–50*

இன்னொரு விவரத்தையும் சொன்னார். இந்த அவையிலே இரண்டு விஷயங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டு, அதற்குச் சரியான விவரங்களைத் தெரிவிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக, 30 இலட்சம் பேர் தமிழ்நாட்டிலே அரசுப் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்கள் என்ற ஒரு கணக்கீட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அரசினுடைய சார்பாக, 2000 ஆம் ஆண்டிலே தமிழகத்திலே அரசுப் புறம்போக்கு நிலங்களிலே குடியிருக்கின்றவர்கள் எத்தனை பேர் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஓர் ஆய்வு செய்ய ஆணையிட்டார்கள்.

அவர்களுக்கு சிறப்புத் திட்டத்திலே பட்டா வழங்குவதற்காக ஆணையிட்டு, கணக்கு எடுத்தபோது, தமிழகத்திலே மொத்தம் 6,40,000 பேர்தான் இருந்தனர். தமிழகத்திலே அனைத்து மாவட்டங்களிலும், ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்கில் உட்பட அத்தனை





புறம்போக்கு நிலங்களையும் சேர்த்து அரசுப் புறம்போக்கு நிலங்களிலே குடியிருக்கின்றவர்கள் மொத்தமே 6,40,000 பேர்தான். மாண்புமிகு உறுப்பினர்கள் அவையிலே பேசுகின்றவர்களெல்லாம் 30 இலட்சம், 20 இலட்சம், 15 இலட்சம் என்று பேசுகின்றார்கள். ஆனால் அரசாங்கத்தினுடைய கணக்கெடுப்பின்படி, எல்லா மாவட்டங்களிலும் எடுத்திருக்கின்ற கணக்கெடுப்பின்படி, 6,40,000 குடியிருப்புகள்தான் இருக்கின்றன. இதிலே நீர்நிலைப் பகுதிகளிலே மட்டும் ஏறத்தாழ 2½ இலட்சம் பேர் குடியிருக்கின்றார்கள். இதுபோக, மொத்தம் 4 இலட்சம் பேர்தான் இதர ஆட்சேபகரமான அல்லது ஆட்சேபகரமற்ற பகுதிகளிலே குடியிருக்கின்றார்கள். இந்த 4 இலட்சம் பேர்களில் தலைவர் கலைஞர் அவர்கள் சிறப்புத் திட்டத்திலே ஆணையிட்டு, கடந்த ஓராண்டு காலத்திலே மட்டும் தமிழகத்திலே 1,27,000 பேருக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் சொன்னார்கள், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பதைப் பொறுத்தவரை, ஏற்கெனவே கடந்தகால ஆட்சியில் 50 இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பது உண்மை. தரிசு நிலம் என்றால், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் அல்ல. அந்த 50 இலட்சம் ஏக்கர் என்பது தனியாருக்குச் சொந்தமான விவசாயம் செய்யாமல் இருக்கின்ற தரிசு நிலம்தான். அது அரசாங்கப் புறம்போக்கு நிலம் அல்ல. 50 இலட்சம் ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் அல்ல. ஆக, தெளிவாக இப்போது அரசாங்கம் முயற்சி எடுத்து, அரசுப் புறம்போக்கு நிலங்களைத்தான், நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வழங்குகிறோமே தவிர, தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை, விவசாயம் செய்யாத நிலங்களை அரசு எடுத்துக் கொடுப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அது உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் கொடுக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே எழுதி வைத்தார்கள். இப்பொழுது அவர்கள் அப்படியெல்லாம் இல்லை என்று சொல்கின்றார்கள். நம் திராவிட முன்னேற்றக் கழக அரசும்

[செல்வி கே. பாலபாரதி] [2008 ஜனவரி 28

50 இலட்சம் ஏக்கர் இல்லை என்று சொல்கிறது. ஆகவே, வெள்ளை அறிக்கை ஒன்றைத் தயார் செய்து வருவாய்த் துறை சார்பாக வைத்தால், தமிழகத்திலே அரசுக்குச் சொந்தமான தரிசு நிலம் எத்தனை இலட்சம் ஏக்கர் இருக்கிறது, தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலம் எவ்வளவு இருக்கிறது என்ற விவரம் எங்களுக்குத் தெரிய வரும். இல்லையென்றால் மாற்றி, மாற்றி சொல்லிக்கொண்டே போவதால் எந்தப் பலனும் இல்லை என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலம் எவ்வளவு, தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலம் எவ்வளவு என்பதை ஓர் அறிக்கையாக இங்கே வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அரசுக்குச் சொந்தமான தரிசு நிலத்தைப் பற்றி ஏற்கெனவே அவையிலே சொல்லியிருக்கின்றோம். அந்த விவரம் முழு அளவில் தற்போது கையில் இல்லை. இருந்தாலும் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலம் என்று கண்டறிந்து இருப்பது கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். 4 இலட்சம் ஏக்கருக்குள்தான் வரும். 3 அல்லது 3½ இலட்சம் ஏக்கருக்குள்தான் வரும். ஆனால், தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலத்தை மேம்படுத்தி, இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப் போகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். தரிசு நிலத்தை மேம்படுத்தப் போகிறோம் என்று சொன்னார்களே தவிர, ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லவில்லை. இப்பொழுதுகூட நம்முடைய மாண்புமிகு முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, ஆண்டொன்றுக்கு 5 ஆயிரம் ஏக்கர் கொடுத்தோம் என்று சொன்னார்கள். இப்போது எனக்கு ஒரு புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய துறையின் மூலமாக எனக்குத் தந்திருக்கின்ற புள்ளிவிவரத்தின்படி, உபரி நிலமாக 2001–2002 ஆம் ஆண்டு தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சியில் 1,336 பேருக்கு, 1,612 ஏக்கர் கொடுத்திருக்கிறார்கள். 2002–2003 ஆம் ஆண்டு 1,548 பேருக்கு 1,887 ஏக்கர் கொடுத்திருக்கிறார்கள். 2003–2004 ஆம் ஆண்டு 1,442 பேருக்கு, மொத்தம் ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலம் 1,768 ஏக்கர். அதேமாதிரி, 2004–2005 ஆம் ஆண்டு 1,047 பேருக்கு, 1,524 ஏக்கர்தான் கொடுக்கப்பட்டது. ஓராண்டுக்கு 1,000, 1,500 ஏக்கர்தான் ஒப்படை செய்திருக்கிறார்கள். அவர்கள்கூடச் சொன்னார்கள், நாங்கள் ஓராண்டுக்கு 5 ஆயிரம் ஏக்கர் வரை கொடுத்தோம் என்றும், 5 ஆண்டுகளில் 25 ஆயிரம், 30 ஆயிரம் ஏக்கர் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள்



2008 ஜனவரி 28] [திரு. இ. பெரியசாமி]

ஆட்சியில் 2006-2007-ல் மட்டும் நாம் கொடுத்திருக்கின்ற நிலத்தினுடைய மொத்த அளவு, வகைப்பாடு 1, 2-ல், ஏறத்தாழ 70 ஆயிரம் ஏக்கர். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசும்போது கடந்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருந்ததாகச் சொன்னோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.

பிற்பகல் 12-55

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தற்போது ஒரு விளக்கத்தை இங்கே அளித்திருக்கிறார்கள். அரசு மற்றும் தனியார் வசம் இருக்கின்ற தரிசு நிலங்கள் 50 இலட்சம் ஏக்கர் என்று தற்போதுதான் அந்த உண்மையை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்று சொன்னவுடனேயே, எங்கே இருக்கிறது 50 இலட்சம் ஏக்கர் அரசு தரிசு நிலம் என்று கேட்டார்கள். நாங்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினைக் கொண்டுவந்திருக்கிறோம். அரசு மற்றும் தனியார் வசம் இருக்கின்ற 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை படிப்படியாகத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் கொண்டுவந்து அதனைப் பண்படுத்தி விவசாயத்திற்கு உகந்த நிலமாக மாற்றுவதுதான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். ஆக, அரசின் சார்பாக எந்தவிதத்திலும் 50 இலட்சம் ஏக்கர் இல்லை. அதனால் உங்களால் கொடுக்கமுடியாது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நேரத்திலே அறிக்கைகூட விட்டார்கள். இங்கு வந்திருக்கிற நேரத்தில்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் அதை ஆணித்தரமாக எடுத்துச்சொன்னார்கள். அப்போதெல்லாம் "நீங்கள் சொன்னீர்கள், சொன்னீர்கள்" என்று திரும்பத் திரும்பச் சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு ஒரு உண்மை உங்களுக்குத் தெரிவதற்கு 20 மாதங்கள் ஆகியிருக்கிறது. அந்த வகையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஜனவரி 28

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று பதிலளிக்கின்றபோதே அதையும் சொன்னார்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கிற தரிசு நிலம் குறைவுதான், தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலம்தான் அதிகமாக இருக்கிறது என்று. இன்றைக்கு அவர் சொல்கிறார் என்பதல்ல. அன்றைக்கே முதல்வர் அவர்களும் பதிலுரையில் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்லும்போதே அதையும் சொல்லியிருக்கிறார்கள். சொல்லிவிட்டு அரசு தரிசு நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்போம், தனியார் தரிசு நிலங்களை தரம் உயர்த்துவோம்; அந்த அரசு தரிசு நிலங்களைக்கூட நிலமில்லாதவர்களுக்குத்தான் கொடுப்போமே தவிர ஆயிரம் ஏக்கர், ஐநூறு ஏக்கர் என்று கடந்த கால ஆட்சியில் தனியாருக்கு தாரைவார்த்ததுபோல கொடுக்க மாட்டோம் என்று சொன்னோம். அதைத்தான் சொன்னோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் எல்லோரும். திரு. இராசசேகரன் நீங்கள் பேச ஆரம்பிக்கலாம். (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டீர்கள் அல்லவா? முடிந்துவிட்டது அல்லவா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது எப்படியோ, உண்மையை ஒத்துக்கொண்டதற்கு சபையின் சார்பாக நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை என்பது 50 இலட்சம் ஏக்கர் நிலம் விவசாயிகளுக்கு பிரித்துக்கொடுக்கப்படும் என்று நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதைத்தான், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது என்ற நீங்கள் அரசு தரிசு நிலமா, தனியாருக்குச் சொந்தமானதா என்று நீங்கள் சொல்லவில்லை. உங்கள் ஆட்சியில் நீங்கள் அறிவித்ததைச் சொல்லவில்லை. அதனால்தான் நாங்கள் சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன் (குறுக்கீடுகள்). என்ன, திரு. மணி? ஒவ்வொருவராக சொல்லிக்கொண்டே இருந்தால் அவர் பேசுவதற்கு time இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 28]

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வி உதவித்தொகை பற்றி ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்கள். 60 சதவிகிதம் மதிப்பெண் பெற்றவர்களுக்குத்தான் தொழிற்கல்வியிலும், பொறியியல் கல்வியிலும் கல்வி உதவித்தொகை என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்றும் அதை இந்த அரசு ஏற்கிறதா என்றும் கேட்டிருந்தார்கள். தொழிற்கல்வியிலும், பொறியியல் கல்வியிலும் படிக்கின்ற மாணவர்கள் 12 ஆம் வகுப்பில் 60 சதவிகிதம் மதிப்பெண் பெற்றிருந்தால்தான் உதவித்தொகை வழங்கவேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. நம்முடைய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பழைய முறையினைப் பின்பற்ற வேண்டுமென்று மத்திய அமைச்சர் மாண்புமிகு திருமதி மீரா குமார் அவர்களுக்கு 9-1-2008 அன்று நேரடியாகக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள், திரு. மணி. நான்கு பேர் பேச வேண்டியிருக்கிறது. எனக்கு time தரவில்லை, எனக்கு time தரவில்லை என்று ஒவ்வொருவராக சொல்லிக்கொண்டிருந்தீர்கள் என்றால் என்ன அர்த்தம்? சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீணாக நான் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை. தரிசு நிலம் வழங்குவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அரசுப் புறம்போக்கு நிலங்கள் மாவட்ட வாரியாக யாருக்கு, எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றன? அதேநேரத்தில் அனுபவித்து வந்த விவசாயிகளுக்கு, பட்டா இருந்தாலும் சரி, அல்லது புறம்போக்காக இருந்தாலும் சரி, அனுபவித்துக் கொண்டிருக்கிற தரிசு நிலம் அல்லது ஒருவர் பெயரில் இருக்கின்ற தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்கு அரசு உதவி வழங்கப்பட்டிருக்கிறதா? இதை நான்கூட வேதனையோடு வருத்தப்பட்டு சொல்கிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், தோழமைக் கட்சி வரிசையில் இருப்பவர்கள், மற்றவர்களுக்கு அந்தந்த

[திரு. ஜி.கே. மணி] [2008 ஜனவரி 28

தொகுதியிலே நடக்கக்கூடிய தரிசு நிலம் வழங்கக்கூடிய திட்டம் பற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரிவதில்லை. யாருக்கும் சொல்வதும் கிடையாது. தெரிந்தால் நீங்கள் சொல்லலாம், என் தொகுதியில் எங்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்று. தி.மு.க.வைத் தவிர மற்ற கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஒரு தொகுதியிலே எவ்வளவு ஏக்கர் நிலம் வழங்கப்படுகிறது, யாருக்கு வழங்கப்படுகிறது, எப்படி வழங்கப்படுகிறது என்று சொன்னால் நாங்கள் எல்லாம் நிரம்ப சந்தோஷப்படுவோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நேரடியாகவே நீங்கள் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். நேரடியாகவே அமைச்சரிடம் சொல்லியிருக்கலாம். *(குறுக்கீடுகள்)* திரு. இராசசேகரன், பேசுங்கள்.

*பிற்பகல் 1-00*

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னதற்காக நான் பதில் சொல்ல விரும்புகிறேன். எல்லா எம்.எல்.ஏ.-க்களுக்குமே, யாருக்குமே தெரியாது. இது அரசாங்கம் செய்கின்ற வேலை. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நிகழ்ச்சி நடத்தி முதல்வர் வந்து, அமைச்சர்கள் வந்து கொடுக்கிறோம். அந்த function-லே எல்லா எம்.எல்.ஏ.-க்கள் பெயரையும் போடுகிறோம். அதிலே பட்டியல் எவ்வளவு கொடுக்கிறோம் என்று சொல்கிறோமே தவிர, எங்களுக்கே அங்கு இருக்கின்ற எல்லா ஆளுங்கட்சி உறுப்பினர்களும், நாங்களே ஏதோ போய் சொல்லி வாங்குகிறோம் என்பது கிடையாது. யாருக்கும் தெரியாது. அதிகாரிகள், வருவாய்த் துறையில் இருப்பவர்கள் அவர்கள் கணக்கிட்டு வருகின்ற விண்ணப்பங்களைக் கொண்டு முறைப்படுத்திச் செய்கிறார்கள். நிலம் கொடுக்கிறபோது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் விழா நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அதிலே எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரும் வருகிறது. அதிலேதான் அந்த லிஸ்டைக் கொடுக்கிறார்கள். எவ்வளவு பேருக்குக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர இதில் எந்தச் சட்டமன்ற உறுப்பினர் தலையீடும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2008 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* ஒரே ஒரு கருத்து *(குறுக்கீடு)* இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த கிராமத்திலே யார், யாருக்கு நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை புள்ளிவிவரமாக இந்த அவையிலே நான் சமர்ப்பிக்கிறேன். ஏற்கெனவே நிலமற்ற விவசாயிகள் உழுது அனுபவித்துக் கொண்டிருக்கிற அரசாங்க புறம்போக்கு நிலங்களையும் நாம் இப்போது வழங்கி இருக்கிறோம். அது எத்தனை பேருக்கு வழங்கி இருக்கிறோம், எத்தனை ஏக்கர் வழங்கி இருக்கிறோம் என்ற முழுப் பட்டியலை அனைத்து உறுப்பினர்களுடைய பார்வைக்கு இன்னும் ஓரிரு நாட்களிலே இங்கே நான் வழங்குவதற்குரிய ஏற்பாட்டைச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், பேசுங்கள். *(குறுக்கீடு)* Mr. Govindasamy please; time இல்லை. உட்காருங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே– *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. கோவிந்தசாமி என்ன? இப்போது சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு இலவசமாக நிலம் வழங்குகிற இந்தத் திட்டம் முழுமையாக வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால்—இந்த அரசாங்க நிலங்களை—தனியாரிடத்திலே இருக்கக்கூடிய அவர்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை நான் சொல்லவில்லை—அரசு நிலங்களை பல்வேறு காலகட்டங்களில் செல்வாக்குமிக்க பலர் கையகப்படுத்தி அவர்களுடைய சொந்த பூமியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலை தமிழகத்திலே நிறைய இடங்களிலே இருக்கிறது. ஆகவே, நான் கேட்க விரும்புவது இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் அரசு நிலங்களை எங்கெங்கெல்லாம் தனியார் கையகப்படுத்தி வைத்திருக்கிறார்களோ அந்த நிலங்களை எடுத்து ஏழைகளுக்கு வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[திரு. சி. கோவிந்தசாமி] [2008 ஜனவரி 28

குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் இன்றைக்கு 200 ஏக்கர், 300 ஏக்கர் வைத்திருக்கிற எஸ்டேட் உரிமையாளர்கள் அரசு நிலங்களை, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே வருவாய்த் துறையை இன்னும் ஆழமாக முடுக்கிவிட்டு அந்தத் தனியார் நிலங்களை யாரெல்லாம் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் கண்டறிந்தால் நிச்சயமாக பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த முடியும். இந்தத் திட்டமும் சிறப்பாக நடைபெற வாய்ப்பு இருக்கிறது. அதை அரசு செய்யுமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல தனியார், அரசாங்க நிலத்தை, மிகையான நிலங்களை, நூற்றுக்கணக்கான ஏக்கர் அல்லது கூடுதலான நிலங்களை அவர்கள் கையகப்படுத்தி வைத்திருந்தால் அத்தனை நிலங்களையும் அரசு உடனடியாக எடுத்து அவற்றை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக கலைஞர் அரசு மேற்கொள்ளும் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், பேசுங்கள். (குறுக்கீடு) No, no time.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I have no time, no.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது வருங்காலத்தில் இந்த அரசினுடைய கொள்கையை விளக்குவதாக அமைகிறது. பொதுவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதை நாங்கள் வரவேற்கிறோம். வரவேற்கின்ற அதேநேரத்தில் சில அடிப்படையான பிரச்சினைகளைப் பற்றி நான் உங்கள் மத்தியிலே சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளை இணைக்க வேண்டும்.



2008 ஜனவரி 28] [திரு. எஸ். இராசசேகரன்]

இணைப்பதன்மூலமாக நிலத்தடி நீர் அதிகப்படுத்தப்படும் என்கின்ற நல்ல செய்தியை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு அந்தப் பணியை விரைவாக முடிக்க இந்த அரசு முயற்சி செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசின் நிதியுதவி கோரப்பட்டிருக்கிறது. குறிப்பாக அதைப் பற்றி நான் இங்கே பேசுகின்றபோது சொல்ல விரும்புவது என்னவென்றால் என்னுடைய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். கடந்த டிசம்பர் மாதத்தில் பெய்த மழை அங்கே பெய்யவில்லை என்று சொன்னால் குடிதண்ணீருக்குக்கூட மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும்.

பிற்பகல் 1-05

அப்படிப்பட்ட நிலையில், டிசம்பர் மாதம் பெய்த மழை எங்கள் மாவட்ட மக்களுக்கு பால் வார்த்தது போன்று இருந்தது என்று இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் இந்த ஆண்டு மட்டும் காவிரி கரை புரண்டு ஓடுகின்றபோது கொள்ளிடத்தில் திருப்பிவிடப்பட்ட தண்ணீரினுடைய அளவு பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னதைப்போல 70, 80 டி.எம்.சி அடி தண்ணீர் கொள்ளிடத்தில் திருப்பிவிடப்பட்டு, அது கடலில் கலந்தது. அப்படிப்பட்ட நேரங்களில் எங்கள் மாவட்ட மக்கள் இப்படிப் போகின்றதே இந்தத் தண்ணீர், எங்கள் மாவட்டத்திற்கு வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அப்படி ஏங்கிக் கொண்டிருக்கிறபோது, பல ஆண்டு காலங்களாக வற்புறுத்திய எங்கள் மாவட்ட மக்களுக்கு, அந்த மாதிரி நேரங்களில் திருப்பிவிட வேண்டும். மாயனூர் அணைக்கட்டிலிருந்து திருப்பிவிட வேண்டும். அப்படித் திருப்பி விடுவதன்மூலமாக எங்கள் மாவட்டத்தில் வறட்சியைப் போக்கமுடியும் என்று கடந்த 50 ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். நாங்கள் கேட்பது கொள்ளிடம் உபரி நீர்த் திட்டம். அந்தக் கொள்ளிடம் உபரி நீர்த் திட்டம் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறோம். இப்போது நம்முடைய ஆளுநர் உரையில் தமிழகத்தில் உள்ள நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும் என்கின்ற ஒரு பெரிய திட்டத்தைக் கொண்டு வருகின்றபோது, அந்தத் திட்டத்தை மிக விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். காரணம், எங்களுடைய மாவட்ட மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினை அப்படிப்பட்டதாக இருக்கின்றது.

[திரு. எஸ். இராசசேகரன்] [2008 ஜனவரி 28

இப்போது பெய்த மழையைப் பற்றி நான் சொன்னேன். அது பல பேருக்கு மிகப் பெரிய நெருக்கடியைக் கொடுத்திருக்கலாம். பல உயிர்கள்கூடச் சேதமடைந்திருக்கலாம். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்கூட சேதமடைந்திருக்கலாம். அப்படிச் சேதமடைந்தாலும் அந்த மழை எங்கள் மாவட்ட மக்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட மழை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது, அந்த மழையின் காரணமாக பல பகுதிகளில் விவ்சாய நிலங்கள் மிக்க சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. அந்தச் சேத மதிப்பீடு கணக்கிடப்பட்டிருக்கின்றது. 1,510 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்து இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. உடனடியாக அதைத் தீர்ப்பதற்காக தமிழக அரசு ரூ.200 கோடி விடுவித்து இருக்கின்றது. ரூ.1,510 கோடியை மத்திய அரசிடம் கோரி இருக்கிறது. அந்த கோரிக்கை மிக விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும். அப்படி நிறைவேற்றப்படுகின்றபோது அங்கு சேதப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் வழங்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை எங்களுடைய குழுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். அந்த அடிப்படையில் அங்கே வழங்க வேண்டும்.

நெல்லுக்கு மாநில அரசு கொடுப்பதும், மத்திய அரசு கொடுப்பதும் சேர்த்து குவின்டாலுக்கு 825 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது போதுமானதாக இல்லை. ஒரு குவின்டால் நெல்லின் விலை 1,000 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும். மத்திய அரசு இன்றைக்கு ரூ.650 ரூபாய் ஆக்கி, கூடுதல் தொகை சேர்த்து ரூ.825 ரூபாயைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் கோதுமைக்கு குவின்டாலுக்கு 1,000 ரூபாய் விலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கோதுமையினுடைய அதே விலையையே நெல்லுக்கும் வழங்க வேண்டும் என்று நம்முடைய தமிழ்நாட்டு விவசாயிகள் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களும் மத்திய அரசிடம் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரச்சினையை மேலும் ஊன்றிக் கவனித்து நெல்லுக்கு, குவின்டாலுக்கு 1,000 ரூபாய் விலையும், அதேபோல, கரும்புக்கு டன்னுக்கு 1,500 ரூபாய் விலையும் வழங்க வேண்டும்.

அதற்கடுத்தபடியாக, வீட்டுமனைப் பட்டா பற்றி விரிவாக இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் விரிவாக பதில் சொல்லி இருக்கின்றார்கள். 6 இலட்சம் பேருக்குத்தான் பட்டா வழங்க



2008 ஜனவரி 28] [திரு. எஸ். இராசசேகரன்]

வேண்டும் என்ற ஒரு கணக்கிருக்கிறது என்று சொல்கின்றார்கள். அந்தக் கணக்கு 2000 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதியில் மட்டும் சுமார் 3,000 பட்டாக்கள் கொடுக்கப்பட வேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் மொத்தம் 6 இலட்சம் பேருக்குதான் பட்டா வழங்க வேண்டும் என்கின்ற ஒரு கணக்கு எடுத்திருந்தால், மறுபடியும் கணக்கு எடுக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் பட்டா வழங்கவேண்டும். பட்டா வழங்குவதில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக வாரிப் புறம்போக்கு என்று இருந்தால் கொடுக்கக்கூடாது என்று சொல்கின்றார்கள். ஆனால், குடியிருக்கும் இடம் வாரிப் புறம்போக்கு கிடையாது. அதாவது, ஆற்றுப் புறம்போக்கு இல்லாத இடத்தில் குடியிருக்கின்றார்கள். ஆனால், அந்த இடத்தை ஆற்றுப் புறம்போக்கு என்று எழுதி வைத்திருக்கின்றார்கள். வாரிப் புறம்போக்கு என்று எழுதி வைத்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இடங்களிளெல்லாம் கொடுக்கக்கூடாது என்று சொல்லி மதுரை உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டிருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அந்தத் தடையாணை பெறுவதற்கு முன்னால் ஆயிரக்கணக்கான பட்டாக்கள் தயார் செய்யப்பட்டு, எப்போது அடுத்த அறிவிப்பு வரும், கொடுக்கலாம் என்று இருக்கின்றோம் என்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். ஆனால், இப்படிப்பட்ட தடையாணையைப் பெற்று அந்தத் தடையாணையின் மூலமாக பட்டா வழங்குவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-10

இப்படிப்பட்ட, சாதாரணமாக ஆற்றுப் புறம்போக்கு இல்லாத இடங்களில் குடியிருப்பவர்களுக்கு, குளம் புறம்போக்கு என்று இல்லாத இடங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கவேண்டும். சாலையோரத்தில் குடியிருந்தால் நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி பெற வேண்டும், அதைப்போல பொதுப் பணித் துறையில் அனுமதி பெற வேண்டுமென்று சொல்லி பல்வேறு காரணங்களைச் சொல்லி பட்டா வழங்குவதைத் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பட்டா வழங்குவதில் இன்னும் நிபந்தனைகளைத் தளர்த்தி செய்ய வேண்டும். 3 இலட்சம் பட்டாக்கள் நிர்ணயித்து 3 இலட்சத்து 1 பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது. இதுமாதிரி எந்த ஆண்டும் செய்யவில்லை. இன்றைக்கு இந்த அரசுதான் இதைச் செய்திருக்கிறது. ஆகவே, இந்த அரசைப் பாராட்டுகின்ற அதேநேரத்திலே, எதிர்காலத்தில் மேலும் பட்டாக்கள் தரவேண்டுமென்று மனு போட்டு இருப்பவர்களுக்கு, அதற்காக

[திரு. எஸ். இராசசேகரன்] [2008 ஜனவரி 28

காத்திருப்பவர்கள் இன்னும் பல இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, அவர்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வித் துறையைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது உயர்நிலைப் பள்ளியில் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்கு கணினி வழங்குவது, ஆரம்பப் பள்ளியைக் கட்டாயமாக்குவது என்பன போன்ற பல்வேறு அடிப்படையான விஷயங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கக்கூடிய அம்சம் என்றாலும் ஒரு சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக இடைநிலை ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். என்னுடைய மாவட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 395 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருந்தார்கள். ஆனால், இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்க முடியாமல் இப்போது ஒரு தடையாணை பெறப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுமைக்கான ஒரு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற ஒரு அடிப்படையில் தடையாணை பெறப்பட்டிருக்கிறது. அந்தத் தடையாணையின் காரணமாக அந்த ஆசிரியர் நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அந்தத் தடையாணையை உடனடியாக தமிழக அரசு தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட அளவிலேயே அந்த முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இது தமிழ்நாடு முழுமைக்கும் உள்ள முன்னுரிமை என்று சொன்னால், எங்களுடைய மாவட்டம்போல் கல்வி அறிவில் சாதாரணமான நிலையில் இருக்கக்கூடிய மாவட்டங்கள் எல்லாம் பின்தங்கி விடும். ஆகவே, தடையாணையை அகற்றி மாவட்ட அளவில் அந்த முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்கின்ற ஒரு செய்தியை இங்கே சொல்லிவிட்டு, கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் 7,000 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு பெரிய சான்று அது. 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இன்றைக்குத் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற பணியாளர்களுக்கு கடந்த 4, 5 மாதங்களாக சம்பளம் கிடையாது. அங்கே வசூலித்த வைப்பு நிதி கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், பேச்சை சீக்கிரம் முடியுங்கள். இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.



2008 ஜனவரி 28]

**திரு. எஸ். இராசசேகரன்:** அந்த வைப்பு நிதி உடனடியாகக் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைக் கூறி என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கரம்பக்குடி பகுதியைத் தனித் தாலுகாவாக ஆக்க வேண்டும், ஆலங்குடியில் ஒரு பேருந்துப் பணிமனை துவக்கப்பட வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களின் நலன் காப்பதையே தலையாய கடமையாகக் கொண்டு சமத்துவத்தையும், சமூக நீதியையும் இரு விழிகளாகக் கொண்டு நம் தமிழ் மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லுகின்ற இந்த அற்புதமான ஆளுநர் உரையை வரவேற்று என் உரையைத் துவக்குகிறேன்.

நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்பொழுதெல்லாம், ஏற்கெனவே வெண்மைப் புரட்சி, பசுமைப் புரட்சி ஆகியவற்றை ஏற்படுத்திய முதலமைச்சர் அவர்கள் 1989-லே 3-வது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இந்த நாட்டிலே தொழில் புரட்சியை உருவாக்க வேண்டும், அதன்மூலம் எண்ணற்ற வேலைவாய்ப்புகளைப் பெருக்கிட வேண்டுமென்ற நோக்கத்திலே அந்த முறை 24 மாதங்களிலே 25 தொழிற்சாலைகளை அமைத்த பெருமை அவர்களையே சாரும். அதற்குப் பிறகு, 1996-2001-லே அவர் டைடல் பார்க், சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்றெல்லாம் பல சாதனைகளைச் செய்து, நாங்குனேரி தொழில்நுட்பப் பூங்கா அறிவித்தும் அன்றைக்கு அது நிறைவேற்றப்படாமல், அதன் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அவர்களாலும் நிறைவேற்ற முடியாமல் இன்றைக்கு அங்கே அந்தத் தொழில்நுட்பப் பூங்காவை 2,500 ஏக்கர் பரப்பளவிலே சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவித்து, துவங்கவிருக்கிறார்கள். அதைப்போலவே, மதுரையிலே தகவல் தொழில்நுட்பப் பூங்கா, கங்கைகொண்டானிலே பூங்கா என்றெல்லாம் மிக அற்புதமான திட்டங்களை கடந்த 20 மாத காலத்தில் செய்திருக்கின்றார்கள்.

[திரு. க. சுந்தர்] [2008 ஜனவரி 28

பிற்பகல் 1-15

இங்கே பேசிய நம்முடைய எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் எல்லாம் அரசாங்கத்தை எந்தக் குறையும் சொல்ல முடியாமல், இந்த நாட்டிலே ஏதோ தீவிரவாதம், பயங்கரவாதம், வன்முறை, அமைதி இல்லை, சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களால் இங்கே அதைத் தவிர வேறு எதையும் பேச முடியவில்லை. இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் இப்போது வருகின்றன. ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப்போல, 15,083 கோடி ரூபாய் இப்போது தமிழ்நாட்டிலே முதலீடு செய்யப்படுகிறது என்று சொன்னால், இந்தத் தமிழ் மாநிலம் அமைதியாக இல்லாவிட்டால் அந்த முதலீடுகள் எல்லாம் இங்கே வந்து சேருமா? (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் தொடங்க முனைவோர்கள் எல்லாம் இங்கே தொழிலைத் தொடங்க முனைவார்களா என்பதை நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 10 ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் கலைஞர் அவர்களால் கார் உற்பத்தி தொடங்கப்பட்ட Hyundai கார் தொழிற்சாலை நிறுவனம் இப்போது 4 ஆயிரம் கோடி ரூபாயிலே தன்னுடைய பெரும் விரிவாக்கத்தை நம்முடைய தமிழ்நாட்டிலே செய்யவிருக்கிறது. அதைப்போலவே, Ford கார் தொழிற்சாலையும், தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது இன்றைக்கு 1,800 கோடி ரூபாயிலே தன்னுடைய பெரும் விரிவாக்கத்தை நம்முடைய தமிழ் மாநிலத்திலே துவக்குகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டிலே சுமுகமான நிலைமை, அமைதியான நிலைமை இல்லாவிட்டால் இதைத் துவக்குவார்களா என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசினுடைய புதிய தொழிற் கொள்கைக்கும், இந்த மாநிலத்தின் அமைதித் தன்மைக்கும் சான்றாகத்தான் இந்த தொழிற்சாலைகள் எல்லாம் இப்போது வந்திருக்கின்றன. இன்னும்கூட, தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அதனுடைய அடையாளமாகத்தான் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக கடந்த 1996-லே ஆட்சிப் பொறுப்பெற்ற பிறகு, இந்த சட்டப் பேரவையிலே நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம், "நாங்கள் எல்லாம் நன்றி சொல்கின்றபோது வீட்டுமனைப் பட்டாக்கள் இல்லாத ஒரு நிலைமை, அதாவது, ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களிலே 10 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் வீடுகட்டிக் கொண்டிருக்கிறோம், எனவே எங்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று மக்களுக்கு நன்றி சொல்லுகின்றபோது சொன்னார்கள்" என்று சொன்னதையடுத்து, கடந்த 2000 ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு சிறப்பு அரசாணையை வெளியிட்டார்கள். இங்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது அதைக் குறிப்பிட்டார்கள். ஆக, அப்போதே ஒரு சிறப்பு ஆணை போடப்பட்டு இலட்சக்கணக்கான மக்களுக்கு அந்த வீட்டுமனைப் பட்டாக்கள் எல்லாம் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் எதையுமே செய்யவில்லை. அந்தத் தடை அப்படியே இருந்த காரணத்தினாலே, ஆட்சேபகரமான புறம்போக்கிலே வீடுகட்டி இருந்தவர்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு மறுபடியும் அந்த வீட்டுமனைப் பட்டாக்கள் இல்லாமல் போய்விட்டன. எனவே, இப்போது ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் மறுபடியும் அதே சிறப்பாணையைப் போட்டு, இப்போது 2006-லே 76,622 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அஃதன்னியில், 1-4-2007-லிருந்து 31-3-2008 வரை 3 இலட்சம் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து, இப்போது 21-1-2008-லேயே அந்த இலக்கை, 3,00,001-வது பட்டா வழங்கிய ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞருடைய ஆட்சி என்பதை நான் இந்த நேரத்திலே பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த ஆட்சியிலே அரசாங்கத்தினுடைய கடமையில் அவர்கள் தவறிய காரணத்தால்—அதாவது வேலை நியமனத் தடைச் சட்டம் என்பதைப் போட்டு, வேலைவாய்ப்புகளையே குறைத்தார்கள். அரசினுடைய கடமை என்ன? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் கொடுப்பதுதான். அரசாங்கத்தினுடைய கடமை வேலை கொடுப்பது. ஆக, இப்போது ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு என்று வழங்கி உண்ண உணவைக் கொடுக்கின்ற அரசு தலைவர் கலைஞர் தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, பொங்கல் அன்றைக்கு ஏழையெளிய மக்களுக்கு 3 கோடியே, 28 இலட்சம் பேருக்கு வேட்டி, சேலை வழங்கி உடையைக் கொடுக்கின்ற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞருடைய அரசு. இப்போது பட்டாவையும் கொடுத்துவிட்டார்கள். ஆக, வேலைவாய்ப்பையும், தொழிற்புரட்சியையும் ஏற்படுத்தி, இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப்போல 1,37,000 பேருக்கு



2008 ஜனவரி 28] [திரு. க. சுந்தர்]

[திரு. க. சுந்தர்] [2008 ஜனவரி 28

இப்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-20*

அதுவல்லாமல், அரசுத் துறையிலே 2,38,000 பேருக்கு மேலாக இன்றைக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆக, இப்படி பல்வேறு விதமான சாதனைகளையும், திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற ஓர் அரசாக தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு இப்போது திகழ்ந்துகொண்டிருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், 2,500 கிராம நிர்வாக அலுவலர்கள் நியமனம். இன்றைக்கு அரசினுடைய பல்வேறு திட்டங்களையெல்லாம் பொதுமக்களிடையே விரைந்து கொண்டுசெல்வதற்கு அது ஏதுவாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஒரு தங்கக் கோபுரம் என்று சொன்னால், அதிலே கோபுரக் கலசமாக விளங்குவது நம்முடைய உள்ளாட்சித் துறை என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தளபதி அவர்கள் அந்த உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பேற்றதற்குப் பிறகு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அதற்கடுத்த ஆண்டு அனைத்து பேரூராட்சிகள் மறுமலர்ச்சித் திட்டம் என்று கொண்டு வந்து, இன்றைக்கு கிராமப்புறப் பகுதிகளிலே ஒரு பெரிய வளர்ச்சியை, ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதை யாராலும் மறுக்க முடியாது. அதுவும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ. 20 இலட்சம் என்று அளித்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் (மணியடிக்கப்பெற்றது) அந்தத் திட்டம் முடிவடைந்திருக்கின்றது. ஆக, இப்படியொரு பெரிய புரட்சியைச் செய்து பேரூராட்சிகளிலே வீடுகளில்லாத ஒரு நிலைமையைப் போக்க இப்பொழுது ஜவஹர்லால் நேரு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கின்றார்கள். பல ஆயிரக்கணக்கான வீடுகளை இந்த கவர்னர் உரையிலே சொல்கிறபடி 6,700 கோடி ரூபாய் அளவிலே தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டமும் இணைந்து இப்பொழுது கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதை யாராலும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.



2008 ஜனவரி 28] [திரு. க. சுந்தர்]

தலைவர் கலைஞர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 20 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தர், உரையை முடியுங்கள். இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும்.

**திரு. க. சுந்தர்:** பழங்குடியின மக்களுக்கு ஒரு சதவிகிதம் இட ஒதுக்கீட்டை வழங்கினார்கள். (குறுக்கீடுகள்) 1989-லே மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு, பழங்குடியின மக்களுக்கு ஒரு சதவிகித இட ஒதுக்கீடு, கடந்த ஆண்டு சிறுபான்மையின மக்கள் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீடு, கிறிஸ்தவர்களுக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீடு, தற்போது அருந்ததியினருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தர், நேரமாயிற்று, உட்காருங்கள். அடுத்து இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம், கொஞ்சம் பொறுங்கள்.

**திரு. க. சுந்தர்:** இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்று உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம், ஆட்சிக் கட்டிலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் மனதில் முதல்வராக உள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

கவர்னர் உரையில் ஏதாவது புதிய திட்டங்கள் உள்ளனவா என்று பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் எந்தவொரு புதிய திட்டமும் இல்லை. சென்ற ஆண்டு உரையின் மறு பதிப்பாகத்தான் உள்ளது.

[திருமதி செல்வி ராமஜெயம்] [2008 ஜனவரி 28

அரைத்த மாவையே அரைத்ததுபோல் உள்ளது. சென்ற ஆண்டு அக்டோபர், டிசம்பர் மாதங்களில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டது. குறிப்பாக, கடலூர் மாவட்டம் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானது. நெல், மணிலா, மக்காச்சோளம், வெற்றிலை போன்ற சாகுபடிப் பயிர்கள் முழுவதும் பாதிக்கப்பட்டன. வீடுகளில் வெள்ளம் புகுந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டன. ஆனால் இந்த அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவில்லை. அதிகாரிகள் கண் துடைப்பிற்காக ஒரு முறைக்கு இரு முறையாகக் கணக்கெடுத்துச் சென்றதோடு முடிந்துவிட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீங்கள் உரிய நிவாரணம் எப்போது வழங்கப் போகிறீர்கள்? மாவட்ட அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அனைவரும் வந்து பார்வையிட்டுச் சென்றதோடு எங்களுடைய மாவட்டத்தினுடைய மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மேலும், இந்திரா காந்தி தேசிய முதியோர் பாதுகாப்புத் திட்டத்திற்கு 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உதவித்தொகை அளிப்பதற்கு மத்திய அரசால் திட்டம் போடப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அரசாணை உள்ளது. உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பயனாளிகளின் பெயர் இடம் பெறவில்லை. ஆதலால், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலை மறு முறை ஆய்வு செய்யவேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தரப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளீர்கள். ஆனால் யாருக்கும் இரண்டு ஏக்கர் நிலம் முழுவதும் கொடுத்ததாகத் தெரியவில்லை. தி.மு.க.-வினருக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறதுபோலும். ஆனால், எனது தொகுதிக்குட்பட்ட தாசோபேட்டை ஊராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர் தனது உறவினரான கலையரசன் S/o. பரதேசி, புனிதா



W/o. கலையரசன் ஆகிய இருவருக்கும்—இரண்டு பேரும் கணவன், மனைவி—அவர்கள் இரண்டு பேருக்கும் கடற்கரை, வெள்ளாற்றங்கரை ஓரமாக தலா ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. கலையரசனுக்கு வழங்கப்பட்ட இடம் அங்குள்ள மீனவர்கள் வலைகளை காயவைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இடம். அது பொது இடம். அந்த இடத்தில் தற்போது இறால் குட்டை வெட்டி இறால் வளர்க்கப்படுகிறது. கலையரசனுடைய மனைவி புனிதாவிற்கு வழங்கப்பட்ட இடம் சுடுகாடு. அந்தச் சுடுகாட்டில் தற்போதும் பிணங்களை எரித்தும், புதைத்தும் வருகிறார்கள். பொது மக்கள் கூறியதன்பேரில் அந்த இடத்தை நான் நேரில் சென்று பார்வையிட்டு, அதிகாரிகள் இந்தப் பட்டாவை உடனடியாக இரத்து செய்யவேண்டும் என்று R.D.O.-விடம் சொன்னேன். Collector-இடம் சொன்னேன். ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ** இப்போதும் அங்கே பிணம் எரிப்பது எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. சுடுகாட்டையே பட்டா போட்டு கொடுத்திருக்கிற அந்த இடத்தை எடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) யாருமே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்து அந்தப் பட்டா இரத்து செய்யப்படும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் பேசும்போது ஆதாரத்தோடு பேசவேண்டும். பொய்க் குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது, சரியா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆதாரம் இல்லாத ஒரு குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். ** என்று சொன்னால் அந்தக் குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்ளலாம். இல்லையென்றால் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திருமதி செல்வி ராமஜெயம்:** நீங்கள் உரிய விசாரணை பண்ணுங்கள். நான் சொன்னது தவறாக இருந்தால் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வரி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திருமதி செல்வி ராமஜெயம்:** விசாரணை செய்த பிறகு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** கடந்த 2004 சுனாமியால் தமிழகமே பாதிக்கப்பட்டபோது சுனாமியைவிட வேகமாக நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தித் தன்னுடைய நிர்வாகத் திறமையால் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் உள்ளிட்ட உலகத் தலைவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றவர் எங்களுடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்தில் புயல் வேகத்தில் நடைபெற்ற நிவாரணப் பணிகள் தற்போது ஆமை வேகத்தில்கூட நடைபெறவில்லை என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசுமூலம் வீடு கட்டித் தருவதற்கு அதிகாரிகள்மூலம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னுக்குப்பின் முரணான, தவறான கருத்துகளையே பேசி வருகிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** அதற்கடுத்து சுனாமி பணிகளைப் பற்றி இவர்கள் பேசுகிறார்கள். இவர்கள் ஆட்சியில் இருக்கும்போது சுனாமி பேரழிவு ஏற்பட்டு கடற்கரை மக்கள் உறவுகளை, உடைமைகளை பறிகொடுத்தார்கள். சுனாமி பேரழிவு 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் ஏற்பட்டது. அப்போது மீனவ மக்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கண்ணீரும் கம்பலையுமாக கடற்கரையிலே வாழ்ந்துவந்தார்கள். அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள் எந்தவிதமான உதவிகளையும் உரிய முறையில் செய்யத் தவறிய காரணத்தால் (குறுக்கீடுகள்) தொண்டு நிறுவனங்கள் (குறுக்கீடுகள்) அவசரப்பட வேண்டாம். நான் பேசுவதில் (மணியடிக்கப்பெற்றது) தவறு இருக்குமேயானால் நீங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். கொஞ்சம் அமைதியாக இருங்கள். இதோ பாருங்கள், திரு. விஸ்வநாதன், திரு. ஜெயக்குமார் இடம் மாறி அங்குபோய் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடு) திரு. செந்தமிழன், இடத்திற்குச் சென்று உட்காருங்கள். போங்கள். சொன்னால் கேளுங்கள். இடத்திற்குப் போங்கள் முதலில்.

பிற்பகல் 1-30

பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) No.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** சுனாமி வந்தபோது, கடற்கரை ஓரம் எங்கும் தொண்டு நிறுவனங்கள் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றி வந்தன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. No. திரு. ஜெயக்குமார், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** சுனாமி வந்தபோது தொண்டு நிறுவனங்கள் பணியாற்றி வந்திருக்கின்றன. ஆனால், இன்றைக்கு சுனாமிக்குப் பிறகு, 2004-ல் ஏற்பட்ட சுனாமிக்கு அடுத்து, 2006 ஆம் ஆண்டு தமிழக மக்களின் பேராதரவோடு ஏற்பட்டிருக்கின்ற நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞருடைய ஆட்சியிலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ மக்கள் ஒரு நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றார்கள். குறிப்பாக, கடற்கரையிலே வாழ்கின்ற மீனவ மக்களும், பிறரும் படிக்கின்ற பள்ளியிலே: . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) செய்ததை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) செய்ததை நான் சொல்கிறேன். பொறுமையாகக் கேட்க

வேண்டும். 1 ஆம் வகுப்பிலேயிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மீனவப் பிள்ளைகளுக்கு, கலைஞருடைய அரசு மாதம் 300 ரூபாய் வழங்கி வருகிறது. இதே, அன்றைக்கு ஆட்சியிலே இருந்த உங்களுடைய அரசு—நீங்கள் வழங்கினீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்விக் கட்டணமாக மட்டும் 47 கோடி ரூபாயை கலைஞருடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதே மாதிரி, இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்தை தலைமையேற்று வழி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றலாளர் அண்ணன் தளபதியார் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது சுனாமி சுழற்சி நிதி என்ற பெயரில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 107 கோடி ரூபாயை வழங்கி, மீனவ மக்களைக் காப்பாற்றி கரை சேர்த்திருக்கின்றார்கள். அதைப்போலவே, 110 கோடி ரூபாய்க்கு மீனவர்களுடைய உபகரணப் பொருட்களை வழங்கி சிறப்பித்திருக்கின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து, தவறான கருத்துகளை மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் கூற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம். (குறுக்கீடுகள்) No. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** அடுத்த Subject-க்குத்தான் போகிறேன். அடுத்த Subject-க்குப் போகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் இது சுனாமி சம்பந்தப்பட்டதுதான். உங்களிடம் வரவில்லை நான். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், இது ரொம்ப முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Only 2 minutes. (குறுக்கீடுகள்) No. இரண்டு நிமிடங்கள்தான் நேரம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** பேப்பரிலே வந்த செய்தி, ஒரு சிறுவனை மீட்க வேண்டும். அது முக்கியமான விஷயம். கேரளாவில் அந்த மாணவன், தாய் தகப்பனை இழந்திருக்கிறான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேப்பரிலே வருவதை என்னிடம் காண்பிக்காமல் இங்கு கொண்டுவந்து இப்போது வாசிப்பதே தவறு. முதலிலே, அதை உள்ளே வையுங்கள். (குறுக்கீடு)

**திருமதி செல்வி ராமஜெயம்:** முக்கியமான விஷயம். பேரவைத் தலைவர் அவர்களே. . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். என்னிடம் முதலிலே அனுமதி வாங்கிவிட்டுத்தான் பேப்பரைப் படிக்க வேண்டும்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** என்னுடைய தொகுதிக்குட்பட்ட என்.எல்.சி. அனல் மின் நிலையம் தொடங்குவதற்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கட்டும். (குறுக்கீடுகள்) சொல்லட்டும், சொல்லட்டும். என்னிடம் காட்டி, அனுமதி வாங்கிக் கொண்டுதான் சொல்ல வேண்டும்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** என்னுடைய தொகுதிக்குட்பட்ட என்.எல்.சி. அனல் மின் நிலையம் தொடங்குவதற்கு, இரண்டாவது அனல் மின் நிலையம் தொடங்குவதற்கு நில ஆர்ஜிதம் அரசு செய்து வருகிறது. எனது தொகுதியில் வளைமாதேவி, கத்தாழை, எறும்பூர், நெல்லுக்கொல்லை உள்ளிட்ட 69 கிராம மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக உள்ளதால், அந்த மக்கள் தங்களுடைய நிலங்களுக்குரிய நிவாரணம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தங்களை வருத்திக்கொண்டு, பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். சட்டமன்றத்தில் பலமுறை இதற்காகக் குரல் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த கூட்டத் தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்கள். ஆனால், எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த 69 கிராம மக்கள் கேட்கின்ற இழப்பீட்டுத் தொகை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி உலகையே உலுக்கிய சுனாமி ஆழிப் பேரலையால் இலட்சக்கணக்கான மக்கள் பலியானார்கள். இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், சுனாமியின் தாக்கம் அதிகமாக இருந்தது. வேளாங்கன்னியில் சுனாமி தாக்கியதில பலர் பலியானார்கள். அதில் தனது பெற்றோர் மற்றும் சகோதரர்கள் என ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் இழந்து அனாதையானவர்களில் விஜய் என்ற 12 வயது சிறுவன் ஒருவன். அனாதையான விஜய் அடைக்கலம் தேடி பல இடங்களுக்கு தஞ்சம் புகுந்தான். கடைசியில் அவன் ஒரு திருட்டுக் கும்பலிடம் மாட்டிக்கொண்டான். அந்தக் கும்பல் அவனை மிரட்டி அடித்து, உதைத்து பிச்சையெடுக்க வைத்ததோடு அவ்வப்போது திருட்டுத் தொழிலிலும் ஈடுபடுத்தியுள்ளது.

*பிற்பகல் 1-35*

தற்போது சபரிமலை சீசனை ஒட்டி பம்பையில் குவியும் பக்தர்களிடம் ஜேப்படி செய்ய திருட்டு, பிக்பாக்கெட் செய்வதற்கு விஜய்யை இந்தக் கும்பல் பம்பைக்கு அழைத்துச் சென்றுள்ளது. பம்பையில் சந்தேகத்திற்கு இடமாக சுற்றித் திருந்த விஜய்யை போலீசார் மடக்கிப் பிடித்து விசாரித்தபோது விவரம் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து விஜய்யை திருட்டுக் கும்பலில் ஈடுபடுத்திய 4 பேரை கைது செய்திருக்கிறார்கள். இந்த விஜய் இப்போது சபரிமலையில் உள்ள ஆசிரமத்தில் இருக்கிறான். அவனைத் தமிழ்நாட்டிற்கு மீண்டும் கொண்டு வரவேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தாய், தகப்பனை இழந்தவர்களுக்கு ரூபாய் 5 இலட்சம் என்று டெபாசிட் செய்தார்கள். அந்தமாதிரி இந்தச் சிறுவனுக்கும் ரூபாய் 5 இலட்சம் டெபாசிட் செய்து அவனுக்கு மறுவாழ்வு அளிக்குமாறு இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எங்களுடைய கடலூர் மாவட்டத்தில் பல அரசு மருத்துவமனைகளில் மருத்துவர் இல்லாததால் மக்கள் மிகுந்த வேதனைக்கு உள்ளாகிறார்கள். பல மருத்துவர்கள் உரிய நேரத்திற்கே வருவதில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் திட்டக்குடி, கடலூர், ஸ்ரீமுஷ்ணம், வயலாம்பூர் உள்ளிட்ட பல மருத்துவமனைகள் இவ்வாறுதான் உள்ளன. ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் உத்தரவிட்டு, பணி முடிவடைந்தும் திறக்கப்படாததைக் கண்டித்து மாண்புமிகு அம்மா அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். உட்காருங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** ஆர்ப்பாட்டம் அறிவித்த உடனே திறப்பதாக அறிவித்தது. இதுநாள் வரை மருத்துவர்கள் உள்ளிட்ட பணியிடங்கள்கூட அனுமதிக்கப்படவில்லை. உடனடியாக இதுபோன்ற மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.





*பேரவை மீண்டும் நாளை (29-1-2008) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

16. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் விற்பனைக் கூடத்தைச் சேர்ந்த அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதிக்குள் அமைந்துள்ள வடக்கனந்தலில் துணை விற்பனைக் கூடம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேளாண் விளைபொருட்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும் 30.11.2006 ஆம் நாளிட்ட வேளாண்மைத் (AM—2) துறையின் 330 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 54 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

18. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

19. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (ம... ...56) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெ...

20. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[2008 ஜனவரி 28

21. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை. (2007-2008)

18. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2007-2008)

19. பொதுக் கணக்குக் குழுவின் எழுபதாவது அறிக்கை. (2007-2008)

20. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2007-2008)

21. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2007-2008)

22. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2007-2008)

23. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2007-2008)

D
V211, 31' 868
P08.39.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228095
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner
of Stationery and Printing,
Chennai-600 002.